GOKULAM


மார்ச் '99 ரூ. 6/-

கோகுலம்



நோட்ஸ் இருக்கு, சமாளிக்கலாம்!


இரண்டு படங்களுக்கும் இடையேயுள்ள ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



விடை: 1. சிறுமியின் சடை, 2. சிறுமியின் வளையல், 3. சிறுவன் பல், 4. குக்கர் வெயிட் 5. அப்பாவின் சிரிப்பு

வரைந்து பழகுங்கள்!

பிருந்தாவனம்





கோகுலம்

மார்ச் '99 ♦ மலர் : 17 ♦ இதழ் : 2

அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

மார்ச் மாதம் என்றாலே பரீட்சை மாதம் என்ற நினைவு வந்து விடும். என்னதான் நன்றாகப் படித்திருந்தாலும் கூட கொஞ்சமாவது கவலையும் 'டென்ஷ'னும் இல்லாமல் போகாது!

பரீட்சை எழுதி பாஸ் பண்ணுவதில் பல ரகம் உண்டு. சிலர் பத்துப் பதினைந்து கேள்விகளுக்கு விடைகள் தயாரித்துக் கொண்டு போவார்கள். அதில் ஏழெட்டு கேள்விகளாவது வினாத்தாளில் இடம்பெறும், ஐம்பது மார்க் வாங்கி விடலாம் என்று அதிர்ஷ்டத்தை நம்புவார்கள். வேறு சிலர் நாலைந்து வருஷ வினாத்தாள்களை எடுத்து வைத்துக் கொண்டு, அவற்றுக்கு விடைகள் தயாரித்துப் பழகுவார்கள். இன்னும் சிலர் புத்தகத்தையே தொட மாட்டார்கள். 'நோட்ஸ் இருக்க, புத்தகம் எதற்கு?' என்ற முடிவுடன் நோட்ஸில் தரப்பட்டுள்ள வினா - விடைகளை உருப்போடுவார்கள். கடைசியாக, பாடப் புத்தகத்தைப் படித்துப் புரிந்து கொள்ள முயற்சி செய்பவர்களும் உண்டு.



கடைசி ரகத்தில் அதிகம் பேர் இருக்க மாட்டார்கள். ஆனால் இவர்கள்தாம் நிஜமான மாணவர்கள். பாடப் புத்தகத்தில் புரியாத இடங்களை தயக்கமின்றி ஆசிரியரிடம் கேட்டு விளக்கம் பெற்று அறிவைப் பெருக்கிக் கொள்வதுதான் சிறந்த படிப்பு முறை.

ஆனால் பல பாடப் புத்தகங்கள் எளிமையாகவும் சுவாரஸ்யமாகவும் அமைவதில்லை. மாணவர்கள் பலர் பாடப் புத்தகங்களை ஒதுக்கிவிட்டு நோட்ஸ்களைச் சரணடைவதற்கு இதுவும் ஒரு காரணம் - முக்கிய காரணம். எந்தப் பாடத்தையும் படிப்பதற்கு சுவையாகவும் படித்தவுடன் புரிகிற மாதிரி எளிமையாகவும் அமைப்பது சாத்தியமே.

இந்த விஷயத்தில் கல்வியாளர்கள் கொஞ்சம் கவனம் செலுத்தினால் நமது மாணவ மாணவியர் பரீட்சைக்குப் பயப்படமாட்டார்கள். படிப்பதை கடைசி நிமிஷம் வரை ஒத்திப் போடமாட்டார்கள். நோட்ஸ்களை நாட மாட்டார்கள். உருப்போட அவசியம் இல்லை என்றும் மனதில் விஷயத்தை வாங்கிக் கொண்டால் போதும் என்றும் உணர்வார்கள்.

ஆனால் பூனைக்கு யார் மணி கட்டுவது?

அன்புடன்

இ. ராஜேந்திரன்,
ஆசிரியர்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.

- பாரதியார்.

கோகுலம்


மார்ச் 1999

இந்த இதழில்...











பத்தாவது இடமா, ரவியா?




வகுப்பில் –
என்ன ரவி, அரையாண்டுத் தேர்வில் நீ பத்தாவது இடத்துக்கு இறங்கிட்டியே, எனக்கே நம்ப முடியலையே!
அடக் கடவுளே!
மாலையில் நண்பன் விஜய் –
என்ன ரவி இப்படிப் பண்ணிட்டே? பத்தாவது இடமா– நீயா?
இப்ப என்ன பண்ணச் சொல்றே?
போடா, வருத்தமா இருக்கு.
உன் வருத்தம் புரியுது..
சரி. ..ம்.. நான் மறுபடியும் முதல் இடம் வருவேன்.
வீட்டில் அம்மா –
ரவி வீட்டில் இல்லையா? டீ.வி. போடா



வித்யா ரவியைக் கூப்பிட்டாள்
ரவி வந்து பாரு, உனக்குப் பிடிச்ச கார்ட்டூன் நெட் ஒர்க்!
நான் வரலை. இனி டீ.வி. பார்க்காம பாடம் படிக்கப் போறேன். பழைய படி முதல் இடம் வாங் கணும்!
டீ.வி. பாத்தா தப்பில்லே ரவி! எப்பவும் அதே கதின்னு கிடக்கக் கூடாது.
இப்பவாவது புத்தி வந்ததே!
புரிஞ்சுக் கிட்டேன் மா!



பேசும் கார்கள்!

பேசும் திறன் கொண்ட கம்ப்யூட்டர் கார்களை ஜப்பான் நிறுவனம் தயாரித்துள்ளது. கம்ப்யூட்டரை காரில் பொருத்தி சாலை வரைபடங்கள் மற்றும் சட்டதிட்டங்களை இணைத்து விட்டால் போதும். டிரைவர்களுக்குச் சரியான பாதையைக் காட்டும் இக் கம்ப்யூட்டர்.


இந்தக் கார் கம்ப்யூட்டரில் தொலை



பேசி, ஈமெயில் வசதியும் உண்டு. ஈமெயிலில் வந்துள்ள செய்திகளை உரத்த குரலில் வாசிக்கும் கம்ப்யூட்டர்.

பறவைகள் சாகசம்!

சென்னையில் இருக்கும் எம்.ஜி.எம். பொழுது போக்கு உலகத்தில் அபூர்வமான வெளிநாட்டுப் பறவைகள் வந்துள்ளன. இந்தப் பறவைகள் தொலை பேசி அழைப்பிற்கு பதில் சொல்லுதல், மிமிக்ரி செய்தல், கூடைப்பந்து விளையாடுதல், சைக்கிள் ஓட்டுதல் என பல சாகசங்களையும் செய்கின்றன. பயிற்சியளிக்கப்பட்ட இப்பறவைகள் சிங்கப்பூரில் இருக்கும் ஜுராங் பறவை பூங்காவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளன.



நினைவு!

பிரிட்டிஷ் இளவரசி டயானா நினைவாக இங்கிலாந்து அரசு, டயானா உருவம் பொறிக்கப்பட்ட நாணயத்தை வெளியிட்டு உள்ளது. நிக்கலில் செய்யப்பட்ட இந்த நாணயத்தின் ஒருபுறம் டயானாவின் உருவம் மற்றொருபுறம் இரண்டாம் எலிசபெத் ராணியின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன.



மாயம்!


மகாராஷ்டிர மாநிலம் கோண்டே கான்

கிராமத்தில் தாமன் கங்கா என்ற ஆறு ஓடுகிறது. ஆற்றுப் பகுதியில் திடீரென நில வெடிப்பு ஏற்பட்டது. இதனால் ஆற்றின் ஒரு கிலோ மீட்டர் நீளம் மாயமாக மறைந்து பூமிக்குள் புதைந்து விட்டது. இப்பகுதியில் பூகம்பம் ஏற்படும் அபாயம் இருப்பதாக மக்கள் அஞ்சுகின்றனர்.

மருந்து


இஸ்ரேலில் காணப்படும் ஒரு வகை ராட்சஸ தேளிலிருந்து எடுக்கப்படும் ரசாயனப் பொருள் மூளைப் புற்று நோய் செல்களை அழிக்கவல்லதாம். இந்த ஆராய்ச்சியை அமெரிக்காவில் உள்ள அலபாமா பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் குழு கண்டுபிடித்துள்ளது.

அதே போல் பாம்பு விஷத்தில் உள்ள புரோட்டீன், ரத்தம் உறைவதைத் தடுக்கிறதாம்! இதனால் பக்கவாதம், இருதய நோய்களுக்கு சிகிச்சையளிக்க முடியும் என்கிறார்கள்!




மகிழ்ச்சி!

நம் நாட்டின் தலைநகரான டில்லியிலிருந்து பாகிஸ்தானில் உள்ள லாகூருக்கு பஸ் போக்குவரத்து ஏற்பட்டுள்ளது. டில்லியிலிருந்து 650 கி.மீ. தொலைவில் இருக்கும் லாகூருக்கு பதினான்கு மணி நேரத்தில் சென்றடையலாம். இரு நாட்டு மக்களும் இதை வரவேற்றுள்ளனர்.




புதிய கோள்!

பால் வெளி மண்டலத்தின் மத்தியில் புதிய கோள் ஒன்று இருப்பதாக



வானியல் வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர். பூமியின் அளவை ஒத்த இக்கோள் கடந்த ஜூலை மாதம் நியூசிலாந்தில் சக்தி வாய்ந்த மைக்ரோ லென்ஸ் உதவியுடன் கண்டறியப்பட்டுள்ளது. இதில் உயிரினங்கள் வாழக்கூடிய சாத்தியக் கூறு உள்ளதா என விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பெண்கள் அதிகம்!



கேரள மாநிலத்தில் 37.5 லட்சம் மக்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர். இதில் பெண்கள் 20.63 லட்சம், ஆண்கள் 16.91 லட்சம். ஆண்களைக் காட்டிலும் 3.7 லட்சம் பெண்கள் அதிகமாக வேலையை எதிர்பார்த்துள்ளனர். அரசாங்கம் ஆண்டிற்கு 1.2 லட்சம் பேருக்கு வேலை அளித்தாலும் 1.85 லட்சம் பேர் புதிதாக வேலை கேட்டு பதிவு செய்கின்றனர்!

ஈற்று வாக்கியப் போட்டியில் பரிசு பெற்ற கதை

நம்பிக்கை

உமாவின் குடும்பமே பக்திக் குடும்பம். அவள் தந்தை, தாய், சகோதரி அனைவருமே நாள் தவறாமல் கோவிலுக்குச் சென்று வருபவர்கள்.

உமாவின் வகுப்புத் தோழி பாமாவோ பகுத்தறிவுக் குடும்பத்தில் பிறந்து அந்தச் சூழ்நிலையிலேயே வளர்ந்தவள். அவள் முயற்சியையே நம்புபவள், கடவுள் நம்பிக்கை இல்லாதவள்.

உமாவும் பாமாவும் கடவுள் கொள்கை பற்றி எத்தனையோ தர்க்கம் செய்திருக்கிறார்கள். ஆண்டு இறுதித் தேர்வு நெருங்கிக்கொண்டிருந்தது. உமா, ஒருநாள், "பாமா, நான் கடவுளிடம் உனக்காகவும் சேர்த்தே வேண்டிக் கொள்கிறேன். இருவரும் தேர்வில் நல்லபடியாகத் தேர்ச்சி பெறுவோம்" என்றாள். பாமாவோ, "நாம் நன்றாகப் படித்தால்தான் பாஸ் பண்ண முடியும், கடவுள் வந்து நமக்காகப் பரீட்சை எழுத மாட்டார்" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.



உமா இந்தமுறை பாமாவைத் தன் வழிக்குக் கொண்டு வந்தே தீருவது என்ற உறுதியுடன் ஒரு திட்டம் தீட்டினாள். ஒரு நாள் உமா, "பாமா! எனக்காக ஒருமுறை நீ எல்லையிலுள்ள கோவிலுக்கு நாளை அதிகாலை ஐந்து மணிக்குச் சென்று பிரார்த்தனை செய்து கொள். நீயே தெய்வம் இருப்பதை அறிந்து, ஒப்புக் கொள்ளவும் செய்வாய்" என்றாள்.

மறுநாள் அதிகாலை ஐந்து மணிக்கு பாமா, உமா கூறியபடி அம்மன் கோவில் சன்னதியில் கண் மூடி நின்றாள். அம்மன் சிலைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்த உமா, குரலைக் கொஞ்சம் மாற்றிக் கொண்டு, "குழந்தாய் பாமா! உன் தோழி காட்டிய நல்ல யோசனைபடி நடந்தாய். மகிழ்ச்சி. இப்பொழுது முதல் அவள் காட்டிய தெய்வ பக்தி வழியிலேயே நிலைத்திரு. உனக்கு எல்லா நலமும் உண்டாகும். தேர்வில் நீ முதல் மதிப்பெண் பெறுவாய்!" என்றாள். பாமாவும் பிரார்த்தனை முடிந்து வீடு திரும்பினாள்.

உமா, பாமாவிடம் பிரார்த்தனை பற்றி ஒன்றும் விசாரிக்கவில்லை. பாமாவும் தானாக ஒன்றுமே சொல்லவில்லை. இருவரும் இறுதித் தேர்வு எழுதினர். தேர்வு முடிவுகள் வெளியாயின. முயற்சியையும் தோழியின் நல்ல மனதையும் நம்பிய பாமா முதல் மதிப்பெண் பெற்றுத் தேறியிருந்தாள்.

பொய் சொல்லி நம்ப வைத்த உமா, படிக்காமல் கடவுள் மீது பாரத்தைப் போட்டு தான் முதல் மதிப்பெண் பெற்று விடுவோம் என நம்பியிருந்தாள்.

பரீட்சையில் உமா குறைந்த மதிப்பெண்களைப் பெற்றே தேறியிருந்தாள். இதை அறிந்த உமா செய்வதறியாது திகைத்து நின்றாள்.

– எஸ். காயத்ரி,
பன்னிரெண்டாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
நீடாமங்கலம்.

ஈற்றுவாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை



திருடிய பேய்!

இந்திரகிரி நாட்டை சுந்தரவர்மன் என்ற மன்னர் ஆண்டு வந்தார். அவருடைய ஆட்சியில் மக்கள் நிம்மதியாக வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள் அரசவைக்கு ஓடி வந்தார் ஒரு விவசாயி. அரசர் காரணத்தை விசாரித்தார்.

"அரசே! நேற்று இரவு என் வீட்டில் இருந்த அரிசி மூட்டைகள் திருடு போய் விட்டன" என்று வருத்தத்துடன் கூறினார் விவசாயி.

"என்னது! நம் நாட்டில் திருட்டா? ம்... அமைச்சரே, நாடு முழுவதும் காவலர்களை நிற்கவைத்து கண்காணியுங்கள்" என்றார் அரசர்.

அரசர் உத்தரவுப்படி நாடு முழுவதும் காவலர்கள் நிறுத்தி வைக்கப்பட்டார்கள்.

நள்ளிரவில் ஒரு வணிகரின் வீட்டு மரத்தில் கிளைகள் அசைவது தெரிந்தது. காவலர்கள் ஓடிச் சென்று மரத்தைச் சுற்றி நின்றனர்.

அங்கு ஒரு பேய் ஆடிக் கொண்டிருந்தது. பேயைப் பார்த்த காவலர்கள் பயந்து ஓட்டம் பிடித்தனர்.

மறுநாள் அரசருக்கு வணிகரின் வீட்டில் திருட்டுப் போன விஷயமும் பேய் நடமாடிய விஷயமும் கிடைத்தது.

அரசர் யோசனை செய்தார். சிறிது நேரம் கழித்து, "அமைச்சரே! இன்று இரவு நானும் நீங்களும் மாறுவேடத்தில் நகர் உலா போகலாம்" என்றார். அமைச்சரும் சம்மதித்தார்.

அன்று இரவு அரசரும் அமைச்சரும் பேய் வேடம் போட்டுச் சென்றார்கள். அப்போது ஒரு வீட்டுக் கதவைத் திறந்து கொண்டிருந்தது பேய்.

அரசரும் அமைச்சரும் மெதுவாகச் சென்று அந்தப் பேயைத் தொட்டனர். அவ்வளவுதான்! அரசரின் பேய் வேடத்தைக் கண்டு அந்தப் பேய் பயந்து அலறியபடி ஓட்டம் பிடித்தது.

சத்தம் கேட்டு காவலர்களும் மக்களும் பேயைத் துரத்திப் பிடித்தனர்.

பேயின் வேஷத்தை மக்கள் கலைத்தனர். அரசரும் அமைச்சரும் தங்கள் வேஷத்தைக் களைய பேய்யாக வந்த அந்தத் திருடன் திகைத்து நின்றான்!

— த. சாந்தகுமார், செல்லம்மாள் வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளி, திருவள்ளூர்.



புதுப்பட்டியில் வயதான குரங்கு ஒன்று வசித்து வந்தது. அது, ஊருக்குள் வீடு வீடாகச் சென்று, சிறு சிறு வேலைகளைச் செய்து வாழ்ந்து வந்தது.

அதன் கையில் கொஞ்சம் பணம் சேர்ந்தது. அதைக் கொண்டு, பால் பாயசம் செய்து சாப்பிட விரும்பியது. உடனே, கடைத் தெருவுக்குப் போய், அரிசி நொய், சர்க்கரை, பால், நெய், ஏலக்காய் ஆகியவற்றை வாங்கி வந்தது.

தன் குடிசையில் அடுப்பைப் பற்ற வைத்தது. அதன் மீது, ஒரு பெரிய சட்டியை ஏற்றிப் பால் பாயசம் செய்யத் தொடங்கியது.

பாயசத்தின் நறுமணம் ஊரெங்கும் பரவியது. அதை நுகர்ந்த ஒரு பூனைக்கு ஆசை ஏற்பட்டது. உடனே, குரங்கின் குடிசைக்கு வந்து, வாயிற்படி அருகில் நின்று, உள்ளே எட்டிப் பார்த்து, "குரங்காரே! இன்று நீங்கள் என்ன தயாரிக்கிறீர்கள்? வாசனை மூக்கைத் துளைக்கிறதே...!'' என்றது.


குரங்கு மிகவும் நேர்மையானது. எனவே, உண்மையைச் சொன்னது, "பால் பாயசம் செய்து கொண்டிருக்கிறேன்."

உடனே பூனைக்கு நாக்கில் நீர் ஊறியது. எனவே, வாயிற்படி அருகிலேயே உட்கார்ந்து விட்டது. சற்று நேரம் ஆயிற்று. இருந்தாலும் பூனைக்கு அவசரம். "என்ன குரங்காரே! பாயசம் தயாராகி விட்டதா?'' என்றது.

"இல்லை பூனையாரே! அரிசி நொய் இன்னும் வெந்தபாடில்லை...'' என்ற குரங்கு, "கொஞ்சம் பொறு... பால் பாயசம் தயாரானதும் உனக்கும் ஒரு பங்கு தருகிறேன்." என்றது.

மகிழ்ச்சி அடைந்த பூனை, குடிசைக்குள் நுழைந்து, கதவோரமாக உட்கார்ந்து விட்டது. ஆனாலும் பொறுமையாகக் காத்திருக்க முடியவில்லை.

ஜானகிமணாளன்



சூடு கண்ட பூனை!

பாயசத்தை உடனே சாப்பிட்டுவிட வேண்டும் என்ற அவசரம், "குரங்காரே! எப்போதுதான் உங்கள் பாயசம் தயாரா கும்?" என்றது.

"இதோ ஆகி விட்டதே..." என்ற குரங்கு, அடுப்பிலிருந்து பாயசச் சட்டியைக் கீழே இறக்கி வைத்தது. கூடவே, "இப்போது பாயசம் மிகவும் சுடும்.. கொஞ்சம் ஆறட் டும்.. பிறகு உனக்கொரு பங்கு தருகிறேன்.." என்றது.

பூனைக்கு அளவில்லாத மகிழ்ச்சி. "வாசனையே மூக்கைத் துளைக்கிறதே...! ருசி இன்னும் எப்படி இருக்கும்!" என்று அதிசயித்தது.

உடனே குரங்கு, "சரி... இது ஆறட்டும். அதற்குள் நீ உன் வீட்டுக்குப் போய், தட்டு ஒன்றை எடுத்து வா... அதில் ஊற்றுகி றேன்.. நீ நக்கிச் சாப்பிட வசதியாக இருக் கும்... என்னிடம் ஒரே ஒரு தட்டுதான் உள்ளது" என்றது.

பூனை பாயசத்தைப் பேராசையுடன் பார்த்தது. சட்டியில் உள்ள மொத்தத்தை யும் தானே சாப்பிட வேண்டும் போல் இருந்தது. அதற்கு என்ன வழி? பூனை மனதுக்குள் திட்டமிட்டது. எனவே குரங் கிடம், "என்னிடம் தட்டு ஏது? சட்டி கூட இல்லையே... இருந்தால், இப்படியா உங்க ளிடம் வந்து பாயசம் கேட்பேன்? நானே தினம் தினம் வைத்துச் சாப்பிட மாட் டேனா?" என்றது.

"சரி... அது போகட்டும்" என்ற குரங்கு, "இப்போது என்ன செய்யலாம்?" அதைச் சொல்..." என்றது.

"குரங்காரே! ஒண்ணு செய்யலாம். நீங்கள் உங்கள் தட்டில் சாப்பிடுங்கள்... சட்டியோடு என்னிடம் கொடுத்து விடுங் கள்.." என்றது பூனை.

குரங்கிற்கு அதில் உடன்பாடு இல்லை. "அது முடியாது. உனக்குப் பாத்திரத் தோடு தரமாட்டேன். ம்... சரி... நீ கொல்லைப் பக்கம் உள்ள கிணற்றடிக்குப் போ.... அங்கு உள்ள வாழை மரத்திலிருந்து, ஒரு இலையை நறுக்கிக் கொண்டு வா... அதில் உனக்குப் பாயசம் ஊற்றுகிறேன்... நக்கிச் சாப்பிடலாம் நீ" என்றது.

"ரொம்ப சரி" என்ற பூனை, "இதோ, இப்போதே போய் இலை பறித்து வரு கிறேன்" என்று கூறிக் கொண்டே கிணற்றடிக்கு விரைந்தது.

கிணற்றடியை அடைந்ததும் பூனையின் மனதில் ஒரு விபரீத எண்ணம் உதித்தது. அதன்படி, ஒரு பெரிய கல்லைத் தூக்க முடியாமல் தூக்கி கிணற்றுக்கு அருகில் போய் நின்று கொண்டு 'தொபுகடீர்' என்று அதைக் கிணற்றில் போட்டு விட்டு, ஓடிச் சென்று ஒளிந்து கொண்டது.

'பொத்' என்று ஏதோ கிணற்றில் விழும் ஓசையைக் கேட்ட அக்கம் பக்கத்து ஜனங்கள், 'கிணற்றில் யாரோ விழுந்து விட்டார்கள்' என்று பதறிப் போய்க் கிணற்றடியில் வந்து கூடினார்கள்.

குடிசைக்குள் இருந்த குரங்கின் காதிலும், அந்த ஒலி விழுந்தது. உடனே, பூனையைக் கிணற்றடிக்குத் தான் அனுப்பியது நினைவுக்கு வந்தது. உடனே அதுவும் ஓடி வந்தது.

அங்கு நடப்பதை எல்லாம் ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தது பூனை. குரங்கும் கிணற்றடிக்கு வந்து விட்டதைக் கண்டதும், தனது திட்டம் வெற்றி பெற்று விட்டதை எண்ணி மகிழ்ச்சி அடைந்தது. சட்டென்று வெளி வந்து குடிசைக்குள் ஓடியது.

சட்டியில் இருந்த பால் பாயசம், அதற்குள் குடிக்கும் பதத்தில் ஆறியிருந்தது. ஓசைப்படாமல், அத்தனை பாயசத்தையும் நக்கி நக்கிக் குடித்து விட்டு, அங்கிருந்து ஓடிச் சென்று கிணற்றடிக் கூட்டத்தோடு கலந்து கொண்டு விட்டது.

கூட்டத்தோடு கூட்டமாகப் பூனையும் நிற்பதைக் கண்ட குரங்கு நிம்மதி அடைந்தது. பிறகு அது தன் குடிசைக்குத் திரும்பியது.

அங்கு வந்து பார்த்த பிறகுதான், பூனை எல்லோரையும் ஏமாற்றி விட்ட உண்மை குரங்கிற்குப் புரிந்தது. சட்டியில் இருந்த பாயசம் முழுவதும் சுத்தமாக நக்கிக் குடிக்கப்பட்டிருந்தது கண்டு, அது அதிர்ச்சி அடைந்தது.

என்ன நடந்திருக்கும் என்பதெல்லாம் அதற்கு நன்கு புரிந்தது. ஆனால், இனி என்ன செய்ய முடியும்?

பாவம் அந்தக் குரங்கு! பட்டினியாகவே, அன்று படுக்க வேண்டியதாயிற்று. அதற்கு இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. ஒரு பக்கம், பூனையிடம் ஏமாந்து போய் விட்டோமே என்ற அவமானம். மற்றொரு புறம், அந்தப் பூனைக்கு எப்படி பாடம் கற்பிக்கலாம் என்ற யோசனை!

ஒரு நல்ல யோசனை தோன்றிய பிறகுதான், அதற்குத் தூக்கம் வந்தது.

அடுத்த நாள், குரங்கு மறுபடியும்

பள்ளியில் கணக்குப் பாடத்தில் மோசமாக இருந்த பத்து வயது சிறுமி ஒருத்தி திடீரென்று முதல் தர மாணவியாகி விட்டாள். அவள் அம்மாவுக்குப் பெரும் வியப்பு.

"ஆமாம் எப்படி உனக்குக் கணக்கில் இவ்வளவு திறமை வந்தது?" என்று மகளைக் கேட்டார். "ஓ... அதுவா? அதோ அந்தக் கோடி வீட்டில் ஒரு கணிதமேதை இருப்பதாகக் கேள்விப் பட்டேன். அவரிடம் போய் கணக்குக் கற்றுக் கொண்டேன்" என்றாள் சிறுமி.

"கோடி வீட்டிலேயா? அம்மாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "ஐயோ அந்தக் கோடி வீட்டிலிருக்கும் மாபெரும் கணிதமேதை ஐன்ஸ்டீனிடமா சென்று கற்றுக் கொண்டாய்" என்று வியந்தார். ஐன்ஸ்டீனிடம் ஓடினார்.

"குழந்தைக்கு உங்களது புகழ் தெரியாது. உங்களுக்குத் தொல்லை கொடுத்துவிட்டாள். மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சினார். ஐன்ஸ்டீன் சிரித்துக் கொண்டே சொன்னார் : "என்னிடமிருந்து உங்கள் குழந்தை கற்றுக் கொண்டதைவிட உங்கள் குழந்தையிடமிருந்து நான் கற்றுக் கொண்டதுதான் அதிகம்!"

ஐன்ஸ்டீன் உள்ளத்தைக் கண்டு வியந்து நின்றார் அந்த அம்மாள்.

– டி.எஸ். பாலு



பாயசம் வைக்க விரும்பியது. இந்த முறை சேமியாப் பாயசம்!

கடைக்குப் போய், எல்லாப் பொருள்களையும் வாங்கி வந்தது. பாயசம் வைக்கத் தொடங்கியது. முன்போலவே நல்ல வாசனை. சேமியா என்பதால் வாசனையில் ஒரு மாற்றம்.


அதை முகர்ந்த பூனையிடம் மறுபடியும் பாயசம் குடிக்க வேண்டும் என்ற ஆசை! அது மெல்ல மெல்லக் குரங்கின் குடிசையை நோக்கிச் சென்றது.

பூனை இப்படி திரும்பவும் வரும் என்பதைக் குரங்கு எதிர் பார்த்துத்தான் இருந்தது. எனவே, பூனைக்கு நல்ல பாடம் கற்பிப்பதற்காகச் சில முன்னேற்பாடுகளைச் செய்து வைத்து விட்டது.

அடுப்பைப் பற்ற வைத்த உடனேயே, ஒரு பெரிய செங்கல்லை எடுத்து நெருப்பினூடே போட்டு வைத்து விட்டது. தீயில் பழுத்து, அதில் சூடு நன்கு ஏறியதும், அதை வெளியில் எடுத்து, சிறிய மேடை போல், அருகில் போட்டு வைத்து விட்டது. அந்த வேலை முடிவதற்கும், பூனை வருவதற்கும் சரியாக இருந்தது.

உடனே குரங்கு, "வா, பூனையே வா! என்னை மன்னித்து விடு... நேற்று என்னால் உனக்குப் பாயசம் தர இயலாமல் போய் விட்டது. இலை நறுக்கி வர உன்னை அனுப்பினேன் அல்லவா? அங்கிருந்து 'பொத்' என்ற சத்தம்... எங்கே நீதான் கிணற்றில் விழுந்து விட்டாயோ என்று பயந்து விட்டேன்... எழுந்து அங்கு ஓடிப் போய்ப் பார்த்தால், நல்ல வேளை, யாரும் கிணற்றில் விழவில்லை. நான் அங்கிருந்து திரும்பி வருவதற்குள், யாரோ என் குடிசைக்குள் வந்து, அத்தனை பாயசத்தையும் சாப்பிட்டுவிட்டுச் சென்று விட்டார்கள். யார் என்றே தெரியவில்லை... கடைசியில் நேற்று நான் பட்டினியாகவே படுத்தேன். அது போகட்டும்... இன்றும் நான் பாயசம் வைக்கிறேன்... உனக்கு ஒரு பங்கு நிச்சயம் உண்டு... சற்றுப் பொறுத்திருக்கலாம். அல்லவா?" என்றது.

உடனே பூனை, நாக்கை வெளியில் நீட்டி, வாயை நக்கிக் கொண்டது. "ஆகட்டும்... ஆகட்டும்... அது வரையில் இருந்து



"வியாபாரம் ரொம்ப 'டல்' அடிக்கறதா; என்ன வியாபாரம் செய்யறே?"
"சுண்'டல்' வியாபாரம்தான்!"
— சீர்காழி ஜே. பலராமன்

சாப்பிட்டு விட்டே போகிறேன்..." என்றவாறு வாயிற்கதவுக்கு அருகில் வந்து உட்கார்ந்தது.

அதுதான் நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்த குரங்கு, "அடேய்...! அங்கேயே ஏன் உட்கார்ந்து விட்டாய்? உள்ளே வா... இப்படி வந்து, இதோ கிடக்கிறது பார் சிறிய மேடை, அதன் மீது வசதியாக உட்கார்ந்து கொள்... ஒரு நொடியில் பாயசம் தயாராகி விடும்" என்று தான் தயாரித்து வைத்திருந்த மேடையைச் சுட்டிக் காட்டியது.

பூனைக்கு மிகுந்த சந்தோஷம். 'லபக்' கென்று உள்ளே ஓடிச் சென்று, குரங்கு சுட்டிக் காட்டிய சிறிய மேடை மீது வசதியாக அமர்ந்தது.

ஏற்கெனவே நன்கு சூடேற்றப்பட்ட செங்கல் பூனைக்குச் 'சுரீர்' என்று சுட்டு விட்டது. வலியும் எரிச்சலும் தாங்க முடியவில்லை. அடுத்த கணம், 'குய்யோ முறையோ' என்று கூச்சலிட்டுக் கொண்டே, எழுந்து வெளியில் ஓடி விட்டது.

அதன் பிறகு, அந்தச் 'சூடு கண்ட பூனை' குரங்கின் குடிசைப் பக்கம் தலை வைத்துக் கூடப் படுப்பதில்லை!



சிறுதுரும்பும்

நீ கிளம்பு!

ஒரு வாரம் விடுமுறையை சித்தப்பா வீட்டில் கழித்துவிட்டு மகிழ்ச்சியாகத் திரும்பி னோம். எங்களை வழியனுப்ப சித்தப்பாவும், சித்தியும், தம்பியுடன் பேருந்து நிலையத்திற்கு வந்தார்கள். நாங்கள் பேருந்தில் அமர்ந்திருந் தோம். பேருந்து புறப்பட தாமதமானது. சித் தப்பா தம்பியுடன் வெய்யிலில் நின்று கொண் டிருந்தார். "நீ கிளம்பு, வெய்யில் அதிகமா இருக்கு" என்றார் அப்பா சித்தப்பாவிடம். "பரவாயில்லை" என்று சொல்லிவிட்டு நின்று கொண்டேயிருந்தார் சித்தப்பா. சிறிது நேரம் சென்றதும் அப்பா "நாங்க கண்டிப்பா இதே பஸ்ஸில் ஊருக்குப் போயிருவோம். நீ கிளம்




பின உடனே பின்னாடியே வந்துடமாட் டோம். கவலைப்படாமல் போ" என்றார். அருகில் இருந்தவர்கள் சிரிக்க சித்தப்பா கையசைத்தபடி சென்றார்.

– ம. செந்தில்குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
கிட்டப்பா நகராட்சிபள்ளி.

பழமொழி!

எங்கள் தாத்தா எப்போதும் ஏதாவதொரு பழமொழியைச் சொல்லிக் கொண்டேயிருப் பார். அன்று என் தம்பி பழைய பேப்பரில் இருந்த குண்டூசியை எடுத்து வெளியே வீசி விட்டான். அதைப் பார்த்த தாத்தா "ஏன் அதை வெளியே வீசினாய்? சிறு துரும்பும் பல் குத்த உதவும்" என்றார். அதற்கு தம்பி, "தாத்தா



உங்களுக்குத்தான் பல்லே இல்லையே! அப்புறம் எப்படி குத்துவீங்க?" என்று கேட்டானே பார்க்கலாம்! "உங்கிட்ட பழமொழி சொன்னது தப்புதான்" என்றார் தாத்தா கோபத்துடன்.

– க. வீரா,
பிராமணவயல்,
மணமேல்குடி தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம்.

அலாரம் எதற்கு?

என் தங்கை தினமும் காலை ஐந்து மணிக்கு எழுந்து படிப்பதற்காக அலாரம் வைப்பாள். அலாரத்தின் சத்தம் கேட்டு நாங் கள் எழுந்திருப்போமே தவிர அவள் எழ மாட்டாள். அதன்பின் நாங்கள் அவளை மாற்றி, மாற்றி எழுப்ப கடைசியில் ஆறு மணிக்கு எழுவாள். இது தினமும் நடைபெறும் நிகழ்ச்சியாகிவிட்டது. ஒரு நாள் "நீதான் அலாரம் கேட்டு எழுவதில்லையே, அப்புறம் எதற்கு அலாரம்?" என்று கேட்டேன் நான். உடனே "என்னை எழுப்பிவிட நீங்கள் எல் லோரும் எழ வேண்டாமா? அதற்குதான்

பல்குத்த உதவும்!



அலாரம்'' என்றாளே பார்க்கலாம்!

– முகநி. சுபா,
திருவண்ணாதபுரம், கீழ்நத்தம் அஞ்சல்,
நெல்லை மாவட்டம்.


பொன் விளைகிற பூமியா?

நானும் நண்பனும் சினிமா பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தோம். எங்கள் ஊரிலிருந்து ஒருவர் வந்து கொண்டிருந்தார். எங்களிடம் அவர் "தம்பிகளா, எங்கே போயிட்டு வர்றீங்க?" என்று கேட்டார். அதற்கு நாங்கள் "பொன்னு வெளையிற பூமி பார்த்துட்டு வர்றோம்" என்றோம். "என்னடா இது! நெல் விளையிற பூமியைத்தான் பார்த்திருக்கேன். நீங்க பொன்னு விளையிற பூமியையே பார்த்துட்டு வர்றீங்களா? அது எங்கே இருக்கு?" என்று அப்பாவியாகக் கேட்டார். "அது படத்தோட பேரு" என்று விளக்கினோம்.

– அர்ச்சுனன்,
ஒன்பதாம் வகுப்பு, அரசினர்
உயர்நிலைப் பள்ளி,
துத்திப்பட்டு கிராமம்.


கிணறு வெட்டியது யார்?

நானும் தோழியும் பேசிக் கொண்டிருந் தோம். பல விஷயங்களைப் பேசிய பின்



"நிலவில் தண்ணீர் இருப்ப தாக கண்டுபிடித்திருக்கிறார் கள்" என்றேன் நான். "நானும் பேப்பர்ல படிச்சேன்'' என்றாள் தோழி. அருகில் இருந்த என் குட்டித் தம்பி "நிலாவுல யார் கிணறு வெட்டினாங்க? அங்கிருந்து தண்ணியை இறைச்சு விட்டால் நம்ம மொட்ட மாடியில் நின்று பிடிக்கலாமே!'' என்றான் உண்மையான ஆதங்கத்துடன். முதலில் சிரித்து விட்டு நானும் தோழியும் தம்பிக்குப் புரிய வைத்தோம்.

– டி. ஜோஷ்வின்,
இரேனிபுரம் அஞ்சல்,
குமரி மாவட்டம்.



காபி எப்படி இருக்கு?

நான் கர்நாடக சங்கீதம் கற்று வரு கிறேன். 'காபி' ராகத்தில் ஒரு பாடலை அப்பாவிடம் பாடிக் காட்டினேன். பாட்டு முடிந்தவுடன் "காபி எப்படியிருக்கு?" என்று கேட்டேன். என் தங்கை "நல்லாயிருக்கு" என்றாள். எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. அந்த மகிழ்ச்சி ஒரு நிமிடம் கூட நீடிக்கவில்லை. "என்ன! கொஞ்சம் சர்க்கரை தான் கம்மியாயிருக்கு" என்று காபியைக் குடித்தபடி கூறினாள். எனக்கு வந்ததே கோபம்! அம்மா என்னை சமாதானம் செய்தார்.

–ஆர். ஜெயகந்தர்,
அருப்புக்கோட்டை.

ஆஹா



தினந்தோறும் பேருந்தில் பயணம் செய்து பள்ளிக்குச் செல்வது தயாநிதிக்கு எரிச்சலாக இருந்தது. வெகு நேரம் காத்திருந்து அதன் பின் நெரிசலான பேருந்தில் ஏறி, நின்று கொண்டே பயணம் செய்வது அவனுக்கு அன்றாட அல்லலாகிப் போனது. என்றாவது ஒரு நாள் அதிர்ஷ்டவசமாக உட்கார இடம் கிடைத்தால் போதும், சொர்க்கமே கிடைத்தது போல மகிழ்ந்து போவான் தயாநிதி.

அன்றும் இப்படித்தான் அதிகப்படியான நெரிசலில் மூச்சுமுட்டியபடி பயணம் செய்து கொண்டிருந்தான். 'ஆஹா, இப்போது நமக்கு உட்கார இடம் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்று தோன்றியது அவனுக்கு.

அப்போது இருக்கைக்கு அருகே நின்று கொண்டிருந்த ஒருவர் சத்தமாகக் காரி எச்சிலை வாயில் கூட்டினார். பின்னர் ஜன்னலருகே உட்கார்ந்திருந்தவரைக் கொஞ்சம் விலகச் சொல்லிவிட்டு, ஜன்னல் வழியாகத் தலையை வெளியே நீட்டி எச்சிலைத் துப்பினார். சுற்றியிருந்த அனைவரும் அவரை அருவருப்போடு பார்த்தனர். ஜன்னல் இருக்கையில் உட்கார்ந்திருந்தவரைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

சிறிது நேரத்தில் மீண்டும் எச்சிலைக் காரினார் அவர். இதற்கு மேலும் தாங்காது என்ற முடிவுக்கு வந்த ஜன்னல் இருக்கைக்காரர் உடனடியாக எழுந்து அவருக்கு இடம் விட்டார்.

இதைப் பார்த்த தயாநிதிக்கு மூளை வேறுவிதமாக வேலை செய்தது. 'இடத்தைப் பிடிக்க, இதைப் போல நாமும் முயற்சி செய்தால் என்ன? இன்று வேண்டாம் நாளை முதல் செயல்படுத்துவோம்' என்ற முடிவுக்கு வந்தான்.

மறுநாள் திட்டத்தைச் செயல்படுத்தத் தயாரானான். உட்காரும் இருக்கைக்கருகே இருபுறமும் உள்ள கம்பியைப் பிடித்தவாறு நின்று கொண்டான். சீக்கிரம் இடத்தைப் பிடித்து விட வேண்டியதுதான் என்று நினைத்துக் கொண்டு சத்தமாகக் காரி எச்சிலைக் கூட்டினான். சொல்லி வைத்தாற் போல ஜன்னலருகே உட்கார்ந்திருந்த ஒருவர் எழுந்தவாறே "இங்கே வந்து உட்கார்ந்துக்கோப்பா" என்றார். 'அடடே இதைத்தான் கைமேல் பலன் என்பார்களோ' என்று பூரிப்படைந்தான்.

நான்கு நாட்களாக இதைச் செய்து வந்த தயாநிதி அன்றும் இடம் கிடைத்ததும் உட்கார்ந்தான். தமக்கு இடமளித்த உத்தமர் யார் என்பதை அறிய அவர் முகத்தை ஏறிட்டான். மூளைக்குள் ஆயிரம் மின்னல் வெட்டியதைப் போலிருந்தது. அவர் வேறு யாருமல்ல தயாநிதியின் தமிழாசிரியர்தான்! பயத்தில் வாயிலிருந்த எச்சிலை அப்படியே விழுங்கினான். அவனிடம் வேறு ஏதும் பேசாமல் கூட்டத்தில் மறைந்தார் ஆசிரியர்.

மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு தமிழ்ப் பாட வேளை வந்தது. தயாநிதிக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஆசிரியர் வகுப்பில் நுழைந்ததும் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. கடுமையாக தண்டிக்கப்படப் போகிறோம் என்று நினைத்தான். ஆனால் ஆசிரியர் வழக்கம் போல் வெகு இயல்பாக

கமுதி. மு. ரியாசுல்லா

இடம் கிடைத்தது!

பாடத்தை நடத்தத் தொடங்கினார். வகுப்பு முழுவதும் சுழலும் அவர் கண்கள் தன் மீது படும்போது மட்டும் சுட்டெரிப்பதைப் போல உணர்ந்தான் தயாநிதி. ஒவ்வொரு நொடியும் நரகமாக இருந்தது அவனுக்கு.

திடீரென ஆசிரியர் பாடத்தை நிறுத்தி விட்டு பொதுச் சுகாதாரம் பற்றிப் பேசத் தொடங்கினார். ஆசிரியர் தன்னை அழைக்கத்தான் போகிறார் என்ற பயத்தில் இருக்கையின் நுனிக்கே வந்துவிட்டான் தயாநிதி. பொது இடங்களில் செய்யக் கூடாதவை எவை என்பதை விளக்கிக் கொண்டே வந்த அவர் தெருவோரங்களில் எச்சில் துப்புவது கெட்ட பழக்கம் என்பதில் நிறுத்தினார். "தெருக்களில் எச்சில் துப்புவதே தீயபழக்கம் என்றால் பேருந்தில் பயணம் செய்யும்போது துப்புவது எவ்வளவு பெரிய தீய பழக்கம், கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்" என்று அவர் சொன்னார். சிலர் அருவருப்பில் முகத்தைச் சுளித்தார்கள்.

தயாநிதிக்கு வகுப்பே தன்னைப் பார்த்து எள்ளி நகையாடுவதைப் போல இருந்தது. தான் செய்தது எத்தனை பெரிய தவறு என்பதை உணர்ந்தான். குற்ற உணர்ச்சியில் துடித்தான்.

வகுப்பு முடியும் வரை காத்திருந்து முதல் மாணவனாக வகுப்பை விட்டு வெளியேறி ஆசிரியர் பின்னால் விரைந்தான்.

"சார், சார்" என்றவனின் அழைப்பைக் கேட்டு நின்றார் ஆசிரியர். "நீ எதுவும் சொல்ல வேண்டாம். ஒரு ஒன்பதாம் வகுப்பு மாணவனுக்கு ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்லித்தர நேர்ந்ததை நினைத்து வருத்தப்படறேன்" என்றார் ஆசிரியர். "மன்னிச்சுடுங்க சார்" என்று ஆரம்பித்து தான் அவ்வாறு செய்ததற்கான பாதிப்பு என்ன என்பதை விளக்கினான்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட அவர், "சரி போகட்டும். இனியாவது இது போல் செய்யாதே. உன்னைப் போன்ற மாணவர்களே இப்படி செய்தால் மற்றவர்கள் என்ன செய்வார்கள்? இதைப் போல அநாகரிகமாக நடந்து கொள்பவர்களை நீயல்லவா பக்குவமாக எடுத்துக் கூறி திருத்த வேண்டும்?" என்று சொல்லிவிட்டு நடந்தார் ஆசிரியர்.

தயாநிதி, 'இனி நிச்சயம் நான் ஒரு பொறுப்புள்ள மாணவனாகத் திகழ்வேன்' என்று உறுதி கொண்டான்.






மிகப் பெரிய விளையாட்டரங்கம்

உலகிலேயே மிகப் பெரிய விளையாட்டு அரங்கம் செக்கோஸ்லோவாகியாவில் உள்ள அரங்கம்தான்.

இதில் 2,50,000 பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய இட வசதி உண்டு.

ஒரே நேரத்தில் 40,000 விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் அளவிற்குப் பரந்து காணப்படுகிறது.



பூமிக்குள் வளரும் மரம்!

தென் அமெரிக்காவில் உள்ள 'பாரினேரியம் காபென்ஸ்' என்ற மரம் பூமியினுள் வளர்கிறது. இதன் அடிமரம் கிளைகளுடன் பூமிக்குள் மறைந்து இருக்கிறது. தரைமட்டத்திற்குச் சிறிது கீழே வளர்ந்துள்ள கிளைகளில் இருந்து தோன்றும் இலைகளும் பூக்களும் தரைமட்டத்திற்கு மேல் தெரியும்.

உயரமான மலைப்பகுதியில் உள்ள சில மரங்கள் குளிரில் இருந்து தப்புவதற்காக தரைமட்டத்துக்குக் கீழே வளர்கின்றன.

– ஆர். ஆர். பூபதி.

அலெக்ஸாந்தரும், கொள்ளைக்காரனும்

அலெக்ஸாந்தர் அரசராக இருந்த சமயம் டயோமிடீஸ் என்னும் கப்பல் கொள்ளைக்காரன் இருந்தான். நடுக்கடலில் செல்லும் கப்பல்களை நிறுத்திக் கொள்ளையடிப்பதுதான் இவனுடைய வேலை. கடைசியில் ஒருநாள் இவன் பிடிபட்டு



அலெக்ஸாந்தருக்கு முன்னால் நிறுத்தப்பட்டான்.

அலெக்ஸாந்தர் அவனைப் பார்த்து, "நீ எப்படி மக்களிடம் கொள்ளையடிப்பாய்?

கார்ட்டூன்


நான் உனக்கு என்ன தண்டனை விதிக்கிறேன் பார்" என்று சொன்னார்.

அதற்கு டயோமிடீஸ், "அரசே! நான் ஒரு சிறு படகை வைத்துக் கொண்டு கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், நீங்களோ நூற்றுக்கணக்கான கப்பல்களை வைத்துக் கொண்டு நாடுகளை நாசமாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், எனக்குப் பெயர் கொள்ளைக்காரன், உங்களுக்குப் பெயர் அரசன்" என்றான்.

இதைக் கேட்டதும் அலெக்ஸாந்தர் அந்தக் கொள்ளைக்காரனை மன்னித்தார். அவனுக்கு நிறைய பணம் கொடுத்து, கப்பல் கொள்ளைத் தொழிலை விடும்படி கூறினார்.

ஆதாரம் : ஆயிரம் நீதிக் கதைகள்

தகவல் : செ. செல்வராமன்.




பாராளுமன்றக் கட்டிடத்தை அலங்கரிக்க ஓவியர்களிடையே போட்டி வைக்கப்பட்டது. ஓவியர்கள் கார்ட்டூன் பேப்பரில் தீட்டிய ஓவியங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டன. மற்றவைகள் யாவும் நிராகரிக்கப்பட்டன. காலப்போக்கில் இவ்வித கெட்டியான பேப்பர்களில் உருவாக்கப்பட்ட கேலிச் சித்திரங்களுக்கு 'கார்ட்டூன்' என்ற பெயரே நிலைத்து விட்டது.

– பி. தியாகராஜன்,
நாமக்கல்.

உலகிலேயே மிகப் பெரிய இலை


உலகிலேயே மிக மிக மெதுவாகப் பறக்கும் பறவை அமெரிக்காவிலுள்ள உட்காக் பறவைதான். இதன் வேகம் தரையில் ஊர்ந்து செல்லும் நத்தையின் வேகம்தான். மணிக்கு 0.000362 மைல் வேகம்!

ஆதாரம் : எங்கள் கதை
தகவல் : ரே. இராமன்.



என்றால் என்ன?


இத்தாலி மொழியில், 'கார்ட்டூன்' என்பது கெட்டியான பேப்பரைக் குறிக்கும். 1921-ம் ஆண்டு பிரிட்டனின் புதிய



உலகிலேயே மிகப் பெரிய இலை 'ரபியா' இலைதான். 22 மீட்டர் நீளம், 12 மீட்டர் அகலம் கொண்ட இந்த இலைக் காம்பின் நீளம் மட்டும் 5 மீட்டர். இது மடகாஸ்கர் தீவில் உள்ளது.

– சந்தியூர். ஏ. கோவிந்தன்,
மல்லூர்.

பிரான்ஸ் நாட்டில் 1790-ம் ஆண்டு முதன் முதலாக சைக்கிள் உருவாக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் செய்யப்பட்ட இந்த சைக்கிள்கள் மரத்தால் ஆனவை. இவைகளுக்கு இப்போதுள்ள சைக்கிள்களில் பெடல் இருப்பது போல் அப்போது இல்லை. அதனால், இரண்டு கால்களையும் சைக்கிளின் பக்கவாட்டில் ஊன்றிக் கொண்டு தள்ளிக் கொண்டுதான் போக




வேண்டும்.

— ஆர். அரங்கசாமி, நாமக்கல்.

அதிசய ஏரி

ஆராய்ச்சியாளர்களையே திகைக்க வைக்கும் அதிசய ஏரி ஒன்று தென் ஆப்பிரிக்காவில் உள்ளது. அந்த ஏரியின் பெயர் ஃபண்டுசி. ஜோகன்ஸ்பர்க் நகரி



லிருந்து வடமேற்குத் திசையில் மலையடி வாரத்தில் உள்ளது.

இந்த ஏரிக்கு முட்டாலி ஆற்றிலிருந்து ஒரு மணிக்கு முப்பது லட்சம் காலன்கள் வீதம் தண்ணீர் வருகிறது. இதில் அதிசயம் என்னவென்றால் இந்த ஏரியில் இருக்கும் தண்ணீர் வெளியேறுவதேயில்லை. அதே சமயம் நீர் மட்டம் உயர்வதும் இல்லை. அப்படியானால் இந்த ஏரியின் நடுவில் சுரங்க அமைப்பு ஏதேனும் இருந்து அதன் மூலம் தண்ணீர் வெளியேறக்கூடும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.


— கண்மணி, ஆண்டியப்பனூர்.

உங்களுக்குத் தெரியுமா?

வெட்டுக்கிளியின் இரத்தம் வெண்மையாக இருக்கும்.

உலகில் ஒரு வினாடிக்கு நான்கு குழந்தைகள் பிறக்கின்றன.

நிமிடத்திற்கு 25 முறை நாம் கண்களைச் சிமிட்டுகிறோம்.




நமக்குத் தும்மல் வரும்பொழுது நம் கண்கள் தானாக மூடிக் கொள்ளும். கண்ணைத் திறந்து கொண்டு நம்மால் தும்ம முடியாது.

— என். சாய் ஹரி, சென்னை – 82.

ஈக்களே இல்லாத நாடு அலாஸ்கா மட்டும்தான். காரணம் அங்குள்ள குளிரை அவைகளால் தாங்க முடியாததே!

— மு. ருக்மணி, தேனி.






"எதுக்குடா லைட்டை அணைக்காமலேயே தூங்கறே?"

"கனவெல்லாம் ஒரே இருட்டா வருது. அதான்...!"

— கே. பாலசுப்ரமணியன்.

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

4. பூமியின் துணைக்கோள் (2)
5. இது ஏற்பட்டால் சாப்பிட வேண்டும் (2)
7. மார்கழியில் இது அதிகம் பொழியும் (2)
8. ஓலை வீடுகளை இப்படியும் அழைக்கலாம் (2)
9. குழந்தைகள் இதைக் கேட்க விரும்புவார்கள் (2)
10. வாழைத் தண்டில் இந்தச் சத்து உள்ளது (2)
11. வண்டிகளுக்கு இது அவசியம் (5)
13. மருத்துவகுணம் நிறைந்த மரம். இதன் சுவையை எளிதில் விரும்ப மாட்டார்கள் (3)

வலமிருந்து இடம்

1. சங்கத் தமிழ் வளர்த்த பெருமை இவ் ஊருக்கு உண்டு (3)
2. சமீபத்தில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் சீனா இதைக் குவித்தது (5)

மேலிருந்து கீழ்

1. வாழை, அரிசி போன்றவை மொத்தமாக விற்கும் இடம் (3)
2. பழங்களில் ஒன்று. இதன் விதை மிளகு போன்று இருக்கும் (4)
9. கிராமப்புறக் கலைகளில் ஒன்று (4)

கீழிருந்து மேல்

3. கர்நாடகாவில் இப்பகுதியில் காப்பி அதிகம் விளைகிறது (3)
4. தூக்கத்தை இப்படியும் அழைக்கலாம் (4)
6. விலங்குகளின் அரசன் (4)
7. முக்கனிகளில் ஒன்று. மிகவும் பெரியது (2)
10. கழுத்து நீண்ட பறவை. வெள்ளை மற்றும் சிவப்பு நிறத்தில் காணப்படும் (2)
11. நான்கு பக்கமும் சமமாக இருக்கும் வடிவம் (4)
12. கம்ப்யூட்டரை இப்படியும் அழைக்கலாம் (3)
13. ரிக், யஜுர் என்பது (3)
14. போதி மரத்தடியில் ஞானம் பெற்றவர் (4)

– எம்.எஸ். உம்மு அம்மாரா,
பதினோராம் வகுப்பு,
இமாம் கஸ்ஸாலி மெட்ரிக் பள்ளி,
லால்பேட்டை, கடலூர் மாவட்டம்

விடை 72 ஆம் பக்கம்

ஆளுக்குப்

மாலதி

கேசவன் மகா குறும்புக்காரன். மணக்குடி மிராசுதார் பஞ்சாட்சரத்தின் வீட்டில் பணி செய்து கொண்டிருந்தான். வேடிக்கை கதைகள் சொல்வான். மிராசுதாருக்கு எண்ணெய் தேய்த்து விடுவான். கால் அமுக்குவான். தலைவலி என்றால் தைலம் தேய்ப்பான். மொத்தத்தில் மிராசுதாரின் இரண்டு கைகளாக இருந்தான். அவன், வாயில் வார்த்தை இருக்கும்போதே செய்து முடிப்பதில் சமர்த்தன். மிராசு குடும்பத்திற்காக நாயாய் உழைத்தான். ஆனால் அவனது குறும்புத்தனங்கள் அவருக்கு எல்லையற்ற கோபத்தைத் தந்தன.

நாடகக் கலைஞர்கள் மணக்குடி கிராமத்துக்கு வந்தனர். தசாவதார நாடகம் போட்டனர். மிராசுதார் எக்காரணம் கொண்டும் கேசவனை உள்ளே விடக் கூடாதென்று காவல் போட்டு இருந்தார். அவனை அதற்காகவே வேறு வேலை கொடுத்து வெளியூர் அனுப்பியிருந்தார்.

வேலை முடிந்து விடவே கேசவன் மணக்குடிக்குத் திரும்பி விட்டான். ஊரே நிசப்தமாயிருந்தது. ஊர் எல்லையில் கீற்றுக் கொட்டகையில் நாடகம் நடப்பது தெரிந்தது. நாடகம் பார்க்க ஆசைப்பட்டான்.

கொட்டகையைச் சுற்றி முள் வேலி இருந்தது. அங்கே காவலுக்கு வீர பாண்டி நின்று கொண்டிருந்தான். அவன் கேசவனை உள்ளே விட மறுத்தான்.

கேசவன், "வீரபாண்டி! எஜமான் எனக்கு எத்தனை பரிசுகள் கொடுத்திருக்கிறார்? நான் எத்தனையோ தவறுகள் செய்தும் ஏன் என்னை வேலையை விட்டு விலக்கவில்லை?" என்று கேட்டான்.

வீரபாண்டிக்கு உடல் பலம் இருந்த அளவு புத்திசாலித்தனம் கிடையாது. அவன் சற்று யோசித்து, "பட்டு வேஷ்டி, சொக்காய், மோதிரம் இப்படி நிறைய பரிசுகள் தந்திருக்கிறார். நீ உண்மையா உழைக்கிறதாலே உன்னை மன்னிச்சு விட்டு விடுகிறார்" என்றான்.

"இப்பவும் அப்படித்தான்! குறும்பு செய்யாமல் முதலாளி மனதைக் கவர்ந்து பரிசு பெற்று விடுவேன். அந்தப் பரிசில் உனக்குப் பாதியைத் தந்து விடுகிறேன்" என்றான். வீரபாண்டியின் தயக்கத்தை ஆசை வென்றது. உள்ளே அனுமதித்தான்.

மண் சுவர் அருகே இன்னொரு காவலாளி ரங்கப்பன் நின்றிருந்தான். கேசவனைக் கண்டவுடன் முறைத்தான்.

"கேசவா! வீரபாண்டி உன்னை எப்படி உள்ளே விடலாம்? இப்போதே எஜமானரிடம் இதைத் தெரிவிக்கிறேன்" என்று உறுமினான்.

கேசவன், "வீரபாண்டி மதியூகி. எனக்கு உள்ளே கிடைக்கும் வெகுமதியில் பாதி கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொண்டான். நான் கொண்டு வந்திருக்கும் நல்ல செய்தியை எஜமானரிடம் தெரிவித்தால் வெள்ளிப் பணத்தை அள்ளி வழங்குவாரே!" என்றான்.

"என்ன செய்தி! என்னிடம் சொல்லு" என்று குழைந்தான் ரங்கப்பன்.

"ஆசை, ஆசை! நான் திரும்பிப் போகிறேன். முதலாளி வீட்டிற்கு வந்தவுடன் சொல்லிக் கொள்கிறேன்" என்று திரும்புவதாகப் பாசாங்கு செய்தான் கேசவன்.

ரங்கப்பன் முன்னால் சென்று மறித்தான். "நான் மட்டும் ஏமாளியா? உள்ளே கிடைப்பதில் பாதியைத் தருவதானால் போய்க் கொள்" என்றான்.

கேசவன் நாடகக் கொட்டகைக்குள் சென்றான். நரசிம்மாவதாரம் நடந்து கொண்டிருந்தது. அது முடிந்து வாமனாவதாரம். மகாபலியின் தலையில் வாமனன் கால் வைத்து அழுத்தும் கட்டம்.

இதற்குள் குனிந்தபடி ஓரமாக மேடையை நெருங்கி இருந்த கேசவன் மேடைக்குச் சட்டென்று தாவினான். மகாபலியாய் நடித்தவர் சற்று வயதானவர்.

கேசவன் வாமனனாய் நடித்த சிறுவனின்

காதை முறுக்கியபடி, "கொஞ்சம் கூட மரியாதை தெரியாத பையனாய் இருக்கிறாயே! விழுந்து வணங்க வேண்டிய பெரியவர் தலையில் காலை வைக்கலாமா?" என்று அதட்டினான்.

சபை கலகலத்தது.

பஞ்சாட்சரம் கோபமாய், "இவனை யார் உள்ளே விட்டது? இருபத்து நாலு சவுக்கடி கொடுங்கள்" என்று இரைந்தார்.

கேசவன் கள்ளச் சிரிப்புடன், "வீரபாண்டியும், ரங்கப்பனும் அனுமதித்ததால்தானே உள்ளே வந்திருக்கிறேன்!" என்றான்.

அடக்க மாட்டாத சினத்துடன் அவர்களை இழுத்து வரச் சொன்னார் மிராசுதார்.

அவர்கள் கலங்கியபடி, "ஏதோ நற்செய்தி இருப்பதாய் சொன்னதால்தான் உள்ளே அனுமதித்தோம்" என்று கூறினர்.

பாதி...

"ஆ... முழுப் பூசணிக்காயைச் சோற்றில் அமுக்கப் பார்க்கிறீர்களே! உள்ளே கிடைப்பதில் ஆளுக்குப் பாதி என்று சொன்னதால்தானே ஒப்புக் கொண்டீர்கள்! இப்போது ஆளுக்குப் பன்னிரண்டு கசையடி வாங்கிக் கொள்ளுங்கள்" என்றான் கேசவன்.

காவலர் இருவரும் தலைகுனிந்தனர்.

அவர்கள் இருவரையும் சவுக்காலடிக்கச் சொன்னார் மிராசுதார்.

கேசவன் குறுக்கிட்டு, "அவர்களை மன்னித்து விடுவதாயிருந்தால் உங்களுக்கு ஒரு இனிப்பான செய்தி கூறுவேன். நாடகம் முடியும் வரை தாமதிக்க மனமில்லாததால் கலாட்டா செய்து நாடகத்தை நிறுத்தினேன்" என்றான்.

"செய்தியைச் சொல்லு. இனிப்பானதா என்று நான் தீர்மானிக்கிறேன்" என்றார் மிராசுதார்.

"உங்களுக்கு இரட்டைப் பேரன் பிறந்ததை விட இனிப்பான செய்தி வேறு இருக்கிறதா?" என்றான் கேசவன்.

"என்ன! எனக்கு இரட்டைப் பேரனா? இதை ஏண்டா அப்போதே சொல்லவில்லை?" என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார் மிராசுதார்.

"நாடகத்தைப் பாதியில் நிறுத்தியதற்கு இருபத்து நாலு கசையடி என்றீர்கள்! இப்போது நாற்பத்தெட்டா?" என்று கேசவன் முடிப்பதற்குள்,

"போடா, குறும்பா... எல்லோருக்கும் இனிப்புக் கொடு" என்று உத்தரவிட்டார் மிராசுதார்.



ஈற்றுவாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெற்ற கதை

சர்க்கரை இல்லை!

ராமையா ஒரு கிராமவாசி. பள்ளி சென்று படிக்காவிட்டாலும் பெரிய எழுத்துகளை எழுத்துக் கூட்டி ஓரளவு வாசிக்கத் தெரிந்தவர்.

பக்கத்து டவுனிலுள்ள ஒரு ஹோட்டலில் சுடச்சுட அடையும் தொட்டுக் கொள்ள சர்க்கரையும் தேவாமிர்தமாக இருக்கும் என்று தன் நண்பர் கூறக் கேட்டிருந்தார் ராமையா. அவருக்கும் ஆசை வந்தது.

ஒருநாள் டவுனில் தனது வேலைகளை முடித்துக் கொண்டு நண்பர் சொன்ன ஹோட்டலுக்கு விரைந்தார்.

ஹோட்டலின் வாசலில் 'இன்று முதல் அடைக்கு சர்க்கரை இல்லை' என்று அறிவிப்புப் பலகையில் எழுதப்பட்டிருந்தது. ராமையா நின்று மெதுவாக வாசித்தார்.

பிறகு உள்ளே சென்று அமர்ந்தார்.

"என்ன சாப்பிடறீங்க?" என்று சர்வர் கேட்டார்.

"அடை" என்றார் ராமையா.

சர்வர் அடையும் அவியலும் வைத்து விட்டுச் சென்றார். ராமையா வேகமாக சாப்பிட்டு முடித்தார். மீண்டும் இன்னொரு அடை வேண்டும் என்று கேட்டார்.

வேறொரு தட்டில் அவியலும் அடையும் வந்தது.

"தம்பி! சர்க்கரை கொண்டு வாப்பா" என்றார் ராமையா.

"ஐயா! பலகையை படிச்சிட்டுதானே வந்தீங்க?" என்றார் சர்வர்.

"இன்று 'முதல்' அடைக்குத்தானே சர்க்கரை கிடையாது. நான் ரெண்டாவது அடைக்குத்தானே சர்க்கரை கேட்டேன்" என்றார் ராமையா.

இதைக் கேட்ட சர்வர் திகைத்து நின்றார்.

– பொன். திருவரங்கன்,
ஐந்தாம் வகுப்பு, ஆர்.சி.
நடுநிலைப் பள்ளி,
மானாமதுரை.

ஈற்று வாக்கியப் போட்டிக் கதைகள் ஒவ்வொன்றும் ரூ. 25 பரிசு பெறுகின்றன. பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.



4

சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

அமைப்பு: விஜி படம்: லலிதா




பயணம் துவங்கியது. வழியில்...
இயற்கையின் அற்புத படைப்புகள் கொள்ளை அழகு!
அருவியைப் பாருங்கள்!
இந்தத் தீவில் சிறிது நேரம் தங்கலாமே!
ஆமாம்!
மனித நடமாட்டம் இல்லாத தீவு இது..
ம்... சற்று நேரத்தில் கிளம்பி விடலாம்!
பயணிகள் இறங்கினர்.


ஆஹா! அருமையான காற்று- கண் கவரும் பூக்கள்.
இப்படி ஒரு இடத்தைப் பார்த்ததில்லை!
இந்த அருவி என்னை வா வா என்று கூப்பிடுதே!
அருமையான குளியல்... ம்... நேரமாகி விட்டதே. சீக்கிரம் போகணும்.
ஓடினான்.... ஆனால்
ஐயோ! கப்பல் போய் விட்டதே! உணவு, உடை, தங்கும் இடம் எதற்கும் வசதி இல்லையே?


சே! தேவையில்லாமல் இங்கே மாட்டிக் கொண்டேன். இனி என்ன செய்யப் போறேன்?
சிந்துபாத் தீவில் அலைந்தான்.
பக்கத்தில் மனிதர்கள் வசிக்கும் தீவு ஏதாவது இருக்கா? பார்க்கலாம்!
சிந்துபாத் உயரமான மரத்தில் ஏறினான்.
கண்ணுக்கு எட்டிய தூரம்வரை ஒன்றும் புலப்படவில்லை. ம்...
சிந்துபாத் இறங்க நினைக்கும்போது....
தொடரும்



பலரிடம் உதை வாங்கியும் அழாதவன் யார்?

1. கறுத்த உடம்புக்காரன்,
தரையிலே கிடப்பவன்.
உயிரும் இல்லை,
உணர்வும் இல்லை – அது என்ன?


2. முப்பத்தி இரண்டு வீரர்கள்
காவல் காக்க
முதலை ஒண்ணு இருக்குது
– அது என்ன?

3. வேர் இல்லை, முளைத்திருக்கு,
இலை இல்லை கிளையிருக்கு
– அது என்ன?

4. தரையில் இல்லாத குளம்,
யாருமே குளிக்காத குளம்,
சுவற்றிற்குள் அடைபட்டு கிடக்கு
– அது என்ன?

5. கிணற்றில் இருந்து வரும் நீர்
சுவைத்துப் பார்த்தால் உப்பு கரிக்கும்
– அது என்ன?

6. பலரிடம் உதை வாங்கியும்
ஒருமுறைகூட அழாதவன் – அவன்
யார்?



7. வெளிச்சமிட்டு பளபளக்கும்;
விளக்கும் அல்ல,
இரவெல்லாம் மினுமினுக்கும்; விண்
மீனும் அல்ல – அது என்ன?

8. கால் இல்லை, கை உண்டு
தலை இல்லை, கழுத்து உண்டு
– அது என்ன?

– வை. காஞ்சனமாலா,
நான்காம் வகுப்பு,
பார்வதி விஸ்வநாதன் பள்ளி,
சீர்காழி.

1. முத்து நகை பூட்டி வரும்
குதிரைவால் கொண்டைக்காரி;
சந்தைக்கு வந்து விட்டால்
சத்திற்குக் குறைவில்லை – அவள்
யார்?

2. விதை போடாத மரம்;
வேரில்லாத மரம்;
காலத்தால் அழியாத மரம்; கை
கூப்பித்
தொழும் மரம் – அது என்ன?

3. சிவந்த நிறத்துப் பருத்தி;
சேலை செய்ய முடியாத பருத்தி
– அது என்ன?

4. கடலில் மலரும் பூ; கார் குழலில்
சூடாத பூ; மணம் இல்லாத பூ;
சுவை கூட்டும் தும்பைப் பூ
– அது என்ன?

– ஆர். கவிதா,
திட்டை ரோடு,
சீர்காழி.

விடைகள்: படங்களைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாமே!

5 பணிந்த மர்மம்!

தனக்குப் பேயோ பிசாசோ பிடித்திருக்கிறது என்ற எண்ணத்திலேயே பேயை விரட்ட அப்பா மந்திரவாதியிடம் அழைத்து வந்திருக்கிறார் என்பதையும், தனக்குத் தெரிந்தால் எதிர்க்கலாம் என்றே அதைத் தன்னிடம் மறைத்தே அழைத்து வந்திருக்கிறார் என்பதையும் மாது நன்கு புரிந்து கொண்டான். இனிமேல் அவன் என்ன சொன்னாலும் அதை ஏற்கும் மன நிலையில் அவர் இல்லை என்பதையும் அறிந்து கொண்டான்.

அப்பா அவன் கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே போனார். பார்த்த மாத்திரத்திலேயே மனதில் திகிலை வரவழைக்கக் கூடிய தோற்றத்தை உடைய இருவர் அவர்களை வழி நடத்திக் கொண்டு போனார்கள். இரண்டு பக்கங்களிலும் இருந்த நீண்ட வராந்தாவில் அங்கங்கே ஜூனியர் மந்திரவாதிகள் பேய் ஓட்டிக் கொண்டிருந்தார்கள். மந்திரவாதிகள் அடிக்கும் அடியும் தலையை விரித்துக் கொண்டு பேய் பிடித்தவர்கள் ஆடிய ஆட்டமும் எழுப்பிய காட்டுக் கூச்சலும் அந்த இடத்தை முதலில் பார்ப்பவர்களுக்குப் பீதியைக் கொடுப்பதாக இருந்தது.

பத்ரகாளி உருவம் வரையப்பட்ட சிவப்பு வண்ணத் திரைச் சீலை தொங்கிய கதவுக்கு முன்னால் அவர்கள் வந்து நின்றனர். சீலையை விலக்கிக் கொண்டு உள்ளே போன ஒரு சீடர் உடனே திரும்பி வந்தார்.

"ஐயா, பெரியவரைப் பார்க்கலாமா? சம்மதம் தந்து விட்டாரா?" என்று பயபக்தியோடு கேட்டார் அப்பா.

"பூஜை இன்னும் முடியவில்லை. அரை மணி நேரமாவது ஆகும்னு சொன்னார். அதுவரை காத்திருக்க வேண்டியதுதான்" என்றார் உள்ளே போய்த் திரும்பி வந்தவர்.

"நீங்கள் அதற்குள் தாம்பூலத்தட்டில் எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொள்ளலாமே?" என்ற இன்னொருவர் ஒரு பெரிய மூங்கில் தட்டை எடுத்து வந்தார். அப்பாவும் மாதுவும் ஒரு ஓரமாக உட்கார்ந்து கொண்டனர். அப்பா தான் கொண்டு வந்திருந்த கைப்பையிலிருந்து பழம், பூச்சரம், சந்தனம், குங்குமம், வெற்றிலை, பாக்கு எல்லாவற்றையும் எடுத்துப் பரப்பினார். தான் செய்வதையெல்லாம் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்த சீடரிடம் அப்பா தட்டைத் தூக்கிக் கொடுத்தார். "என்னங்க? சாமிக்கு தட்சிணை வைக்கலையே?" என்று கேட்டார் சீடர் கடுமையாக.

"அதைத் தனியாக வைத்திருக்கிறேன். சாமியைப் பார்க்கும்போது தட்டிலே வைத்து விடலாம்னு இருந்தேன்" என்றார் அப்பா.

"இங்கே வையுங்க" என்றார் கடுமை மாறாமல் அந்தச் சீடர்.

அப்பா சட்டையின் உள் பக்கப் பையிலிருந்து நோட்டுக் கற்றையை எடுத்துப் பிரித்து எண்ணினார். இதற்குள் அப்பா எடுத்த உறையிலிருந்து ஒரு சிவப்புக் காகிதம் விழுந்ததை மாது கவனித்து விட்டான். அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். அது மார்வாரி கடையில் அடகு வைத்த பில். இரண்டு சவரன் தங்க மோதிரத்தை அடகு வைத்து நான்காயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டதற்கான ரசீது. முந்தைய நாள் தேதி.

மாது சட்டென்று அப்பாவின் கையைப் பார்த்தான். அவர் இடது கை விரலில் அணிந்திருந்த மோதிரத்தைக் காணவில்லை. அவனுக்கு எல்லாம் புரிந்து விட்டது. தன்னை மந்திரவாதியிடம் அழைத்து வந்து பேயோட்டும் சிகிச்சைக்காக தட்சிணை கொடுக்கப் பணமில்லாமல் மோதிரத்தை அடகு வைத்திருக்கிறார்.

மின்கல

இதற்குள் பணத்தை எண்ணிப் பார்த்த சீடர், "என்னங்க இது? நாலாயிரம்தானே வைத்திருக்கீங்க? சாமி ஐந்தாயிரத்துக்குக் குறைஞ்ச வாங்கறதே இல்லங்க. தட்சிணை விஷயத்தில் பெரிய சாமி ரொம்பக் கண்டிப்பானவர். உங்களை இப்படியே உள்ளே அனுமதிச்சா தட்சிணை குறைஞ்சதைக் கண்டுபிடித்து என்னைத் தீய்ச்சிடுவார். தயவு பண்ணி மீதி ஆயிரத்தையும் வைங்க. நல்ல வேளை இப்பவே பார்த்தேன்" என்றார் சீடர்.

"ஐயா, நான் மாத சம்பளக்காரன். வசதியானவன் அல்ல. பெரியவரிடம் கொஞ்சம் சொல்லிப் பாருங்க. இந்தப் பணம் கூட



நகையை அடகு வைச்சு வாங்கினதுதான்'' என்று குழைந்தார் அப்பா.

''குறைக்கிற பேச்சுக்கு இடமில்லேங்க.

மாதவன்!

நாலாயிரம் கடன் வாங்கினவர் இன்னொரு ஆயிரத்தையும் வாங்கியிருக்கலாமே? ஏற்கெனவே வந்து கேட்டப்போ தட்சிணை ஐந்தாயிரம்னு கண்டிச்சு சொல்லலீங்களா? இப்படி தர்ம சங்கடத்துல சிக்க வைக்கறீங்களே?'' என்று சலித்துக் கொண்ட சிடர், ''ஒண்ணு பண்ணுங்க. பெரிய சாமியைப் பார்க்கும் போது, ஆயிரம் குறையுது. இன்னும் ரெண்டு நாளில் தந்திடறேன்னு சொல்லுங்க. நானா இதுல எந்த முடிவும் செய்ய முடியாதுங்க'' என்றார்.

''இது போதுங்க. எப்படியாவது பையனுக்குப் பிடித்திருக்கும் பிசாசு ஓடிப் போய் அவன் சரியானால் சரி'' என்று நன்றிப்

ரேவதி

பெருக்குடன் கண்களைத் துடைத்துக் கொண்டார் அப்பா.

பதில் எதுவும் கூறாமல் சிலையை விலக்கிக் கொண்டு உள்ளே போனார் சிடர்.

மனம் கலங்கிய அப்பாவின் கைகளைப் பிடித்தான் மாது.

''அப்பா, உங்கள் மோதிரத்தை அடகு வைத்துப் பணம் வாங்கி இப்படி மந்திரவாதிக்குக் கொடுத்து எனக்கு வைத்தியம் பார்க்கும்படி அத்தனை மோசமாவா நான் இருக்கிறேன்? எனக்கு உடம்புக்கு எதுவுமே இல்லேப்பா. நான் நன்றாகவே இருக்கிறேன். நீங்களெல்லாம் நினைக்கும்படி எனக்கு பைத்தியமோ பிசாசோ பிடிக்கலை. என்னை நம்புங்கள் அப்பா. நம்முடைய சொற்ப வருமானத்தில் இப்படி ஐந்தாயிரம் தரும் நிலைக்கு மனதை எப்படி மாற்றிக் கொண்டீர்கள்? இதற்கு அவசியமே இல்லைப்பா'' என்று அழுதான் மாது.

அப்பா அவன் தலையைப் பாசத்தோடு நீவி விட்டார்.

''மாது. உனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லேன்னு நீ எளிதா சொல்றே. ஆனால், நீ செய்யும் காரியங்கள் பள்ளி மாணவன் செய்யும் சாதாரணக் காரியங்களாகவா இருக்கு? நானே பார்த்தேனே, கைகளால் வெறும்

பல்லைப் பிடித்ததும் அது எரிந்ததே? பள்ளியில் எல்லோரும் உன்னைப் பார்த்து பயப்படுகிறார்களாம். உங்கள் தலைமையாசிரியர் என்னைக் கூப்பிட்டு எச்சரிக்கையே பண்ணிவிட்டார். உனக்குள்ளே ஏதோ ஒரு அதிசயமான சக்தி இருக்கு. அதுதான் உன்னை இப்படியெல்லாம் ஆட்டி வைக்கறது. நீ எல்லோரையும் போல் சாதாரணமானவன் இல்லை. உன்னை ஏதோ ஒரு ராட்சச சக்தி ஆட்டி வைக்கிறது. அது பேயாகவோ, பிசாசாகவோ, காட்டேரி, கொள்ளி வாய் முனி என்று ஏதாவது ஒரு அதீத சக்தியாகவோதான் இருக்கும்னு



"என் மகன்கள் ரெண்டு பேருக்கும் ஒற்றுமையே இல்லை."

"எப்படி சொல்றீங்க?"

"ஒருத்தன் கிளியை வளர்க்கிறான்கிறதுக்காக இன்னொருத்தன் பூனையை வளர்க்க ஆரம்பிச்சுட்டான்!"

— பா. ஜெயக்குமார்

எல்லோரும் நம்பறோம். அதன் பிடியில் இருந்து உன்னை விடுவிக்கும் சக்தி இந்த மந்திரவாதிக்கு உண்டு. உன்னை விட எனக்கும் அம்மாவுக்கும் எதுவும் பெரிதல்ல. உனக்கு நல்ல படியாகக் குணமானால் அதுவே எங்களுக்குப் போதும். மந்திரவாதி சொல்றபடி கேட்டு அவரோட ஒத்துழைச்சால் சீக்கிரமே குணமாகி விடும். நீ எங்களுக்கு செய்யக் கூடியது அது ஒன்றுதான். அதை பிரச்னையில்லாமல் செய்து கொடு. அது போதும்" என்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டார் அப்பா.

திரையை விலக்கிக் கொண்டு வெளியே வந்த சீடர் 'அனுமதி' கிடைத்து விட்டதாகக் கூறி அவர்களை அழைத்துக்கொண்டு போனார்.

உள்ளே சாம்பிராணிப் புகை மனதை என்னவோ பண்ணினதோடு, ஒரு பனிப் படலக் காட்சியைத் தந்தது. பூஜை செய்யப் பட்டிருந்த பத்ரகாளி சிலை, பெரிய மந்திர வாதியின் தோற்றம், கம்பம் கம்பமாகக் கட்டிப் போடப்பட்டுக் கிடந்த மனநலம் குன்றியவர்கள் அவ்வப் பொழுது எழுப்பும் கூச்சல், மனித மண்டை ஓட்டுத் தோரணங்கள் என்று எல்லாமே திகிலளிப் பதாகவும் அச்சமூட்டுவதாகவும் இருந்தன.

அப்பா பணிவோடு தாம்பூல மூங்கில் தட்டை மந்திரவாதியிடம் தந்து விட்டுத் தரையில் விழுந்து வணங்கினார். "நீயும் வணங்கு" என்று மாதுவையும் வணங்கும்படி இழுத்தார்.

மாது வணங்கவில்லை. ஏமாற்றிப் பணம் பறிக்கும் இடத்திற்கு அப்பா நம்மைக் கொண்டு வந்து தானும் வகையாகச் சிக்கிக் கொண்டு விட்டார். இவர்கள் மேலும் மேலும் பணம் கேட்காமல் இருக்க மாட்டார்கள். வீட்டில் இருப்பதையெல்லாம் விற்று ஓட்டாண்டியாகப் போகிறார் அப்பா. அந்த நிலைக்கு இந்த மந்திரவாதி அப்பாவை அடிமையாக்கிக் கொள்ளப் போகிறான் என்று மனதில் ஓடிய எண்ண அலைகளின் காரணமாக மனமின்றி வணங்காமல் இருந்தான்.

மாதுவின் வணங்காத செயலே மந்திர வாதிக்கு அனுகூலமாகி விட்டது.

"பார்த்த மாத்திரத்திலேயே தெரிகிறது. மண்டைக்குள் காட்டேரி குடியிருக்கு. அது இடத்தைக் காலி பண்ணாதவரை இப்படித் தான் யாருக்கும் பணியாமல் திமிர் பிடித்தவனாக இருக்க வைக்கும்" என்று பயங்கரமாக நகைத்த மந்திரவாதி தனது சீடர்களைப் பார்த்து ஏதோ சைகை செய்தார். உடனே இரு முரட்டுச் சீடர்கள் பக்கத்திற்கு ஒருவராக வந்து மாதுவைப் பிடித்துக் கொண்டனர். மூன்றாவது ஆள் ஒரு கனத்த துணியைக் கொண்டு வந்து மாதுவின் வாயை அசைக்க முடியாதபடி கட்டினான்.

இன்னொரு முரட்டுச் சீடர் மூக்குக் கிண்டி ஒன்றை எடுத்து வந்து பயபக்தியோடு மந்திரவாதியிடம் தந்தான்.

"இந்தப் புனிதமான மந்திர நீர் பட்டதும் தலையில் குடியிருக்கும் காட்டேரி என்னமாகத் தவிக்கப் போகுது பாருங்க" என்று அட்டகாசமாகக் கூறிய மந்திரவாதி அந்த மூக்குக் கெண்டியில் இருந்து நீரைக் கையில் சரித்துக் கொண்டு 'ஜெய் பத்ரகாளி. இரிசி காட்டேரியை ஓடவையும்மா" என்று அந்த நீரை மாதுவின் முகத்தில் அடித்தார்.

அது ஐஸ் தண்ணீர். பனிக்கட்டியாகும்

நிலையில் இருந்தது. திடீரென்று ஜில்லிப்பு நீர் முகத்தில் வந்து அப்பியதும் மாது துடித்துப் போனான். கைக் கட்டுகளை விடுவித்துக் கொள்ளத் திமிறினான்; குதித்தான்.

"புனிதமான மந்திர நீர் பட்டதும் என்ன மாய்த் துடிக்கிறான் பாருங்க! எல்லாம் காட்டேரியோட தவிப்புதான்!" என்று மிதப்பலாகக் கூறிய மந்திரவாதி மறுபடி கெண்டி நீரைச் சரித்து கையில் வாங்கி மாதுவின் முகத்தில் அடித்தார்.

மாது மேலும் திமிறினான். கத்த முயன்றும் முடியாமல் திமிறினான். "பையன் நாற்பது நாள் இங்கே நம்ம கண்காணிப்பில்தான் இருக்கணும். மூணு வேளை தினமும் மந்திர நீரைத் தெளித்து கயிறு கட்டணும். இன்னும் ஐந்தாயிரம் செலவாகும். ஆனால் அதை உடனே தர வேண்டாம். பையனுக்குக் குணமாகி திரும்ப வீட்டுக்கு அழைச்சுக்கிட்டுப் போகும் போது தரலாம்" என்றார்.

அப்பாவின் முகத்தில் நிம்மதி நிறைந்தது. மந்திரவாதி எத்தனை பெரிய நம்பிக்கை தந்திருக்கிறார்.

"ஏதோ இந்த அளவு பெரிய மனசு பண்ணினதே நாங்க செஞ்ச பாக்கியம்" என்று பணிந்து மாதுவின் அருகே வந்தார். "மாது, ஐயாவால் ஆகாத செயல் எதுவும் இல்லே. அவர் என்ன சொல்றாரோ அதன் படி கேட்டு நல்ல பிள்ளையாக நட. உன்னைப் பிடித்திருக்கும் காட்டேரியை இவர் விரட்டி உன்னைப் பூரண குணமாக்கி விடுவார். நான் வரேன்" என்று திரும்பினார் துண்டால் கண்களைத் துடைத்தபடி.

"ஐயா" என்று அழைத்த மந்திரவாதி, "மீதி ஐயாயிரம். அதோடு இப்போ தர வேண்டிய



பாக்கி ஆயிரம். மறந்துடாதீங்க" என்று நினைவு படுத்தினார்.

அப்பா தலையை ஆட்டிவிட்டு வெளியே சென்றார்.

'அட பாவிங்களா, ஜில் தண்ணியை திடீர்னு முகத்தில் அடிச்சால் திமிறி ஆடாமல் என்னடா பண்ணுவான்? அதுக்குப் போயி காட்டேரியைக் காரணம் சொல்லிப் பணம் பறிக்கறீங்களே? அதை எடுத்துச் சொல்ல முடியாம வாயைக் கட்டிட்டீங்களே, அப்பா என்னை இங்கே விட்டுட்டுப் போகாதீங்க. இங்கே நடந்திருப்பது எல்லாம் பணம் பறிக்கும் மோசடி. மறுபடியும் கடன் வாங்காதீங்க, எனக்கு ஒன்னும் இல்லை. நான் சரியாகத்தான் இருக்கிறேன்' என்று கத்த மாது துடித்தான்; திமிறினான். தன்னைப்



"தமிழ் ஆசிரியர் நாலு அடி போட்டாரா, ஏன்?"

"'நாலடியார்' செய்யுளைச் சரியாகச் சொல்லாததால்தான்!"

— பாண்டமங்கலம் ஜி. குமரேசன்

பிடித்திருந்தவர்களைத் தள்ளி விட்டுப் பாய்ந்தோட முயன்றான். பிடித்துக் கொண்டிருந்த முரடர்களின் பிடியில் இருந்து ஒரு சிறுவனால் எப்படித் தப்பிக்க முடியும்?

"இவனுக்கு சோறு தண்ணி தராதீங்க. தனி அறையில அடைச்சு வையுங்க. விளக்கு வைச்சதும் நான் வந்து மந்திரிக்கிறேன்" என்றார் மந்திரவாதி. மாதுவை இழுத்து வந்து ஒரு தனி அறையில் அடைத்து வைத்தார்கள்.

தனி அறையிலே அடைபட்ட மாது நன்றாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான் தான் எண்ணியதை நிறைவேற்ற ஒரு திட்டம் போட்டான். மந்திரிக்க மந்திரவாதி வருவதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான்.

மாலையில் விளக்கு வைத்ததும் மந்திரவாதி முரடர்களான சீடர்கள் புடைசூழ அவனுடைய அறைக்குள் வந்தார். மாது தரையில் விழுந்து வணங்கினான்.

"பரவாயில்லையே. ஒரே வேளை புனித மந்திரத் தீர்த்தத்திலேயே இத்தனை பணிவு வந்திட்டுதே!" என்று வாய்விட்டு மகிழ்ந்த மந்திரவாதி. "கட்டுகளை அவிழ்த்து விடுங்கள்" என்று உத்தரவிட்டார்.

மாதுவின் கட்டுகள் எல்லாம் அவிழ்க்கப்பட்டன. அவன் எதிர் பார்த்ததும் அதைத்தானே? மாது பணிவோடு மந்திரவாதியின் எதிரே அமர்ந்து கொண்டான்.

"காட்டேரி இனிமேல் இந்தப் பையனை விட்டு ஓடிவிட வேண்டும். உனக்கு என்ன வேண்டும் கேள். வரவழைத்துத் தருகிறேன். வாங்கிக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் ஓடிவிட வேண்டும். என்ன சொல்றே?" என்று கால்மேல் கால் போட்டுக் கொண்டு கேட்டார் மந்திரவாதி.

"பசிக்கிறது சாப்பிட வேண்டும்."

இடியிடியென்று சிரித்த மந்திரவாதி சீடர்களைப் பார்த்தார். அடுத்த ஐந்தாவது நிமிடம், தட்டு நிறைய சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், ஓமப்பொடி வந்தது. இரண்டு பொங்கலையும் அமைதியாகத் தின்று முடித்த மாது ஓமப்பொடியை பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டான்.

"மந்திரிக்கணும். பணிந்து மண்டிபோட்டு உட்கார்" என்று மந்திரவாதி உத்தரவிட, அப்படியே பணிந்தான் மாது.

மாது எதிர்பார்த்த அந்த வாய்ப்பு உடனே வந்தது. மந்திரவாதி இரும்பாலான தனது மந்திரக்கோலை எடுத்து அவன் தலையில் வைத்தார்.


"இனிமேல் உங்களுக்கு இந்தப் பையனிடம் வேலையில்லை. போய் மற்ற கேஸ்களைக் கவனிங்க" என மந்திரவாதி இட்ட உத்தரவை ஏற்று பணியாளர்கள் சென்றனர். கதவுகள் எல்லாம் திறந்தே இருந்தன.

தனது இரண்டு உள்ளங்கைகளையும் ஒன்றாகத் தேய்த்துக் கொண்ட மாது அந்த மந்திரக் கோலைப் பிடித்தான். அவ்வளவுதான். மின் இணைப்பு ஏற்பட்டு மந்திரவாதி அலறித் துடித்தார். மாது இரு கைகளாலும் மந்திரக் கோலைப் பிடித்தபடி வாசலை நோக்கி ஓடினான். எதிரே அவனைப் பிடிக்க வந்தவர்கள் எல்லோருக்குமே மந்திரவாதிக்கு ஏற்பட்ட அதே மின் அதிர்ச்சி ஏற்பட எல்லோரும் அலறித் துடித்து ஒதுங்கினர்.

'விடுதலை விடுதலை விடுதலை!' என்று ஆடிப்பாட வேண்டும்போல் தோன்றியது மாதுவுக்கு. அடிமைப் பட்டுக் கிடந்தவர்களுக்குத்தானே விடுதலையின் அருமை தெரியும்!

தாம்பரம் ரயில் நிலைய பிளாட்பாரத்தில் மந்திரக்கோலை வளைத்து வீசியெறிந்து விட்டு, மாது ஓமப்பொடிப் பொட்டலத்துடன் ரயிலேறி விட்டான். அவன் விடுதலைப் பாடலைப் பாடியபோது இதைவிட இன்னும் மோசமான ஒரு ஆபத்தில் சிக்கிக் கொள்ளப் போகிறோம் என்பதை அறியவில்லை.

(வளரும்)




"நாவலாசிரியரை ஜோக் எழுதச் சொன்னது தப்பாப் போச்சு."

"ஏன்?"

"ஒரே ஜோக்கை எழுபது பக்கம் எழுதிட்டாரே!"

— பாசி. கோகுலன்




"அவர் ஹோட்டலில் எதுக்குச் சூடாப் பேசினாராம்?"

"ஆறிப்போன இட்லி பரிமாறி னாங்களாம்!"

— ஜி. கணேசன்

ஹா ஹா ஹா!




"இந்தக் கதையில் விழுந்து விழுந்து சிரித்தான்னு தப்பா போட்டிருக்காங்கடா."

"வேற எப்படி போடணும்?"

"விழுந்து, எழுந்து, மறுபடி யும் விழுந்து சிரித்தான்னுதான் போடணும்!"

— பா. ஜெயக்குமார்.

ஹா ஹா ஹா!



"நான் நிலாவிற்குப் போவேன்."

"அங்கே காற்று இல்லையே, என்ன பண்ணுவே?"

"ஃபேன் போட்டுக்குவேன்!"

— தாரை மா. மகேஷ்ப்ரியன்





"அந்த வண்டுக்கு மட்டும் ஏன் இத்தனை பாதுகாப்பு?"

"'பொன்' வண்டாம்!"

— நெ. இராமன்

கி. உமாமகேஸ்வரி,
ஒன்பதாம் வகுப்பு,
அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி,
ஆண்டிபட்டி.
தேனி மாவட்டம்





கே. பிரேமா,
எஸ். ஆலங்குளம்,
மதுரை – 17



எம். பாரதி
கரூர்

பா. காமாட்சி, பெரம்பூர்






ஆர். சித்ரா,
கதிராமங்கலம் (அஞ்சல்)
திருவிடை மருதூர்.


கோலப் போட்டி முடிவுகள்!



நந்தினி,
ஆறாம் வகுப்பு, திருச்சி.



ஆர். மணிகண்டன்,
பத்தாம் வகுப்பு,
எஸ்.எம். உயர்நிலைப்பள்ளி,
சீர்காழி



எம். நாகலட்சுமி,
எட்டாம் வகுப்பு, திருச்சி.

ஓவியப் போட்டி முடிவுகள் அடுத்த இதழில் வெளியாகும்.

பரீட்சை எழுதி விட்டு வந்த நிமலனுக்கு மனசெல்லாம் சந்தோஷம் நிறைந்தது. அதற்குக் காரணம் இன்னும் ஒன்றரை மாதம் விடுமுறை என்பது மட்டுமல்ல. கிராமத்திலிருக்கும் தாத்தா, பாட்டியிடம் ஜாலியாகப் பொழுதைக் கழிக்கலாம் என்பதே.

மாலையில் அப்பா வீட்டிற்கு வந்ததும், "அப்பா, நான் தயார். ஊருக்குக் கிளம்பலாமா?" என்றான் நிமலன்.

"எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. நாளைக் காலையில் கிளம்பலாம்" என்றார் அப்பா.

தாத்தா, பாட்டியுடன் தங்குவது தாமதமாவது குறித்து சிறிது வருத்தப்பட்டாலும் 'சரி' என தலையாட்டி வைத்தான் நிமலன்.

மறுநாள் காலை கிளம்பினார்கள். ஊர் போய்ச் சேர மதியமாயிற்று. நிமலனைக் கண்டவுடன் தாத்தாவும் பாட்டியும் சந்தோஷத்தில் திக்குமுக்காடினார்கள்.

"நீ காலையே வருவேன்னு எதிர்பார்த்தேன்" என்றார் பாட்டி.

"பாட்டி பசிக்குது. சாப்பாடு வைங்க" என்றான் நிமலன்.

"குழம்பு, கூட்டு எல்லாம் தயார். சாதம் மட்டும்தான் வடிக்கணும். கொஞ்சம் பொறு" என்ற பாட்டி சமையலறைக்குள் சென்றார்.

நிமலனும் பின்னாலேயே சென்றான்.

பாட்டி பெரிய அண்டாவிலிருந்து அரிசியை அளந்து போட்டார். அளந்து போட்ட அரிசியிலிருந்து ஒரு கைப்பிடி அரிசியை எடுத்து பக்கத்திலுள்ள பானையில் போட்டு விட்டு, அரிசியைக் களைந்து கொதிக்கும் நீரில் போட்டார்.

நிமலனுக்கு பாட்டி ஒரு கைப்பிடி அரிசியைப் பானையில் போட்டது ஏன்? என்று ஒரே யோசனையாக இருந்தது.

மாலையில் அம்மாவும் அப்பாவும் ஊருக்குக் கிளம்ப நிமலன் கையசைத்து வழியனுப்பி வைத்தான்.

நிமலன் பாட்டி ஊருக்கு வந்து ஒரு வாரமாகி விட்டது.

"பாட்டி எனக்கு ஆப்பம் செய்து தாங்க" என்றான் நிமலன்.



"நாளைக்குக் காலையிலே ஆப்பம்தான் டிபன். இரு,-இப்பவே அரிசியை ஊறவைக்கிறேன்" என்று சொல்லி விட்டு அரிசியை அளந்து பாத்திரத்தில் போட்டார். பின், அதிலிருந்து ஒரு கைப்பிடி அரிசியை எடுத்து மண் பானையில் போட்டார் பாட்டி.

"பாட்டி! நானும் ஒரு வாரமா பார்த்துட்டு வரேன். எதுக்கு அந்த மண் பானையில் தினமும் அரிசியைப் போடறீங்க?" என்று கேட்டான்.

"இந்தப் பானை நம்ம வீட்ல மட்டும் இல்லை. இந்தக் கிராமத்திலே ஒவ்வொரு வீட்டிலேயும் இருக்கு. தினமும் ஒரு பிடி அரிசி எடுத்துப் போட்டுட்டே வருவோம். பானை நிறைந்தவுடனே ஏழை எளியவர்களுக்கு, ஆதரவற்றவர்களுக்கு அன்னதானம் வழங்குவோம். அதுக்குத்தான் இந்தத் திட்டம்" என்றார் பாட்டி.

"நம்மகிட்டேதான் பணம் இருக்கே. பணமாவே செய்யலாமே!" என்று கேட்டான் நிமலன்.

"நிமலா! உன் கேள்வி நியாயமானதுதான். நம்ம வேணா பணமா செய்யலாம். வசதி குறைந்தவர்களுக்குப் பணமாக செய்வது கஷ்டம். தினமும் இப்படி சேகரித்தால் சுமை அதிகமாகவும் தெரியாது. நாலு பேருக்கு உதவின திருப்தியும் ஏற்படும்

ஒரு பிடி அரிசி!



அல்லவா?" என்றார் பாட்டி.

நிமலனுக்கு இந்தத் திட்டம் பிடித்திருந்தது. நாட்கள் சென்றன.

நாளை பள்ளிக்கூடம் திறக்கிறது. அப்பா அவனை அழைத்துச் செல்ல வந்திருந்தார்.

நிமலன் தாத்தா, பாட்டியைப் பிரிந்து செல்ல மனம் இல்லாமல் அமர்ந்திருந்தான்.

"நேரமாச்சு. கிளம்பு நிமலா" என்றார் அப்பா.

"பாட்டி எனக்கு ஒரு மண் பானை வேணும்" என்றான் நிமலன்.

"எதுக்குடா?" என்றார் அப்பா.

"நம்ம வீட்டிலேயும் பிடி அரிசி பானை வைக்கத்தான்" என்றான் நிமலன்.

"ஊருக்குப் போயி பானை வாங்கித் தரேன். பஸ்ஸில் உடைந்து போய் விடும்" என்றார் அப்பா.

நிமலன் பாட்டி, தாத்தாவிடம் விடை பெற்றுச் சென்றான்.

— வி. ர. வசந்தன்

கடல் பாலூட்டிகள்!





உலகிலேயே மிகப் பெரிய பிராணி எது?

பூமியில் வாழும் உயிரினங்களில் மிகப் பெரிய பிராணி நீலத் திமிங்கலம்தான்! இவை 27 மீட்டர் நீளமும் 190 டன்கள் எடையும் கொண்டவை.

துருவக் கரடிகள் நீந்துமா?

துருவக் கரடிகள் ஆர்டிக் பிரதேசத்தில் வாழ்கின்றன. இவை தண்ணீரில் நன்றாக நீந்தி, நீண்ட தூரம் பயணம் செய்யும் இயல்புடையவை. குளிரைத் தாங்கவும், நீர் புகாமல் இருக்கவும் தடிமனான உரோமங்கள் உடலைச் சுற்றி மூடியுள்ளன.



வால்ரஸ்களுக்குத் தந்தம் இருப்பது ஏன்?

வால்ரஸ்களின் தந்தம் என நாம் குறிப்பிடுவது அவற்றின் மேல்தாடையில் இருக்கும் நீண்ட இரு பற்களைத்தான். தந்தங்கள் ஒரு மீட்டர் நீளம் வரை இருக்கும். ஆண் வால்ரஸ்கள் பெண் வால்ரஸ்களைக் காட்டிலும் நீண்ட தந்தங்களைப் பெற்றிருக்கும். இத் தந்தங்களின் உதவியால் ஓட்டிற்குள் வாழும் மீன்களைத் தாக்கிச் சாப்பிடும். மேலும் பனிக்கட்டியில் தந்தங்களை ஊன்றி நகர்வதற்கும், எதிரிகளுடன் சண்டையிடவும் தந்தம் உதவுகிறது. தந்தங்களின் நீளத்தை வைத்து வால்ரஸ்களின் வயதை கணித்து விடலாம். நீளமான தந்தங்களுடைய வால்ரஸ் தன் குழுவிற்கு தலைமை தாங்கும்.



கடல் பசுவின் உணவு என்ன?

Dagong என்று அழைக்கப்படும் கடல் பசு ஒரு பாலூட்டி. தென்மேற்கு பசிபிக் கடலில் வெதுவெதுப்பான நீரில் வாழ்கின்றன.

ஆழமற்ற பகுதிகளில் வளர்ந்திருக்கும் கடற் தாவரங்களையே உணவாக உட்கொள்கின்றன. கடற்பசுவும் நன்றாக நீந்தும். தட்டையான வால் நீந்த உதவுகிறது.



குளிர்காலங்களில் திமிங்கலங்கள் இடப்பெயர்ச்சி செய்யுமா?

ஆமாம். வட அட்லாண்டிக் பகுதிகளில் வாழும் பாட்டில் மூக்கன் என்ற திமிங்கலம் குளிர்காலங்களில் மித வெப்பமான நீரை நோக்கி இடப்பெயர்ச்சி செய்கின்றன. அதாவது கிழக்கு ஆப்பிரிக்க கடற்கரை மற்றும் மேற்கு நியூயார்க் கடற்கரைகளை நாடிச் செல்கின்றன. கோடை காலம் வந்தவுடன் மீண்டும் வட அட்லாண்டிக் பகுதிக்குத் திரும்பி விடுகின்றன


கடல் சிங்கத்திற்கும் சீல்களுக்கும் என்ன வித்தியாசம்?

கடல் சிங்கமும் சீல் குடும்பத்தைச் சார்ந்தவைதான். ஆனால் இவற்றிற்கு சிறிய காதுகள் உண்டு. மற்ற சீல்களுக்கு வெளிக் காதுகள் கிடையாது. கடல் சிங்கம் முன்புறமுள்ள கால்களை நீந்தப் பயன்படுத்தும். சீல்கள் பின்புறமுள்ள தட்டையான வாலை நீந்தப் பயன்படுத்திக் கொள்கின்றன.



டாக்டர் தரும் மருந்துகளில் பாதியளவு சாப்பிட்டால் போதுமா?





● ஆ. தமிழ் துரைசாமி, பாலசமுத்திரம்.

? கொசுக்கடியினால் காலரா, மலேரியா போன்ற நோய்கள் வராமல் தடுக்க முன் கூட்டியே தடுப்பூசிகள் போட்டுக் கொள்ள முடியுமா?

! கொசு கடித்தால் மலேரியா வரும்; டெங்குக் காய்ச்சல் வரும்; யானைக்கால் நோய் வரும்; காலரா வராது. 'விப்ரியோ காலரே' (Vibrio Cholerae) என்றழைக்கப்படுகிற பாக்டீரியா கிருமிகள் குடிநீர், உணவு மூலம் நம்மை அடைந்தால் காலரா வரும். காலராவைத் தடுக்கத் தடுப்பூசி உள்ளது. அரசு மருத்துவமனைகளில் இது இலவசமாகக் கிடைக்கும். ஒரு மாத இடைவெளியில் மொத்தம் இரண்டு ஊசிகள் போட்டுக் கொண்டால் ஓராண்டிற்குக் காலரா நெருங்காது என்று சத்தியம் செய்யலாம்; ஆனால், அடுத்த ஆண்டில் மறுபடியும் இரண்டு ஊசிகள் போட்டுக் கொள்ள வேண்டும். இனி, மலேரியாவுக்கு வருவோம். மலேரியாவுக்கு இன்னமும் தடுப்பூசி கண்டுபிடிக்கப் படவில்லை. கொசுக்கடியிலிருந்து தப்பிப்பது தான் இப்போதைக்கு உள்ள தடுப்பு ஏற்பாடு. இதற்குக் கொசுவலை, கொசு விரட்டி, கொசுவர்த்தி, கொசு மருந்து என்று எதை வேண்டுமென்றாலும் உபயோகிக்கலாம்; சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொண்டால் கொசுவே வராது; இதுதான் மலேரியாவைத் தடுக்கத் தலை சிறந்தத் 'தடுப்பூசி!'

● அ. சங்கீதா, மோகனூர் (நாமக்கல்).

? மாலைக் கண் நோய் ஏற்பட என்ன காரணம்?

! வைட்டமின் ஏ சத்து தேவைக்கும் குறைவாக இருந்தால் மாலைக்கண் நோய் (Night blindness) ஏற்படும். அதாவது, இந்த நோயுள்ள நபர் மாலை நேரம் ஆகிவிட்டால் பார்வை தெரியாமல் சிரமப்படுவார். இதற்கானக் காரணத்தை நீ புரிந்து கொள்ள வேண்டுமென்றால் நம் விழித்திரையை (Retina) உனக்கு அறிமுகப்படுத்த வேண்டியது அவசியம். விழிக்கோளத்தின் முன்புறம் லென்ஸ் உள்ளது. பின்புறம் விழித்திரை உள்ளது. விழித்திரையில் ராட்ஸ் (rods) கோன்ஸ் (cones) என்ற இருவகை நிறமிகள் உள்ளன. லென்ஸ் வழியாக ஒளிக்கதிர் விழிக்குள் நுழைந்து விழித்திரையில் பிம்பமாகும்போது, இந்த நிறமிகள்தான் பிம்பத்தை மின்சிக்னலாக மாற்றி பார்வை நரம்பு மூலம் மூளைக்கு அனுப்புகின்றன. மூளை நமக்குப் பார்வையைத் தருகிறது. முதலில் சொன்ன நிறமிகளில் கோன் என்பவை பகலில் பார்வை தெரிவதற்கும், ராட்ஸ் என்பவை இருட்டில் பார்வை தெரிவதற்கும் உதவுகின்றன. ராட்ஸ் உற்பத்திக்கு வைட்டமின் ஏ அவசியம். இந்தச் சத்து குறைந்து போனால் ராட்ஸ் உற்பத்தியும் குறைந்து விடும். அப்போது நம் பார்வை குறையும் – குறிப்பாக மாலை



கேட்கட்டுமா டாக்டர்?



நேரத்தில்! இரவில்! இதுதான் மாலைக்கண் நோய். வைட்டமின் ஏ சத்து நிறைந்த காரட், பப்பாளி, மாம்பழம், கீரை, மீன் எண்ணெய், நெய், வெண்ணெய், பால், முட்டை, ஈரல் போன்ற உணவுகளை உட்கொண்டால் மாலைக்கண் நோய் வராது.

● எம். அகல்யா, சாத்தனூர்.

? உடலில் அரிப்பு ஏற்படும்பொழுது அந்த இடத்தைச் சொரிந்தால் உடனே அரிப்பு நின்று விடுகிறதே, எப்படி?

! முள்ளை முள்ளால் எடுக்கின்ற வித்தை இது. விவரம் கூறுகிறேன், கேள். தோல் அணுக்கள் சேதப்படும் போது 'ஹிஸ்டமின்' என்ற பொருள் உற்பத்தியாகிறது. அது நரம்பணுக்களை அரிக்க, அந்த செய்தி மத்திய நரம்புகள் வழியாக மூளைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இதன் விளைவாகத் தோலில் அரிப்பு ஏற்படுகிறது. உடனே நாம் அந்த இடத்தைச் சொரிகிறோம். சொரிவதால் ஏற்படுகின்ற அழுத்தமும் அதே மத்திய நரம்புகள் வழியாகவே செல்ல வேண்டும். இந்த நரம்புகளில் உள்ள ஒரு விசேஷம், ஒரே நேரத்தில் ஒரு செய்தி மட்டுமே எடுத்துச் செல்லப்படும். ஆகவே, சொரிகின்ற செய்தி மூளைக்குச் செல்லும் போது, ஹிஸ்டமின் அரிக்கின்ற செய்தி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது. இதனால்தான் அரிப்பு குறைந்த மாதிரி நமக்குத் தோன்றுகிறது. தொடர்ந்து சொரியச் சொரிய - நேரம் ஆக ஆக - ஹிஸ்டமினின் வீரியம் குறைந்து விடும். இதன் காரணமாக அரிப்பு முழுவதுமாக நின்று விடும்.



● இரா. பார்த்திபன், சேத்துப்பட்டு.

? நீரிழிவு நோயைத் தடுப்பது எப்படி?

! நீரிழிவு நோய் பெரும்பாலும் பாரம்பரியம் காரணமாகத்தான் வருகிறது. ஆகவே, பரம்பரையாக நீரிழிவு நோய் உள்ள குடும்பத்தில் திருமணம் செய்வதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்; உறவுத் திருமணங்கள் ஆகாது; நீரிழிவு நோய் வருவதற்கு வாய்ப்புள்ளவர்கள் சிறுவயதிலிருந்தே அளவான உணவு, சீரான உடல் எடை, தேவையான அளவிற்கு உடற்பயிற்சி ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். முக்கியமாக, இனிப்பு அதிகம் சாப்பிடக் கூடாது; உடற்பருமன் ஆகி விடக் கூடாது: சோம்பேறித்தனமாக இருக்கக் கூடாது; மன அழுத்தம் ஆகாது. இவற்றையெல்லாம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்தால் நீரிழிவு நோயை எளிதில் தடுத்து விடலாம்.

● பி. அனுப்ரீதி பாலாஜி, சென்னை - 77.

? டாக்டர் தரும் மருந்துச் சீட்டில் உள்ள எல்லா மருந்துகளையும் சாப்பிட வேண்டுமா? அதில் பாதி சாப்பிட்டாலே நமக்கு குணமாகி விடுகிறதே... அத்தோடு நிறுத்தி விடலாமா?

! தலைவலி, காய்ச்சல் போன்ற நோய் அறிகுறிகளுக்காகத் தரப்படும் மாத்திரைகளை வேண்டுமானால் அந்த அறிகுறிகள் மறைந்ததும் நிறுத்தி விடலாம். ஆனால், நோயின் அடிப்படைக் காரணத்தைக் களைவதற்காகத் தரப்படும் மாத்திரைகளைக் குறிப்பிட்ட காலத்திற்குத் தொடர்ந்து சாப்பிட வேண்டும். அப்போதுதான் நோய் முழுமையாக குணமாகும். இல்லையென்றால் மறுபடியும் நோயின் பாதிப்பு துவங்கி விடும். இப்படி அடிக்கடி அரைகுறையாக மாத்திரை சாப்பிட்டால் குறிப்பிட்ட அந்த மாத்திரைகளையே எதிர்த்துப் போராடக் கூடிய சக்தி நோய்க் கிருமிகளுக்கு வந்து விடும். பிறகு, அந்த மருந்து பயன்படாது. அதை விட வீரியம் கூடிய மருந்தைத் தர வேண்டிய அவசியம் ஏற்படும். இதனால் வீண் செலவு ஒருபுறம்; நோய் நீடிப்பது மறுபுறம்! தேவையா, அனு?

டாக்டர் கு. கணேசன்



வாதாபி ஜீரணமாகி விடு!

விதர்ப்ப தேசத்து அரசர் காவேரன் புத்திரப்பேறு வேண்டி பிரம்மாவை நோக்கித் தவம் இருந்தார். அப்போது அகஸ்தியர் அங்கே வந்தார்.

"காவேரா! உனக்கு ஒரு பெண் குழந்தை பிறக்க நான் வரமளிக்கிறேன். அதற்கு ஒரு நிபந்தனை. அவளை எனக்கு மணம் செய்து தர வேண்டும்" என்றார்.


மன்னர் சம்மதித்தார்.

பட்டத்தரசிக்கு பத்தாவது மாதம் ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தையின் அழகை வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது. குழந்தைக்கு லோபா முத்திரை என்று பெயர் சூட்டினர். குழந்தை வளர்ந்து திருமண வயதை அடைந்ததும் அகஸ்தியர் வந்தார். காவேர மன்னனுக்கு, 'இந்தக் குள்ள முனிவருக்கா அருமையாய் வளர்த்த மகளைக் கொடுப்பது' என்ற ஆற்றாமை.



ஆர். பொன்னம்மாள்

லோபாமுத்திரை தந்தையிடம், "அப்பா, உருவத்தை வைத்து எவரையும் குறைத்து மதிப்பிடக் கூடாது. பார்வதி, பரமேஸ்வரரின் திருமணத்தின் போது உலகிலுள்ள அனைவரும்



கூடியதால் வடதிசை தாழ்ந்து போக, அகஸ்திய முனிவரை தென்திசைக்கு அனுப்பி உலகை சமமாக்கினார் ஈஸ்வரன் என்று சொல்லி இருக்கிறீர்கள்! ஒருவர் உலகத்தை சமமாக்க உதவினார் என்றால் அவர் சாமானியப்பட்டவராக இருக்க மாட்டார்! இவரது சாபத்துக்குப் பயந்து எவருமே என்னைப் பெண் கேட்டு வரவில்லை! எனக்குத் திருமணம் நடக்காவிட்டால் அது உங்களுக்கு அவப்பெயரைத் தராதா? முனிவர் கோபத்துக்கு ஆளாகாமல் இவருக்கே என்னை மணம் முடியுங்கள்! வனவாசமானாலும் ஆனந்தமாக இருக்க என்னால் முடியும்" என்றாள்.

மகளின் விவேகமான பேச்சைக் கேட்டு மன்னர் பூரித்தார். அகஸ்தியர் – லோபாமுத்திரை திருமணம் முறைப்படி நடந்தது.

வனத்துக்குப் புறப்பட்ட மனைவியிடம், "பிரியே! நான் முனிவன். காட்டில் என்னோடு வாழப் போகும் உனக்கு பட்டாடைகளும், நகைகளும் பொருத்தமாயிருக்குமா?"

என்று கேட்டார் அகஸ்தியர்.

அனைத்தையும் கழற்றி விட்டு, மரவுரி உடுத்து புன்னகையோடு பின் சென்றாள் லோபா முத்திரை. வனத்தில் அகஸ்தியர் மனம் கோணாமல் அவரது தவ வாழ்க்கைக்கு உறுதுணையாய் இருந்தாள்.

அகஸ்தியரின் மனம் பூரித்தது.

ஒருநாள், "சௌந்தரியவதி! நான் இப்போது பூரண மகிழ்ச்சியோடிருக்கிறேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றார்.

லோபா முத்திரை, "ஸ்வாமி! அழியாப் புகழ் பெற வேண்டும்; முடிந்தவரை பிறருக்கு உதவியாக வாழ வேண்டும் என்பது என் ஆசை" என்றாள்.

அவளை நீராக்கிக் கமண்டலத்தில் நிரப்பினார். "காவேர மன்னனின் தவப் புதல்வியே! இன்று முதல் உன் பெயர் காவேரி. பொன்னைப் போன்ற நிறமுடையவளாதலால் உன்னைப் பொன்னி என்றும் அழைப்பர். சோழ நாடு மழையின்றி வாடி இருக்கிறது. வா போகலாம்" என்று சோழ நாட்டுக்குப் புறப்பட்டார்.

சீர்காழியில் பாவம் தொலைய சிவபூஜை செய்து கொண்டிருந்தான் இந்திரன். நாரதர் அவனிடம் வந்து, "அகஸ்தியரின் கமண்டலத்தில் காவிரி இருக்கிறாள். அவள் இங்கே விரிய விநாயகரை வழிபடு. உன் பாவம் தொலையும்" என்றார்.

நாரதர் சொற்படி கணபதியை பூஜித்தான் இந்திரன். கணேசர் பிரத்யட்சமானார். இந்திரன் தன் பாவம் தொலைய காவிரி பெருக தானும் ஒரு காரணமாக வேண்டும் என்று வேண்டினான்.

கணேசர் ஒப்புக் கொண்டு ஒரு காக்கை வடிவத்தில் சைய மலையில் காத்திருந்தார். சிவ பூஜையில் முழு ஈடுபாட்டுடன் அகஸ்தியர் இருந்த சமயத்தில் காகம் கமண்டலத்தைச் சாய்த்தது. கமண்டலத்திலிருந்த காவேரி வெளிப்பட்டு ஓடினாள். நிஷ்டை கலைந்த அகஸ்தியர் திரும்பிய போது சிறு பையனாக மாறிய விக்னேஸ்வரர் ஓடிக் கொண்டிருந்தார். ஓடிப் போய் பிடித்த அகஸ்தியர் குட்டக் கை ஓங்கிய போது பையன் விக்னேஸ்வரராகக் காட்சி அளித்தார்.

ஓங்கிய கையை நிறுத்தாமல் தன் தலையில் குட்டிக் கொண்டார் அகஸ்தியர்.

"உங்களைப் போல் யார் நெற்றியில் குட்டிக் கொண்டாலும் அவர்களுக்கு அருளுகிறேன். நீங்கள் போய் வாதாபியை ஜீரணித்து விட்டு வாருங்கள்" என்றார் கணபதி.

அதன்படி வாதாபியும், அவன் சகோதரன் இல்வலனும் இருக்கும் காடு நோக்கி வந்தார் அகஸ்தியர்.

தான் கொன்றவர்களை மறுபடி உயிர்ப்பிக்கும் வரம் பெற்றவன் இல்வலன். வாதாபியைக் கொன்று சமைத்து உணவில் கலந்து விடுவான். தவசிகளையும், ரிஷிகளையும் விருந்து, அதிதி உபசாரம் என்று அழைத்துப் பரிமாறுவான். விருந்து முடிந்ததும், "வாதாபி! வா" என்றழைப்பான்.

வாதாபி உண்டவர்கள் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளிப்படுவான். இப்படி அந்தணர் கூட்டத்தை அழிப்பது அவர்கள் கொள்கையாக இருந்தது.

அகஸ்தியரைக் கண்டதும் போலி அன்புடன் அழைத்து உபசரித்து உணவிட்டான் இல்வலன். அகஸ்தியர் சாப்பிட்டு ஏப்பம் விட்டார். வயிற்றைத் தடவிக் கொண்டு, "வாதாபி! ஜீரணமாகி விடு" என்றும் கூறினார்.


இல்வலன் பயந்தபடி, "வாதாபி! வந்து விடு! வாதாபி! ஏன் தாமதம்?" என்றெல்லாம் கூப்பிட்டுப் பார்த்தான்.

அகஸ்தியர் சாவதானமாக, "ஏனப்பா கத்துகிறாய்! வாதாபி ஜீரணமாகி விட்டான். இனி மேல் வரமாட்டான்" என்றார்.

இல்வலன் அகஸ்தியர் காலடியில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

காட்டிலுள்ள வேதியர்கள் அகஸ்தியரின் கருணையால் தங்கள் பயம் தொலைந்ததென்று போற்றினார்கள். அவர், அருமை மனைவியை நதியாக்கி நாட்டுக்கே நன்மை செய்ததைத் தேவர்களும் பாராட்டினார்கள். காவேரியாக மாறிய லோபா முத்திரையின் பெருமை காலம் உள்ளளவும் அழியாது.

''மூன்று ஆறுகளின் பெயரைச் சொல்!''
''பதி'னாறு', இருபத்'தாறு' முப்பத்'தாறு'!''
– ஜி. குமரேசன்






கோகுலம் க்விஸ்


1. பூஜியத்தைக் கண்டறிந்தவர்கள் __________
2. உலகில் இரண்டாவது பெரிய கடல் __________
3. சர்க்கரை அதிகம் உற்பத்தி செய்யும் நாடு __________
4. இந்திய சினிமாவின் தந்தை __________
5. கிவி பறவை __________ நாட்டில் காணப்படுகிறது.
6. கேரளாவின் இரட்டை நகரங்கள் __________, __________
7. நைல் நதி __________ நாட்டில் பாய்கிறது.
8. மிகப் பெரிய பாலைவனம் __________
9. 1999 ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடைபெற உள்ள நாடு __________
10. 26 ஆண்டுகள் சிறையில் இருந்த தென்ஆப்பிரிக்கத் தலைவர் __________


இங்கு பத்து கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பத்து கேள்விகளுக்கும் சரியான பதில்களைக் கண்டுபிடித்து எழுதி, முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்ப வேண்டும். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியையும் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்கு பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.


முடிவு தேதி 31.3.99

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை- 97.




ஏமாந்த மீன்கள்
கதை : ஜேடி. மூர்த்தி
படம் : சசி
மழையால் ஆறு நிரம்பியிருந்தது.
ஒரு வாரமா நல்ல மழை!
ஆம் அரசே!
அங்கே பாருங்கள்! மீன் குஞ்சுகள் சந்தோஷத்தில் துள்ளி விளையாடுகின்றன. நாம் எச்சரிக்கையா இருக்கணும்.
மந்திரியாரே மீன் குஞ்சுகளை அழைத்து வாருங்கள்.
அரசர் அழைக்கிறார். உடனே வாருங்கள்.
வணக்கம் அரசே!
வணக்கம். வெள்ளம் கரைபுரண்டு ஓடுது. ஆற்றை விட்டு வெளியே செல்லாதீர்கள்.
நாங்க இங்கேயே பத்திரமா விளையாடறோம்.
சரி. நீங்கள் போகலாம்.


மறுநாள் மீன் குஞ்சுகள் கூடின.
இந்த ஆற்றில் வாழ்ந்து சலிப்பேற்பட்டு விட்டது.
ஆமாம்.
ஆமாம்.
எங்கே போகலாம்?
கரையைத் தாண்டி தண்ணீர் வெளியே போகுது. நாமும் கிளம்பலாம்.
வாங்க. பெரியவங்க யாராவது பார்க்கிறதுக்குள்ள கிளம்பலாம்.
மீன் குஞ்சுகள் நீந்திச் சென்று ஒரு குட்டையை அடைந்தன.
அங்கே பாருங்கள். கறுப்பு நிறத்தில் தலை குண்டாக ஏதோ வருகின்றன.
ஆமாம்! யார் நீங்கள்?
நாங்களும் உங்களைப் போன்று மீன் குஞ்சுகள்தான்!
இந்தக் குட்டையில் ஊறியதால் இப்படியாகி விட்டோம்.
நாங்களும் இந்தக் குட்டையில் தங்கலாமா?
ம்... தாராளமா தங்கலாம்.
மீன் குஞ்சுகளைத் தேடி வந்த மீனரசன் —
தவளைக் குஞ்சுகளுடன் விளையாட்டா?
தவளைக் குஞ்சு இல்லை. நம்ம மீன் இனம்தான்.


உங்களை ஏமாற்றுகின்றன.
நாங்க இங்கேதான் இருப்போம்!
மழைக்காலம் போன பின் தண்ணீர் வற்றினால் உயிருக்கே ஆபத்து! வாங்க.
ம்... போகலாம்?
உங்களை மாதிரி பயந்தவர்கள் அல்ல நாங்கள்.
வருகிறவர்கள் வரலாம்.
மீனரசனின் பின்னால் பாதி மீன் குஞ்சுகள் மட்டும் சென்றன.
நாட்கள் சென்றன. ஒரு நாள் –
நம் அரசன் சொன்னது உண்மை தான்.
ஆமாம். அந்தக் குஞ்சுகள் பெரிய தவளைகளாகி விட்டன.
அங்கே பார்.
நம் இனத்தைத் தவளைகள் சாப்பிட ஆரம்பித்து விட்டன.
குட்டையில் மீன்களின் எண்ணிக்கைக் குறைந்தது.
தினமும் தவளைகளுக்குப் பயந்து வாழ வேண்டியிருக்கு.
மழைக் காலம் வந்தவுடன் ஆற்றுக்கு ஓட வேண்டியதுதான்!

ஈற்று வாக்கியப் போட்டியில் பரிசு பெற்ற கதை



இழிவுபடுத்தக் கூடாது!

சங்கரும் கோபாலும் நண்பர்கள். இருவரும் படிப்பில் மட்டுமின்றி ஓவியம், விளையாட்டு போன்ற துறைகளிலும் வல்லவர்கள்.

ஒரு வெளிநாட்டு நிறுவனம் பள்ளிகளில் ஓவியப் போட்டியை அறிவித்திருந்தது. ஒவ்வொரு பள்ளியிலும் முதல் இரண்டு பரிசுகளைப் பெற்ற ஓவியங்கள் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டு அவற்றில் மிகச் சிறந்த பத்து ஓவியங்களுக்குப் பரிசு அறிவிக்கப்பட்டிருந்தது.

சங்கரும் கோபாலும் போட்டிக்குத் தயாரானார்கள். போட்டியின் தலைப்பு 'இன்றைய இந்தியா'.

போட்டி நடந்து முடிந்தது. இந்தியத் தாயை ஊனமுற்றவளாக வரைந்து, கலவரங்களால் இன்றைய இந்தியத் தாய் ஊனமுற்று இருக்கிறாள் என்று காட்டியிருந்தான் கோபால்.

சங்கரோ உலக வரைபடத்தில் இந்தியாவை பெரிதாக வரைந்து 'இந்தியா ஒரு முன்னிலை நாடு' என்று காட்டியிருந்தான்.

போட்டியின் முடிவு அறிவிக்கப்பட்டது. முதல் பரிசு கோபாலுக்கும் இரண்டாம் பரிசு சங்கருக்கும் வழங்கப்பட்டது.

கோபால் தான் வரைந்த படத்தை சங்கரிடம் காட்டி, "எப்படி?" என்றான்.

"என்ன கோபால் இந்தியத் தாயை ஊனமா வரைஞ்சிருக்கே? நம் நாட்டை நாமே இழிவுபடுத்தலாமா?" என்று வேதனையுடன் கேட்டான் சங்கர்.

"இதில் என்ன தப்பிருக்கு? நம்ம நாட்டில் நடக்கிறதைத்தானே வரைஞ்சிருக்கேன்" என்றான் கோபால்.

"நாட்டில் நடக்கிறதை வரைஞ்சிருக்கே. ஆனால் இதை யோசித்துப் பார்த்தியா? இந்தப் படத்தை வெளிநாட்டிற்கு அனுப்பப் போறாங்க. அங்கே நம்மைப் பற்றி என்ன நினைப்பாங்க? ம்... நம்ம வீட்டு விஷயத்தை வெளியில் சொல்ல மாட்டோம். அது போலதான் நாடும். நமக்குள்ள எப்படி வேணுமானாலும் விமர்சிக்கலாம். ஆனால் அடுத்த நாட்டிற்கு நம்மை நாமே இழிவுபடுத்திக் காட்டக் கூடாது" என்றான் சங்கர்.

கோபால் விறுவிறுவெனச் சென்று தலைமை ஆசிரியரிடம் காரணத்தைக் கூறி படத்தை திருப்பித் தருமாறு கேட்டான்.

தலைமை ஆசிரியர் திகைத்து நின்றார்.

– கே. முத்துகுமார், இராஜபாளையம்.



ஆயிரக்கணக்கான மீன் இனங்கள் உலகில் வாழ்கின்றன. ஒவ்வொரு மீனும் நிறத்தில், உடலமைப்பில், பழக்கங்களில் வேறுபட்டு இருக்கின்றன. சில மீன்களின் வாழ்க்கை மிகவும் சுவாரசியமானது.

அத்தகைய மீன்களில் stickle back என்றழைக்கப்படும் முள் மீனும் ஒன்று.



இம்மீன்களின் முதுகில் கூர்மையான மூன்று முட்கள் நீட்டிக் கொண்டிருப்பதால் இவை 'முள்மீன்' என்று அழைக்கப்படுகின்றன.

முள்மீனை எதிரி தாக்க வரும்போது முதுகில் இருக்கும் முட்கள் நிமிர்ந்து விரைப்பாக நிற்கும். முட்களால் எதிரியின் வாயில் காயத்தை ஏற்படுத்தும். புண்பட்ட வேதனையில் எதிரி துடிக்கும் போது சாமர்த்தியமாக இந்த மீன் தப்பி விடும். இதனால் இவற்றை விட பெரிய மீன்கள் கூட தாக்குதல் நடத்துவதைத் தவிர்த்து விடுகின்றன.



இவை குழுக்களாக வாழும் இயல்புடையவை. ஒரு குழுவில் முப்பதிலிருந்து நாற்பது மீன்கள் வரை இருக்கும்.

முள் மீன்கள்!



வருடத்தில் பெரும்பான்மையான நாட்கள் ஒன்றாக வாழ்கின்றன. ஆனால் இளவேனிற் காலம் வந்தவுடன் இக்குழுவில் இருக்கும் ஆண் மீன்கள் தனியே கிளம்பி விடுகின்றன.

ஆண் மீன், கூடு கட்டுவதற்கு ஏற்ற இடத்தைத் தேர்ந்தெடுக்கும். அந்த இடத்தில் தன் தலையால் மணலைத் தோண்டி பள்ளத்தை ஏற்படுத்தும். பிறகு சிறிய தாவரங்களை அந்தக் குழியில் சேர்க்கும். இந்தத் தாவரங்களை வைத்து தன் உடலில் சுரக்கும் ஒரு வித பசையால் கூட்டை உருவாக்கும்.

கூடு உருவான பின் எக்காரணத்தைக் கொண்டும் இன்னொரு ஆண் மீனை தன் எல்லைக்குள் அனுமதிக்காது. அதையும் மீறி வேறொரு ஆண் மீன் கூட்டிற்கு அருகில் வந்தால் தனது வாயைத் திறந்து பற்களைக் காட்டி மிரட்டும். அப்படியும் அந்த மீன் நகரவில்லையென்றால் கூட்டை விட்டு வெளியே வந்து





தாக்க ஆரம்பித்து விடும். கூடு தயாரானவுடன் ஆண் மீன் குடும்பம் நடத்த பெண் மீனைத் தேடும். இந்த நேரத்தில் மட்டும் உடலில் பல வண்ணங்கள் ஏற்படும். சிவப்பு, சாம்பல், நீலம் மற்றும் பச்சை நிறங்களில் ஆண் மீனைப் பார்க்கவே அழகாக இருக்கும். இந்த வண்ணங்கள் பெண் மீன்களைக் கவர்வதற்காக இயற்கை அளித்துள்ள சிறப்பம்சமாகும்.




பெண் மீனைக் கண்டவுடன் ஆண் தன் வண்ணங்களைக் காட்டி நடனமாடும். பிறகு ஆணும் பெண்ணும் குடும்பம் நடத்தும்.

பெண் மீன் நூறு முதல் நானூறு முட்டைகள் வரை இடும். முட்டையிட்டவுடன் பெண்ணின் வேலை முடிந்து விடுகிறது. உடனே கூட்டை விட்டு வெளியேறி விடும்.


அப்பாவான ஆண் மீனே பொறுப்பு முழுவதையும் ஏற்றுக் கொள்கிறது. முட்டைகளைக் கவனமாகப் பாதுகாக்கும். முட்டைக்குள் வளரும் குஞ்சுகளுக்குத் தேவையான ஆக்ஸிஜனை அளிக்க முட்டைகளின் மேல்



எஸ். சுஜாதா



✸ வருடத்தில் பெரும் பான்மையான நாட்கள் ஆண்மீன், பெண் மீன்– இரண்டும் ஒரே நிறத்திலேயே காணப்படும். இனப் பெருக்கக் காலத்தில் மட்டும் ஆண் மீன் களுக்கு கண்கவர் வண்ணங்கள் உடலில் தோன்றும்.



தண்ணீரை அடித்துக் கொண்டேயிருக்கும்.

எட்டிலிருந்து பத்து நாட்களுக்குள் முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவருகின்றன. குஞ்சுகள் கூட்டைச் சுற்றியே நீந்திப் பழகுகின்றன. அப்பா மீன் கடுமையாக உழைத்து, உணவு தேடிக் கொண்டு வந்து குஞ்சுகளுக்குக் கொடுக்கும்.

அப்பாவின் கஷ்டத்தை உணர்ந்து கொண்ட குஞ்சுகள் இரண்டு வாரங்களில் தாமாகவே உணவு தேடிச் செல்கின்றன. சிறிய புழுக்கள், பூச்சிகளைப் பிடித்து உண்ணுகின்றன.

வளர்ச்சியடைந்த முள்மீன்களுக்கு புழு, பூச்சிகள் மற்றும் சிறிய மீன்களே உணவு.

குஞ்சுகள் அப்பாவை விட்டுப் பிரிந்து போய் வேறொரு குழுவில் சேர்ந்து விடுவதும் உண்டு.



✸ இவற்றின் கூடு வித்தியாச மானது. தலையும் வாலும் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும். உடல் மட்டும் கூட்டிற்குள் இருக் கும்.

✸ ஆண் மீன்களுக்கு சிவப்பு நிற மீன்களைக் கண்டால் பிடிக்காது. உடனே அம்மீன்களைத் தங்கள் எல்லையை விட்டே துரத்தி விடுகின்றன. விஞ்ஞானி களும் இம்மீன்களுக்கு சிவப்பு நிறத்தை அறியும் சக்தி இருப்பதாக தெரிவித்துள்ள னர்.

முள் மீன்களின் ஆயுட்காலம் ஒரே ஒரு வருடம்தான்! எனவே குஞ்சுகள் விரைவாக வளர்ந்து தங்களது சந்ததியைப் பெருக்குகின்றன.



✸ உப்பு நீரிலும் வாழும் இயல்புடையதால் ஆறுகள் கடலில் கலக்கும் இடங்களில் கூட காணப்படுகின்றன.

இவை ஆறு, குளம், ஏரி போன்ற இடங்களில் அதிகமாக வாழ்கின்றன. உப்பு நீரில் கூட வாழக் கூடிய இயல்புடையவை.

முள்மீன்கள் ஆசியா, ஐரோப்பா மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் காணப்படுகின்றன.

உங்கள் நூலகம்



அறிவு புகட்டும் அயல் நாட்டுக் கதைகள், செல்வ முத்து, பக். 160, ரூ. 30/- ஸ்ரீ செல்வ நிலையம், 107/1, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14.

தான்தான் அறிவாளி என்று மற்றவர்களை ஏமாற்றும் குண முடையவர்கள், புதிய அறிவாளிகளைக் கண்டுபிடிக்க முயற்சிப்பவர்கள், ஆகியோரைக் கதை மாந்தராக வைத்துப் பின்னப்பட்ட அருமையான 36 கதைகள் இதில் உள்ளன. புது மெரு கூட்டப்பட்ட பழைய கதைகளும் உள்ளன. குழந்தைகளுக்குக் கதை கூற ஏற்ற கதைகள் இல்லை என்று தவிப்ப வர்களுக்கு அருமையான பரிசு.

சாலைப் பாதுகாப்பு, டாக்டர் சங்கரராஜு, பக். 200, ரூ. 40/- மணி மேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

கிராமங்கள் கூட இப்பொழுதெல் லாம் போக்குவரத்து மிக்க சாலைகளால் திணறும் காலம் இது. பள்ளிக்குச் செல்லும் மாண வர்கள் சைக்கிளை மிக அதிகமாகப் பயன்படுத்தும் வழக்கம் அதிகரித்து வருகிறது. அதோடு நடந்து பள்ளி செல்லும் மாணவர்களும் போக்குவரத்து சிக்னல் அறிவிப்புகளை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு சாலைகளை பாதுகாப்போடு கடக்க வேண்டிய நிலை. மாணவர்கள் மட்டுமல்ல, சாலையைப் பயன்படுத்தும் வாகன ஓட்டிகளுக்கும், பெரியவர்களுக்கும் இது பயன்படும். எல்லாப் பள்ளி நூல் நிலை யங்களிலும் இருக்க வேண்டிய நூல்.

உலக நாடோடிக் கதைகள், சரஸ்வதி ராம்நாத், பக். 88, ரூ. 16/- திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 17.

சாகித்ய அகாதமி பரிசு பெற்ற ஆசிரியையின் நூல். தமிழிலே தரப்பட்டுள்ள பலநாட்டு நாடோடிக் கதைகளின் தொகுப்பு. சிறுவர்களுக்கு மட்டுமல்ல, எல்லா வயதினரையும் ஈர்க்கும் கதைகள். படிக்கும்போது கதைப் புத்தகத்தைப் படிக்கும் நினைப்பே மறந்து விடுகிறது. யாரோ கதை கூறுகிறார்கள், அதைத் தான் கேட்கிறோம் என்ற நினைப்பே மேலிடுகிறது. படங்களும் இருந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

யாரோ கதை கூறுவது போல் உள்ளது!

நீங்களே செய்யலாம், வாண்டு மாமா, பக். 120, ரூ. 45/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, சென்னை - 17.

வீட்டிலேயே சிறுவர் பொழுது போக்கவும், ஏன் கை தொழிலாகவும் செய்யக் கூடிய அருமை யான கைவேலைப் பொருள் களின் செய்முறை வழிகாட்டி இது. பின்னல் மிதியடி, பூ ஜாடி, காகித மலர்கள் என்று இந்த வரிசை நீண்டு கொண்டே போகிறது. செய்முறை படங்களும், விளக்கமும் தெளிவாக உள்ளன.

படிக்காத மேதை காமராஜரிடம் படிக்க வேண்டியவை, கவிஞர் நீலம் மதுமயன், பக். 108, ரூ. 20/- மணி மேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

காமராஜரின் சிறப்பான வாழ்க்கை வரலாறு, சுவையாகத் தரப்பட்டுள்ளது. ஒரு படம் கூட இல்லாத குறையை அடுத்த பதிப்பில் சரிசெய்யலாம்.

— ரே



அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசு பெறும் இரண்டாவது கதை

கலங்கரை விளக்கம்!

பூ. ரம்யா



அந்தக் காலை நேரத்தில் மிகவும் பரபரப்பாகவும் சுறுசுறுப்பாகவும் அரசினர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களும், ஆசிரியர்களும் தங்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். வகுப்பறைகள் வண்ணக் காகிதங்களாலும், வண்ணக் கோலங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

உயர் வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் அந்தப் பொதுக்கூட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட பெரிய அறையில் நாற்காலிகளை வரிசைப்படுத்திக் கொண்டிருந்தனர். இந்த ஏற்பாடுகள் எல்லாம் புதிதாக வரப் போகும் தலைமையாசிரியரை வரவேற்க துரிதமாக நடந்து கொண்டிருந்தன.

''டேய், சுரேஷ், நேற்றைய வீட்டுப் பாடத்தை முடிச்சுட்டியா?''

''இல்லடா ரவி, இன்னும் முடிக்கலை!''

''சுரேஷ் அந்த டேபிளை இங்கே போடு'' என்று சொல்லிக் கொண்டே மீண்டும் கேட்டான் ரவி: ''ஏண்டா இன்னிக்கு ஒழுங்கா கிளாஸ் நடக்குமுன்னு நினைக்கிறியா?''

''நடக்காது. அதனால மெதுவா செஞ்சுக்கலாம்ன்னு விட்டுட்டேன்'' என்றான் சுரேஷ்.

''நானும் பாதிதான் முடிச்சிருக்கேன். நேத்து டீவில கிரிக்கெட் பார்த்தேன். அதான் எழுதலை, படிக்கலை, ஒண்ணும் செய்யல.''

அதற்குள் ஆங்கில ஆசிரியர் வந்தார்.

''ஸ்டுடன்ட்ஸ் எல்லாரும் இங்க வாங்க.''

''யெஸ் சார்.''

''கிருஷ்ணா நீ எல்லா கிளாஸ்ல உள்ள ஸ்டுடன்ட்சையும் இந்த இடத்துல கரெக்டா உட்கார வை. இன்னும் அஞ்சு நிமிஷம்தான் இருக்கு. சீக்கிரம் நடக்கட்டும்'' என்றார் ஆசிரியர்.

மணி சரியாக பத்து.

மேடையில் புது தலைமையாசிரியர் ஏறினார். அதுவரை அமைதியாக இருந்த அரங்கம் கை தட்டலினால் அதிர்ந்தது. புதிய தலைமையாசிரியரை வரவேற்று உரையாற்றினார்கள் ஆசிரியர்கள்.

புதிய தலைமையாசிரியர் உதட்டில் புன்னகையுடன் எழுந்தார். மைக்கை சரி செய்து, தொண்டையை செருமி பேச ஆரம்பித்தார்:

''என் பெயர் தினேஷ்; நான் உங்கள் அனைவருடனும் பணி புரிய மிகவும் சந்தோஷமும், பெருமையும் அடைகிறேன். ஏனென்றால் இங்குள்ள ஆசிரியர்கள் சிறப்



"மற்ற எறும்புகள் எல்லாம் அந்த எறும்பை வணங்குதே ஏன்?"

"அது பிள்ளையார் எறும்பாச்சே!"

— ஜூனியர் தேஜ்

பாகப் பணிபுரிபவர்கள். மாணவர்கள் மிகவும் ஒழுக்கமானவர்கள், நன்கு படிப்பவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

"சரி, நான் இப்ப உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்ல விரும்புகிறேன். அது உங்க வாழ்க்கைக்கு உதவும் என்று நினைக்கிறேன். ஒரு சின்ன சம்பவம்:

"குமார் என்று ஒரு பையன் இருந்தான். அதுவும் உங்க வயதில். அவன் பத்தாம் வகுப்பு படித்தபோது நடந்தது. அவன் நல்லவன்தான். ஆனால் படிப்புன்னா அவனுக்கு வேப்பங்காயாகக் கசந்தது. எப்பவும் விளையாட்டில், டீ.வி பார்ப்பதில் இப்படி கேளிக்கை நிகழ்ச்சிகளில் அவனுக்கு நாட்டம் அதிகம்.

அவனைத் திருத்த அவனது அப்பா, அம்மா, அக்கா முயற்சி செய்ததன் பலன் தோல்விதான்.

உழைக்காமல் வாழ்க்கையை எதிர் நோக்கி, வெற்றி காண முடியாது என்பதை அவன் அப்பா அவனுக்கு எவ்வளவோ சொல்லியும் புத்தியில் ஏறவில்லை. இப்படியே அவனுடைய வாழ்நாளும் கழிந்தது.

எப்படியோ திக்கித் திணறி பத்தாம் வகுப்புவரை வந்தான். ஆனால் அவன் படித்த படிப்பு அவனுடைய தேர்ச்சிக்கு உதவவில்லை. தேர்வை எழுதிவிட்டு வெட்டியாக ஊரைச் சுற்றி நேரத்தைக் கழித்தான்.

ஒரு நாள் அத்தையின் கிராமத்துக்குக் குமாரை அனுப்பி வைத்தார் அவன் அப்பா. அங்கே அவனுடைய வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை காத்திருந்தது.

அத்தை குமாரை நன்கு உபசரித்தார்.

அப்பொழுது இவன் வயதில் ஒரு பையன் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தான். வேர்வை அவன் பனியனை நனைய வைத்திருந்தது.

"அவன் யாரு அத்தை?"

"இங்க வேலை பார்க்கிறவன்."

அவனைப் பார்த்தவுடன் குமாருக்கு ஏனோ பரிதாபமாக இருந்தது. அவனிடம் பழகி நட்பு வைத்துக் கொள்ள நினைத்தான்.

"ஏன், அத்தை இவனுக்கு அப்பா, அம்மா இல்லையா?"

"ஆமாண்டா, இவன் அப்பா குடிச்சு, குடிச்சு செத்துட்டார். இவன் அம்மா பாவம், உழைச்சு உழைச்சு சம்பாதிச்சும் பயன்படலே, எல்லாத்தையும் அப்பன்காரன் குடிச்சுத் தீர்த்துடுவான். தான் பட்டினி கிடந்தாவது மகனுக்கு சோறு போட்டாள், தாயார். படிக்க வைத்தாள். கடைசில அவளும் போதிய உணவின்றி செத்துட்டா. இந்தப் பையன் முதல்ல ரொம்ப அழுதான். அப்புறம் திடீர்னு ஆவேசம் வந்தவன் போல, 'என் அம்மா ஆசையை நிறைவேற்றுவேன்'னு சொன்னான். அன்னிலேர்ந்து பள்ளிக்கூட நேரம் போக காலையும் மாலையும் உழைச்சு சம்பாதிக்கிறான். கிடைக்கிற கூலியில் சிக்கனமா வாழ்ந்து, படிப்புக்குப் பயன்படுத்திக்கறான். கெட்டிக்காரன், நல்லா முன்னுக்கு வந்துடுவான்."

அப்பொழுதுதான் குமாருக்கு ஏதோ புரிவது போல் இருந்தது. நமக்கும் இந்த நிலை வரலாம் என்று உணர்ந்தான். இருளில் செல்லும் படகுக்குக் கலங்கரை விளக்கம் உதவுவதுபோல், அவனது வாழ்க்கையில் அந்தப் பையன் ஒரு கலங்கரை விளக்கமாக இருந்தான். அன்றிலிருந்து அவன் நன்கு படிக்க ஆரம்பித்தான், துருப்பிடித்த மூளைக்கு வேலை கொடுத்தான்.


அவன் வீட்டிலுள்ளோர்க்கு பெருமையும், புகழும் தரும்படி நல்ல வேலைக்குச் சென்று, அவன் இன்று நல்ல நிலையில் இருக்கிறான்" என்று தலைமையாசிரியர் கூறி முடித்தார். மாணவர்கள் அனைவரும் அவரது பேச்சில் கட்டுண்டு கிடந்தனர்.

"எனவே மாணவர்களே படிப்பை ஒரு

சுமை என்று கருதி படிக்காமல் விட்டால் உங்களது வாழ்க்கை சுமையாகிப் போய் விடும்; படிப்பை ஒரு சுகமாக எண்ணிப் படித்தால் வாழ்க்கையிலும் சுகம் பெற லாம்.

''நான் உங்களிடம் கடைசியாக ஒரு குறிப்பைச் சொல்ல விரும்பு கிறேன். நான் அந்தக் குமாராகவே இருந்திருந்தால் இன்று உங்கள் முன் னிலையில் பேசியிருக்க முடியாது...'' என்று கூறியதும் மாணவர்கள் புரிந் தும் புரியாததுமாய் திகைத்தனர். அவரே தொடர்ந்தார்: ''நான்தான் அந்த தினேஷ் குமார்'' என்று கூறி முடித்தார். ஆசிரியர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

சுரேஷ், ரவி போன்ற பல மாண வர்களுக்கும் அந்தத் தலைமையாசிரியர் கலங்கரை விளக்கமாகத் தோன்றினார். அவர்கள் வாழ்க்கையிலும் இனி வெளிச் சம்தான் என்று அவர்கள் முகமே காட்டியது!






எங்கள் பள்ளியில் நடந்தது!

சிக்கனம்!

விடுமுறை முடிந்து பள்ளி திறந்தது. புதுநோட்டு, புத்தகங்களுக்கு எல்லோரும் அட்டை போட்டுக் கொண்டு வந்திருந்தோம். என் நண்பன் மிகவும் சிக்கனமாக இருப்பான். அவன் துணிக்கடையில் கொடுக்கும் பிளாஸ்டிக் பையைக் கிழித்து அட்டை போட்டிருந்தான். அவனை மற்ற மாணவர்கள் கிண்டல் செய்தனர். அவனுக்கு ஆறுதலாக நான், "இங்க பாருங்



கடா, இந்த அட்டை கிழியாது, மழையில் நனையாது. அட்டை பிரியாமல் இருக்க நிறைய டேப்பை ஒட்டியிருக்கான். அதில் அவன் தாராளத்தைப் பாருங்க" என்றேன். உடனே அவன் "இந்த டேப் எங்க மாமா வீட்டில் இருந்தது" என்றான். எல்லோரும் சிரித்தனர். என் நண்பனின் அப்பாவித்தனத்தை நினைத்து அப்படியே உட்கார்ந்தேன்.

– வெ. அ. கார்த்திகேயன்,
வெள்ளோடு, ஈரோடு மாவட்டம்.

எப்படி கொடுப்பாய்?

கணித ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். பின் வரிசையில் உட்

நான்கு ஆப்பிள்களை ஐந்து பேருக்கு எப்படி கொடுப்பாய்?



கார்ந்திருந்த மாணவன் ஏதோ பேசிக் கொண்டிருந்தான். இதைக் கவனித்த ஆசிரியர் அவனை எழுப்பி "நான்கு ஆப்பிள்களை ஐந்து பேருக்கு எப்படி பிரித்துக் கொடுப்பாய்?" என்று கேட்டார். ஒரு நிமிடம் யோசித்தவன் "சார்! நான்கு ஆப்பிள்களையும் மிக்ஸியில் போட்டு சாறு பிழிந்து, ஐந்து டம்ளர்களில் ஊற்றிக் கொடுப்பேன்" என்றவுடன் வகுப்பே சிரித்தது!

– வெ. ஹரிஹரன்,
சேலம்.

அரிசியின் வகைகள்?

புவியியல் ஆசிரியர் அரிசியைப் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.



வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு மாணவனை எழுப்பி, "அரிசியின் வகைகள் என்ன?" என்று கேட்டார். அவன் திருதிருவென விழித்தான். அருகில் இருந்த மாணவன் "ஐ.ஆர்.20" என்று அவனுக்கு நினைவூட்டினான். உடனே "ஐ.ஆர். 20, 21, 22, 24..." என்று முப்பது வரை சொல்லி நிறுத்தினான். ஆசிரியருக்குக் கோபம் அதிகமானது. "நாளைக்கு நூறு தடவை அரிசியின் வகைகளை எழுதிட்டு வா" என்று கூற அவன் பரிதாபமாக உட்கார்ந்தான்.

– கா. விஜய் ஆனந்தன்,
வெள்ளையாம்பட்டு.

ஆர்வம் வந்தது எப்படி?

எங்கள் வகுப்பு மாணவன் எழுதிய கதை ஒரு பத்திரிகையில் வெளியாகி இருந்




தது. ஆசிரியர் அவனைக் கூப்பிட்டு "எப்படி உனக்கு இந்த ஆர்வம் வந்தது?" என்றார். "சார்! என் சித்தப்பாதான் ஊக்குவித்து, புத்தகமெல்லாம் வாங்கிக் கொடுத்தார்" என்றான். உடனே அருகில் இருந்த நண்பன் "நீ கதை எழுத உன் சித்தப்பா ஏன் ஊக்கு விற்கணும்?" என்று கேட்டான். ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்தோம்.

– சி.டி. ரெங்கபாஷ்யம்,
எட்டாம் வகுப்பு,
சிவந்தி மெட்ரிகுலேஷன் பள்ளி,
சேரன்மாதேவி

மதில் மேல் பூனை!

தமிழாசிரியர் விடைத்தாள்களைத்




திருத்திக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது என் நண்பனை அழைத்து "36 மதிப்பெண்தான் வாங்கியிருக்கே! மதில் மேல் பூனை மாதிரி இருக்கு உன் நிலை" என்றபடி கொடுத்தார். அருகில் இருந்த குறும்புக்கார மாணவன் மெதுவாக "மதில் மேல் பூனைதான் இருக்கணுமா? யானை இருக்கக் கூடாதா?" என்று கேட்டான். அது ஆசிரியர் காதில் விழ, "என்னடா கேட்டே? யானை உட்கார்ந்தால் மதில் இடிந்து விழாமல் நீ போய் தாங்குவியா?" என்றவுடன் அவன் வாயடைத்துப் போனான். நாங்கள் சிரித்தோம்.

– இரா. உதயகுமார்,
பத்தாம் வகுப்பு,
அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி,
பட்டீஸ்வரம், கும்பகோணம்.


குளவிகள்


ஆழி




ஈ, வெட்டுக்கிளி, வண்டுகள், தேனீ போன்ற கணுக்காலிகள் தொகுதியைச் சேர்ந்தது குளவி. குளவியின் தலையில் உள்ள இரண்டு உணர் இழைகள் ஒலியைக் கேட்கப் பயன்படுகின்றன. கூட்டுக் கண்களுக்கு அருகில் மூன்று ஒற்றைக் கண்களும் இருக்கின்றன. வயிற்றுப் பகுதியின் கடைசியில் கொடுக்கு இருக்கிறது.

உலகிலேயே பழங்காலத்துக் குளவி என்று கருதப்படும் குளவிப் பதிவுகளை கலிபோர்னியா பல்கலைப் பேராசிரியர்கள் அலாஸ்காவில் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தக்குளவிகள் மரத்தின் பிசின்களுக்குள் புதைந்திருந்தன. இவை 6 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று கருதுகிறார்கள்.






பல குளவிகள் சேர்ந்து, கூட்டங் கூட்டமாக ஒரே சமூக வாழ்க்கை நடத்துகின்றன. தனியாக வாழும் குளவிகளும் உண்டு.




'பானைக்காரன் குளவி' என்னும் இனக் குளவிகள், களிமண்ணால் பானை போன்று சிறிய கூடுகள் கட்டுகின்றன.




'காகிதக் குளவி' என்று ஓர் இனம், மக்கிப்போன மர நார்கள், தாவரங்களின் தண்டுகள் இவற்றை வாயில் போட்டு மென்று அரைக்கின்றன. பிறகு தன் வாயில் சுரக்கும் உமிழ்நீரையும் சேர்த்து, அரைத்த பொருளைக் கூழாக்குகின்றன. அதைக் கொண்டு, மரக்கிளைகளில் அல்லது கூரைகளின் கீழ் நோக்கித் தொங்குமாறு கூடு கட்டுகின்றன.


இந்தக் காகிதக் குளவிகளின் மூலம்தான் மனிதன் 1900 ஆண்டுகளுக்கு முன்பு காகிதம் செய்ய அறிந்துகொண்டான் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.




பூமிக்கு அடியிலும் சிலவகைக் குளவிகள் கூடு கட்டுகின்றன. இவை 'மணற்குளவிகள்'.




இது ராணிக்குளவி. சில குளவி இனங்களில், ராணிக் குளவி, ஆண்குளவி, வேலைக்கார குளவி என மூன்று வகைகள் உள்ளன.




சில புழுக்கள் ஆண்குளவிகளாகவும், ராணிக்குளவிகளாகவும் மாறும். குளிர்காலம் வந்தவுடன் ராணிக் குளவி மட்டும் உயிருடன் இருக்கும். மற்ற எல்லா குளவிகளும் ஒரேசமயத்தில் இறந்து விடுகின்றன! ராணிக் குளவி மறுபடியும் முட்டையிடத் தொடங்கும்.



வசந்த காலத்தில், ராணிக் குளவி, கூட்டில் ஒவ்வோர் அறையிலும் ஒரு முட்டையிடும். சுமார் 5000 முட்டைகள் இடும். இம்முட்டைகள் பொரிந்து வெளிவரும் புழுக்கள் வளர்ந்து வேலைக்கார குளவிகளாகும். இவை கூட்டுக்குப் புதிய அறைகள் கட்டும். புதிதாக உண்டாகும் குளவிப் புழுக்களை வளர்க்கும். மற்ற வேலைகளைச் செய்யும்.



சிலந்தி, கரப்பான், போன்ற மற்ற பூச்சிகளைக் குளவி தின்னும். அதன் கொடுக்கில் ஆல்காலின், ஆஸிட் இரண்டும் சேர்ந்த விஷம் இருக்கிறது. அந்த விஷத்தை இரையின் மீது செலுத்திச் செயலிழக்கச் செய்கிறது.





குளவியின் பின்புறக் கடைசியில் ஓர் உறுப்பு கூர்மையாகச் சிறிது நீட்டிக் கொண்டிருக்கும். அதுதான் கொடுக்கு. ஆனால், அதைக் கொடுக்கின் உறை என்றுதான் சொல்ல வேண்டும். அதற்குள்தான் கொடுக்கு இருக்கிறது. கொட்டும்போது அந்த உறைக்குள் இருந்து கொடுக்கு நீட்டிக்கொண்டு வெளியே வரும்.



ஒரு தேனீ ஒருதடவைதான் கொட்டமுடியும். அப்போதே அது தன் கொடுக்கை இழந்துவிடும்! ஆனால், குளவியால் பல தடவைகள் கொட்டமுடியும். பெண்குளவிதான் கொட்டும். ஆண்குளவி கொட்டாது!


சிலவகைக் குளவிகள் புழுக்களை வைத்து அவற்றுக்குள் முட்டையிடுகின்றன. பிறகு அந்தப் புழுக்களே குளவிக் குஞ்சுகளுக்கு இரையாகின்றன.






காக்கையின் கூட்டில் குயில்கள் முட்டையிடுவது போல, 'குயில் குளவிகள்' மண் கூடுகட்டும் குளவிகளின் கூடுகளில் முட்டையிட்டுவிட்டுப் போய்விடுகின்றன.

மிகவும் பெரிய குளவி, வட அமெரிக்காவில் உள்ள 'இக்நியூமன்' என்னும் இனக் குளவிதான். இது சுமார் 11 செ.மீ. நீளம் இருக்கும். இந்தக் குளவிகளில் மட்டும் சுமார் 20,000 வகைகள் இருக்கின்றன. இதற்கு மோப்ப சக்தி அதிகம். மரத்தினுள் ஆழத்தில் மறைந்திருக்கும் புழுக்களையும் இது மோப்பம் பிடித்துவிடும்!



'அத்திப் பழக் குளவிதான் மிகவும் சிறியது. அது ஒரு சிற்றெறும்பை விடச் சிறியது. அதுதான் மகரந்த சேர்க்கை செய்கிறது. அத்திப்பழங்கள் உருவாகின்றன.



ஈற்று வாக்கியக் கதைப் போட்டியில் பரிசு பெறும் கதை

நீ பெரிய ராஜாவா?



மன்னர் ராஜவர்மனின் ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். எங்கும் செல்வம் மிகுந்திருந்தது. அரசியார் விதவிதமான நகைகளை தினமும் அணிந்து கொள்வார்.

ஒருநாள் பணிப்பெண் ஒருத்தி அரசியின் வளையல்களைத் திருடி விட்டாள். மறுநாள் அரசியார் எங்கு தேடியும் வளையல்கள் கிடைக்கவில்லை.

அரசி மன்னரிடம் முறையிட்டார். அரசர் பணிப்பெண்களை விசாரித்தார். திருட்டுப் பணிப்பெண் "நேற்று இரவு காவலன் ஒருவன் இந்தப் பக்கம் வந்தான். அவன்தான் திருடி இருக்க வேண்டும்" என்றாள். காவலர்களோ தாங்கள் இந்தப் பக்கம் வரவே இல்லை என்று கூறி விட்டார்கள்.

அரசர் குழம்பிப் போனார். மறுநாள் இரவு அரசரே காவலன் வேடமிட்டு அரண்மனையைச் சுற்றி வந்தார்.

ஏற்கனவே திருடிய பணிப்பெண் மெதுவாக அரசியின் அறைக்குள் நுழைந்தாள். சிறிது நேரத்தில் கையில் ஒரு பொட்டலத்துடன் வெளியேறினாள்.

கவனித்துக் கொண்டிருந்த அரசர் அப்பெண்ணைத் தடுத்து "அரசியின் நகைகளையே திருடுகிறாயே! அரசருக்குத் தெரிந்தால் என்னாகும்?" என்று கேட்டார்.

உடனே அப் பணிப்பெண் "நீ என்ன புது காவலனா? என்னைப் பற்றித் தெரியாமல் பேசுகிறாய். அரசர், அரசியைத் தவிர மற்ற அனைவருக்கும் நான்தான் திருடினேன் என்பது தெரியும். என்னை யாராவது காட்டிக் கொடுக்க நினைத்தால் அவர்கள் மேலேயே பழி சுமத்தி விடுவேன்" என்றாள்.

"உன்னை என்ன செய்கிறேன் பார்" என்றார் கோபத்துடன் அரசர்.

"நீ என்ன பெரிய ராஜாவா? அதிகம் பேசாதே! காட்டிக் கொடுத்தால் நாளை உனது வேலை காலி" என்று அலட்சியமாகக் கூறினாள் பணிப்பெண்.

"ஆமாம்! நான் ராஜா தான்" என்றபடி வேஷத்தைக் கலைத்தார் அரசர்.

பணிப்பெண் செய்வதறியாது திகைத்து நின்றாள்.


— ஜெ. சுவாதி,
ஏழாம் வகுப்பு,
மைலாப்பூர், சென்னை

கடிகாரம் உருவானது









கடிகாரங்கள் தோன்றுவதற்குமுன் பழங்காலத்தில் சூரியனின் நடமாட்டத்தை வைத்துதான் கால நேரத்தைக் கணித்து வந்தனர். சுமேரியன் நாகரிகத்தில், அதாவது 4000 ஆண்டுகளுக்கு முன்புதான் சூரிய நிழலை வைத்து மணி பார்க்கும் பழக்கம் ஏற்பட்டது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். கி.மு. 2000-ல் எகிப்தில் சூரிய நிழலை வைத்து மணி பார்த்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

சூரியன் மறைந்தவுடன் எப்படி நேரத்தைக் கணக்கிடுவது என்று சிந்தனை செய்ததின் விளைவுதான் 'கார்நாக்' எனும் நீர்க் கடிகாரம். சீன மன்னர் 'ஹுவாவன்காட்டி'யின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின் 16ம் நூற்றாண்டில் விதவிதமான மணற் கடிகாரங்கள், எண்ணெய் கடிகாரங்கள் வழக்கத்திற்கு வந்தன.

மணற் கடிகாரத்தில் குடுவையில் மணலை நிரப்பி மேலிருந்து கீழே மற்றொரு குடுவையில் விழும் வண்ணம் செய்து அதிலிருந்து நேரத்தைக் கணக்கிட்டனர். எண்ணெய் கடிகாரங்களில் எண்ணெய் எரியும் போது அதனுடன் இணைக்கப்பட்ட அளவுகோல் நகருவதை வைத்து நேரத்தைக் கணக்கிட்டனர். 8ம் நூற்றாண்டில் நிழல் கடிகாரம் பிரபலமாக இருந்தது.

இயந்திர கடிகாரங்கள் :

கி.பி. 1335ம் ஆண்டு இத்தாலியில் தான் முதன் முதலாக இயந்திர கடிகாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இக் கடிகாரம் பொது கடிகாரமாக இத்தாலியின் மிலன் நகரில் ஒரு கோபுரத்தில் வைக்கப்பட்டது. அதன் பின் இத்தாலி நாட்டு வானவியல் அறிஞர் கலிலியோ தனி ஊசல் தத்துவத்தை கி.பி. 1641ல் கண்டுபிடித்தார். அதன் அடிப்படையில் முதன் முதலாக தனி ஊசல் கடிகாரத்தை டச்சு நாட்டு கணிதவியல் மேதை 'கிறிஸ்டியான் ஹைஜென்' கி.பி. 1656ல் உருவாக்கினார். இது ஒரு நாளைக்கு 5 நிமிட குறைபாட்டில் இயங்கியதால் அவரே 1695ல் 'பேலன்ஸ் வீல்' முறையை அறிமுகப்படுத்தி நாள் ஒன்றுக்கு 2 நிமிட குறைபாட்டில் கடிகாரம் தயாரித்தார். இதனை மேலும் மெருகேற்றி 1754ம் ஆண்டு லண்டனிலுள்ள கடிகாரத் தயாரிப்பாளர் 'தாமஸ் மட்ஜ்' ஒரு கடிகாரத்தை உருவாக்கினார். இதுதான் இன்றைய கடிகாரங்களுக்கு முன்னோடி.

'பிக்பென்' கடிகாரம் உலகப் புகழ் பெற்றது. இக்கடிகாரத்தை எட்மண்ட் பாக்கெட் மற்றும் லார்டு கோரின் தோப் ஆகியோர் உருவாக்கினார்கள். இக் கடிகாரம் 1859ம் ஆண்டு இங்கிலாந்தின் வெஸ்ட் மினிஸ்டர் பகுதியில் நிறுவப்பட்டது. இதில் 4 டயல்கள் உள்ளன. ஒவ்வொன்றும் 23 அடி விட்டமுடையது. நிமிட முள் 14 அடி நீளமும் ஒவ்வொரு எண்ணும் 2 அடி நீளமும்



உள்ளன.

இரண்டு எண்களுக்கு இடையிலுள்ள தூரம் ஒரு அடி. கடிகாரத்தின் உயரம் 314 அடி, பெண்டுலத்தின் நீளம் 13 அடி. இதனுடைய முக்கிய ஸ்பிரிங்கை வடிவமைத்தவர் 'நூரன்பார்க்'. இரும்பின் எடை அதிகம் என்பதால் பிறகு இது பித்தளைக்கு மாறியது.

பாக்கெட் கடிகாரம் :

எப்படி?

கி.பி. 1504ம் ஆண்டில் ஜெர்மனியில் 'பீட்டர் ஹென்லீன்' என்பவர் ஒரு பாக்கெட் கடிகாரத்தை உருவாக்கினார். பாக்கெட் கடிகாரங்களை செல்வந்தர்கள் தங்களுடைய கோட்டு பாக்கெட்களில் கயிறு கட்டி வைத்து கொள்வார்கள். பாக்கெட் கடிகாரங்களை வைத்துக் கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டதால், கைக் கடிகாரத்தை வடிவமைத்தார் 'நியூசாம்' என்ற ஆங்கிலேயர். 1571ம் வருடம் அறிமுகப்படுத்திய போது இதில் ஒரு முள்தான் இருந்தது. அதனால் துல்லியம் குறைவாக இருந்தது. இதனை சீரமைத்து 1670ம் வருடம் 'நீப் மற்றும் குவாரி' எனும் கம்பெனி 2 முள்களுடன் வாட்சுகளைத் தயாரித்தது.

1660ம் ஆண்டு ராபர்ட் ஹுக் என்பவரால் 'நூலிழை அளவில் ஸ்பிரிங்குகள் வடிவமைக் கப்பட்டன. இது கைக்கடிகாரங்கள் தயாரிப்பில் மிகவும் உதவியாக இருந்தது. ஆட்டோமேடிக் கடிகாரங்கள் தோன்றவும் உதவியாக இருந்தன. கடிகாரத்தில் உள்ள 'ஜுவல் லீவர்'தான் கடிகார பற்களை நகர்த்துகிறது. இந்த 'ஜுவல்ஸ் பேரிங்'குகள் 1704ம் ஆண்டு சுவிட்சர்லாந்திலுள்ள நிக்கோலஸ் பேசி யோவினால் அறிமுகப்படுத்தப்பட்டது.



இது கடினமான பாகம் என்பதால் தேய்மானம் குறைவு. நேரம் துல்லியமாக இருக்கும்.

1868 வரை கடிகாரங்கள் ஒரு ஆடம்பரப் பொருளாகவே கருதப்பட்டு வந்தன. இதனை தகர்த்தியவர் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த 'பாசாக்ஸ் டி போண்ட்' எனும் தொழில் நுட்ப வல்லுநர். இவர் தான் உலகில் முதன் முறையாக மலிவு விலையில் கடிகாரங்களைத் தயாரித்தார். 1887-ம் ஆண்டில் பெண்கள் கையில் கட்டும் வாட்சுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.



1926ம் ஆண்டு ரோலக்ஸ் மற்றும் ஆய்ஸ்டர் மாடல்கள் அறிமுகமாகின. இதனை அடுத்து 'வாட்டர் புரூஃப்' ஆட்டோ மெடிக் வாட்சுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. விளையாட்டு போட்டிகளில் பயன்படும் 'செர்னோகிராப்' ஸ்டாப் வாட்சுகள் தயாராயின.

இந்தியாவில் 1960ம் ஆண்டிலிருந்துதான் வாட்சுகள் தயாராகின்றன. ஹெச்.எம்.டி. நிறுவனம் ஜப்பானின் சிட்டிசன் வாட்சு கம்பெனியுடன் தொழில் நுட்ப உதவி பெற்று வாட்சுகளைத் தயாரிக்கிறது.

தற்போது அணுக்கடிகாரங்கள் கூட வந்து விட்டன. ஹைட்ரஜன் அணுக்களால் இயக்கப்படும் இதன் துல்லியம் 1 விநாடி கூடும் அல்லது குறையும். எப்போது? 30,000 ஆண்டுகளுக்கு ஒருமுறை!

நேரத்தை அளவிடும் கலைக்கு 'ஹோரோலாஜி' என்கிறார்கள். இது கிரேக்க மொழியான 'ஹோரோ' (நேரம் என்று பொருள்) என்ற சொல்லில் இருந்து வந்தது.

— கோவீ. ராஜேந்திரன்



கோகுலம்

சந்தா செலுத்துங்கள்!

கோகுலம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பருக்கு பரிசளிக்க வேண்டுமா? அப்படியானால் சந்தா செலுத்தலாமே? ஒவ்வொரு மாதமும் உங்களைத் தேடி வீட்டுக்கே வரும் கோகுலம்!

இந்த சந்தாப் படிவத்தைப் பூர்த்தி செய்து உடனே அனுப்பி வையுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

சின்னச் சின்ன எறும்புகூட..!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

காட்சி – 1

இடம்: *பால் கார்டு வழங்குமிடம் (சாலையில்)*

வாணி: குமரன்! வேடிக்கை பார்த்துக்கிட்டிருக்காதே! நடுவிலே இடம் விடாம பின்னாலேயே வா! பால்கார்டும் பணமும் பத்திரமா இருக்கா பார்த்துக்க!

குமரன்: ம்! பத்திரமா இருக்குக்கா! இந்த மாசம் 'க்யூ' பெரிசா இருக்கு!

கலா: ஆமாம்! நாம எல்லோருமே எச்சரிக்கையா இருக்கணும்! போன மாசம் இதே 'க்யூ'விலே ஒரு மாடு நுழைஞ்சப்போ, ஒரு பையன்கிட்டே இருந்த பணத்தை யாரோ ஒரு ஆளு திருடிக்கிட்டுப் போயிட்டான். ரத்னம், சுந்தர், உஷா எல்லோரும் ஒருத்தர் பின்னால் ஒருத்தர் நின்னு எச்சரிக்கையா இருங்க!

உஷா: ஏ! ரத்னம்! அங்கே பாரு மாடு வருது. தள்ளிக்கோ!

முதியவர்: தம்பிகளா! என்ன இந்த மாசமும் நீங்களே பால்கார்டு வாங்க வந்துட்டீங்களா?

சுந்தர்: ஆமாம், இனிமே நாங்களே தான் வருவோம்!

முதியவர்: உங்க காந்திஜி சிறுவர் சங்கம் நல்லா நடக்குதா?

ரத்னம்: ம்! நல்லா நடக்குதுங்க! இன்னிக்குக் கூட ஒத்துழையாமை இயக்கத்தைப் பத்தி ஒரு சுதந்தரப் போராட்ட வீரர் தலைமையிலே வில்லுப் பாட்டு நடக்கப்போகுது.

முதியவர்: அப்படியா மகிழ்ச்சி! நானும் பார்க்க வரேன்!

வாணி : ஐயா! உங்களால ரொம்ப நேரம் நிக்க முடியாது! எங்களுக்கு முன்னாலே போய் நின்னுக்குங்க!

முதியவர் : வேண்டாம்மா! வரிசைன்னா வரிசைதான்! வரிசை ஒழுங்குக்கு எல்லோரும் மரியாதை தரணும். நான் பின்னாலேயே போய் நிக்கறேன்!

குமரன் : வேண்டாங்கைய்யா! வெயில் வேற சுர்ர்னு அடிக்க ஆரம்பிச்சிருக்கு. உங்களால நிக்க முடியாது. முன்னால நின்னுக்குங்க! ரத்னம்! அவரைக் கொஞ்சம் முன்னால நிக்க வை!

முதியவர் : சரி! ரொம்ப நன்றி!

சுந்தர் : டேய் ரத்னம்! அதோ அங்கே பாரு! போன மாசம் வந்த அந்த மீசைக்கார ஆளு!

ரத்னம் : ஆமாம்! மீசையைப் பார்த்தாலே பயமாயிருக்கு. டேய்... இந்த ஆளு ஒவ்வொரு மாசமும் 'க்யூ'வை மதிக்காம எல்லோருக்கும் முன்னால போய் நிக்கறாரு! யாரும் கேக்க பயப்படறாங்க!



வாணி : அந்த மீசைக்காரர் என்னவோ 'ரிசர்வேஷன்' பண்ணி வச்ச மாதிரி முன்னே போய் நிக்கறாரு!

குமரன் : வயசுலேதான் பெரியவரா இருக்காரு! வரிசையிலேதான் வரணும்கிற யோசனையே இல்லை!

கலா : சரி, இந்த முறையும் இப்படியே விட்டுடறதா?

உஷா : நாம சின்னப் பசங்க... பெரியவங்களே பேசாம நிக்கறாங்களே!

கலா : சின்னப் பசங்களா இருந்தா என்ன? நாமும் கேட்கலாமே!

உஷா : அப்போ ஒண்ணு செய்வோம்! நாம ஆறு பேரும் ஒரே குரல்லே அந்த ஆளைப் பார்த்து 'க்யூவிலே நில்லுங்க! க்யூவிலே நில்லுங்க'ன்னு கத்துவோம்!

ரத்னம் : ஆனா... எனக்குப் பயமா யிருக்கு! அந்த மீசைக்காரர் ஒரு அடி கொடுத்தா நம்மால தாங்க முடியாது.

கலா : மூணு மாசமா பொறுத்துப் பார்த்தோம். இப்போ ஒண்ணா குரல் கொடுத்துப் பார்ப்போம்! ம் கொடுங்க.

எல்லோரும் : க்யூவிலே வாங்க! தயவு செய்து க்யூவிலே வாங்க!

மீசைக்காரர் : ம்... யாருடா கத்தறது? யாரைப் பார்த்துடா க்யூவிலே வரச் சொல்றீங்க? உங்க வேலையைப் பார்த்துக் கிட்டுப் போங்க! எங்கிட்டே தகராறு வச்சுக்காதீங்க!

கலா : எல்லோரும் வரிசையிலே நிக்க றாங்க... நீங்களும் நிக்கணுமில்லே!

மீசை : அது எனக்குத் தெரியும்! பேசாம நில்லுங்க...

சுந்தர் : டேய், அங்கே பாருடா அவரு பால்கார்டே வாங்கிட்டாரு! டேய் ரத்னம், இதைப் பத்தி நாம எல்லோரும் நம்ம மாஸ்டர்கிட்டே சொல்லணும்!

ரத்னம் : ஆமாம்! அடுத்த மாதமும் இந்த ஆள் இப்படி நடக்க விடக் கூடாது.


காட்சி – 2

இடம் : சிறுவர் சங்கம் கூடுமிடம்

கலா : மாஸ்டர், இதுதான் நடந்தது! நாங்க ஒண்ணா குரல்கொடுத்தது தப்பு இல்லையே?

மாஸ்டர் : தவறு இல்லை கலா! உண்மையிலே நீங்க துணிச்சலாத்தான் நடந்துக்கிட்டிருக்கீங்க! ஆமாம், க்யூவிலே நிற்காத அந்த ஆளு எப்படி இருந்தார்?

கலா : பெரிய மீசை! கொஞ்சம் நரைச் சிருக்கும்! வாட்டசாட்டமா லுங்கி கட்



டிக்கிட்டிருப்பாரு!

உஷா : அது எப்படி மாஸ்டர் அந்த ஆளு, தான் பண்றது தப்புன்னு தெரிஞ்சும் அப்படி நடந்துக்கறாரு?

மாஸ்டர் : அவரை மாதிரி நிறைய பேர் இருக்காங்கம்மா! சின்ன வயசுலே யிருந்து உங்க அப்பா அம்மா உங்களை 'இப்படி நடந்துக்க, அப்படி நடந்துக்க'ன்னு சொல்லி வளர்த்தாங்க! நீங்களும் நியாயமா நடந்துக்கிட்டு வர்றீங்க!

சுந்தர் : அந்த ஆளு ஒவ்வொரு மாசமும் இப்படித்தான் நடந்துக்கறாரு. கேட்டா அடிக்க வர மாதிரி முறைக்கறாரு.

ரத்னம் : அடுத்த மாசமும் அவர் அப்படி நடந்துக்கக் கூடாது! அதுக்கு என்ன வழி மாஸ்டர்?

மாஸ்டர் : நீங்களே யோசனை பண்ணிச் சொல்லுங்க. இவருக்கு எப்படி நியாயத்தை எடுத்துச் சொல்லலாம்?

வாணி : சார்! இந்த மீசைக்காரர்தான் அடுத்த இரண்டு தெருவிலேயும் பேப்பர் போடறார்! அந்தத் தெருவிலே இருக்கறவங்க எல்லோரும் எங்களுக்குப் பழக்கமானவங்க! அவங்ககிட்டே இதைப் பத்தி சொல்லி, அந்த மீசைக்காரர்கிட்டே பேப்பர் வாங்கறதையே நிறுத்திட்டா என்ன மாஸ்டர்?

லலிதா : மாஸ்டர்! தயவுசெய்து அப்படி செய்யச் சொல்லாதீங்க! அப்படிச் செய்தா, அவர் குடும்பம் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படும்!


குமரன் : லலிதா! நீயும் எங்களை மாதிரி ஒவ்வொரு மாசமும் பால் கார்டு வாங்க வந்திருந்தா, அந்த மீசைக்கார ஆளையும் பார்த்திருப்பே! இப்படிப் பேசவும் மாட்டே!

லலிதா : மாஸ்டர்! அந்த ஆள் வேறு யாருமில்லை. எங்க அப்பாதான்!

எல்லோரும் : அப்படியா? அவர் உங்க அப்பாவா?

லலிதா : ஆமாம்! மாஸ்டர்! நானே எங்கப்பாகிட்டே சொல்லி, அவரை இனிமேல் வரிசையிலே வரச் சொல்றேன்.

மாஸ்டர் : அப்படியே செய் லலிதா! இன்னொரு செய்தி! மார்ச் மாதம் முதல் வாரம் சர்வதேசப் பெண்கள் வாரம்! இது சம்பந்தமா நம்ம சங்கம் ஒரு கவிதைப் போட்டி நடத்தப் போகுது. இதுலே நம்ம சங்கச் சிறுமிகள் கட்டாயம் கலந்துக் கணும்!



"இந்தத் தெருவிலேயே எங்க வீட்டுக் குத்தான் அதிக மதிப்பு!"

"எப்படி?"

"இதுதான் 'கோடி'வீடாச்சே!"

– பொறையாறு கங்காகணேசன்

காட்சி – 3

இடம் : விழாக் கூடம்

மாஸ்டர் : சிறுமிகளே! நடைபெறும் சர்வதேசப் பெண்கள் வார விழாவிற்குத் தலைமைதாங்கும் ஜான்ஸி அவர்கள் இப்பொழுது பேசுவார்; நடந்த கவிதைப் போட்டியில் சிறந்த கவிதைக்கான பரிசையும் வழங்கவிருக்கிறார்! (கரவொலி)

ஜான்ஸி : சிறுமிகளே! வணக்கம்! பெண் குலத்தில் பல தேசபக்தி நிறைந்த வீராங்கனைகளையும், கவிஞர்களையும் லட்சியப் பெண்மணிகளையும், விளையாட்டு வீராங்கனைகளையும் நமது பாரதம் தோற்றுவித்திருக்கிறது. சிறுமிகளாகிய நீங்களும் வருங்காலத்தில் நமது நாட்டின் பெருமையை ஓங்கச் செய்ய வேண்டும். நீங்கள் அனைவருமே அற்புதமான கவிதைகளை எழுதியிருந்தீர்கள். ஆனால் எல்லா கவிதைகளிலும் மிக மிகச் சிறந்ததாக நான் தேர்வு செய்திருப்பது, 'சின்னச் சின்ன எறும்பு கூட!' என்ற கவிதையாகும். இதை எழுதிய சிறுமி லலிதாவிற்கு என் பாராட்டுகள். (கரவொலி) இப்பொழுது லலிதாவே நமக்குக் கவிதையைப் படித்துக் காட்டுவாள் (கரவொலி). வா லலிதா!

லலிதா : (கவிதையைப் படிக்கிறாள்)

சின்னச் சின்ன எறும்பு கூட
சீராய் வரிசை கட்டுது!

நின்னு பார்க்க எனக்குக் கூட
நிறைய ஆசை வருகுது!

பஸ்ஸில் ஏறும் மனிதர் மட்டும்
பொறுமை இழந்து நடக்கிறார்!
'பஸ்கி' போட்டு முண்டி யடித்துப்
பாய்ந்து உள்ளே போகிறார்!

சின்னத் தங்கை என்னைக் கூட
தள்ளிவிட்டுப் போகிறார்!
'என்ன பெரிய மனிதர் இவர்?'
என்று கேட்க வைக்கிறார்!

வரிசை நிற்கும் மனிதர்களை
விலக்கி நடுவில் வருவோரை
வெறுப்பார் நேர்மை மனிதர்களே!
விலங்கென ஒதுக்கி வைத்திடுவார்!

ஒழுங்கு இல்லா இந்தப் பாதை
உனக்கு என்றும் வேண்டாமே!
பழுது இல்லா வரிசை நிற்கும்
பழக்கம் கொண்டு வாழ்வோமே!
(கரவொலி)

ஜான்ஸி : இந்த அருமையான கவிதையை எழுதிய லலிதாவிற்கு முதல் பரிசாக ஆயிரம் ரூபாயை அளிக்கிறேன்!

மாஸ்டர் : லலிதாவின் தந்தையையும் மேடைக்கு அழைக்கிறேன்... வாங்க! இப்படி நில்லுங்க! புகைப்படம் எடுத்துக்குங்க வாங்க! தயங்காதீங்க! என்னங்க கண்ணிலே இப்படி தண்ணி வருது?

மீசை : மாஸ்டர், என்னை மன்னிச்சிடுங்க! பால் கார்டு வாங்கி வந்த உங்க சங்கப் பிள்ளைகளை மதிக்காம, மிரட்டினது நான்தான்! என் மக எழுதின கவிதையைக் கேட்டேன். மனசைத் தொட்டுருச்சு. நேத்து கூட லலிதா பஸ் ஏறப்போ வரிசையிலே வராத கும்பல் நடுவிலே சிக்கிட்டு, பர்சைப் பறிகொடுத்துட்டா! வரிசையிலே நிக்கிற பழக்கம் சின்னவங்களுக்கும், பெரியவங்களுக்கும் எவ்வளவு நல்லதுன்னு இப்பத்தான் புரியுது.

மாஸ்டர் : லலிதா! உன் அப்பாவை நீயே மாத்திடறேன்னு சொன்னே! உன் கவிதையே உங்க அப்பா மனசை மாத்திட்டுது. வாழ்த்துகள்!

சங்கச் சிறுவர்கள் : வாழ்த்துகள் லலிதா!

குறுக்கெழுத்துப் புதிர் விடை



ரை	து	1 ம	■	ம்	க	க்	த	2 ப
தி	■	ண்	■	க	■	ர்	■	ப்
த்	■	டி	■	ங்	■	3 கூ	■	பா
4 நி	லா	■	5 ப	6 சி	■	■	■	ளி
■	7 ப	னி	■	■	■	8 கூ	ரை	■
ம்	■	■	■	9 க	தை	■	10 நா	ர்
ர	■	னி	■	ர	■	ம்	■	த
து	■	ணி	■	க	■	த	■	த்
11 ச	க்	12 க	ர	ம்	■	13 வே	ம்	14 பு

ஈற்று வாக்கியப் போட்டியில் பரிசு பெற்ற கதை



வாயைத் திறக்காதே!

ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது தலைமை ஆசிரியரிடமிருந்து ஒரு சுற்றறிக்கை வந்தது. ஆசிரியர் சுற்றறிக்கையை வாங்கி "அடுத்த வாரம் நம் பள்ளியில் வினாடி வினா போட்டி நடக்கிறது. இதில் வெற்றி பெற்றவர்கள் மாவட்ட அளவில் நடக்க இருக்கும் போட்டிக்கு நம் பள்ளி சார்பாக அனுப்பி வைக்கப்படுவார்கள்" என்று படித்து முடித்தார்.

"யார், யார் கலந்துக்கப் போறீங்க?" என்று மாணவர்களிடம் கேட்டார் ஆசிரியர்.

மாதவி எழுந்து பெயர் கொடுத்தாள். ஆசிரியருக்கும் மற்ற மாணவிகளுக்கும் வியப்பாக இருந்தது.

"மாதவி! புதுசா பேர் கொடுக்கறே? நல்லா செய்வியா?" என்று கேட்டார் ஆசிரியர்.

"எனக்கு நம்பிக்கை இருக்கு சார்" என்றாள் மாதவி.

அடுத்து அர்ச்சனா எழுந்து பெயர் கொடுத்தாள். மதிய உணவுக்கான மணி அடித்தது.

எல்லோரும் சாப்பிடக் கிளம்பினர். "மாதவி. உன்னால நான் தோற்கப் போறேன். போட்டியிலே நீ வாயைத் திறக்கவே கூடாது. சொன்னது புரியுதா?" என்றாள் அர்ச்சனா கோபத்துடன். மாதவி ஒன்றும் பேசாமல் சென்றாள்.

போட்டி நாள். அர்ச்சனாவும் மாதவியும் ஒரு அணியில் அமர்ந்தனர். கேள்விகள் கேட்கப்பட்டன. முதல் சுற்றில் அர்ச்சனா மட்டும் பதில் அளித்தாள்.

போட்டி நடத்துபவர் மாதவியிடம் "தெரிந்த பதிலைத் தயங்காமல் கூறலாம்" என்றார்.

அடுத்து வந்த நான்கு சுற்றுகளில் பாட சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு அர்ச்சனாவும் பொது அறிவு பற்றிய பல கேள்விகளுக்கு மாதவியும் பதில் கூறினர்.

இறுதியில் மாதவி, அர்ச்சனா அணி வெற்றி பெற்றது.

ஆசிரியர்களும், மாணவியரும் மாதவியைப் பாராட்டினர். "என்னால நம்பவே முடியலை. ஆனா உன்னால்தான் அணி வென்றது" என்று மாதவியிடம் தலைமை ஆசிரியர் கூறக் கேட்ட அர்ச்சனா திகைத்து நின்றாள்.

– ப. தனசேகர், எண்டியூர், திண்டிவனம்.

சென்னை சேப்பாக்கம்

• எஸ். ரமேஷ்





• கபில்தேவ்

ஓரே இரைச்சல். ரசிகர்களின் ஆரவாரம். இந்திய அணி பந்து வீசுவதற்காக உள்ளே நுழைகிறது. எல்லோரும் எழுந்து நின்று கைதட்டுகிறார்கள். நானும்தான்! பாக். அணியின் துவக்க ஆட்டக்காரர்கள் சையத் அன்வரும் சாஹித் அப்ரிடியும் உள்ளே வருகிறார்கள். சையத் அன்வர் – இவர் இதே மைதானத்தில் ஒருநாள் ஆட்டத்தில் 194 ரன்கள் அடித்தவராயிற்றே! சாஹித் அப்ரிடி மிகக் குறைந்த பந்துகளில் 'செஞ்சுரி' போட்டவராயிற்றே! இவர்களை உடனே அவுட் ஆக்க வேண்டுமே. இந்தக் கவலை இந்திய ரசிகர் மனதில் எழுகிறது. ஜவஹல் ஸ்ரீநாத் வேகப் பந்து வீசுகிறார். விரைவிலேயே இந்த இரு விக்கெட்டுகளையும் வீழ்த்தி ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறார். அனில் கும்ப்ளே வருகிறார். அவரும் இரு விக்கெட்டுகளை வீழ்த்தி விடுகிறார். உணவு இடைவேளை வருகிறது.



• அக்ரம்

இப்பொழுதுதான் என் அருகே அமர்ந்திருப்பவர் என்னைப் பார்த்து பேசத் தொடங்குகிறார். இதுவரை பேசுவதற்கு எங்கே நேரம்? மைதானத்தைப் பார்ப்பதற்கும் ரசிப்பதற்கும் மகிழ்வதற்கும் வருத்தப்படுவதற்குமே நேரம் போதாமல் இருந்தது.

"ராகுல் திராவிட் நியூஸிலாந்தில இரண்டு இன்னிங்ஸிலும் சதமடித்திருக்கிறாரே, பார்த்தீங்களா?"

"பார்த்தேன் சார். டெஸ்ட் போட்டியின் இரண்டு இன்னிங்ஸிலும் சதமடித்த மூன்றாவது இந்தியர்ங்கிற பெருமை திராவிட்டுக்குக் கிடைச்சிருக்கு."

"அப்ப, இதுக்கு முன்னாடியே இரண்டு பேர் இந்த மாதிரி சாதனை செஞ்சிருக்காங்களா?"

"ஆமாங்க. இதுக்கு முன்னாடி விஜய் ஹசாரே, சுனில் கவாஸ்கர் – இவங்க இரண்டு பேருக்கும் இந்தப் பெருமை கிடைச்சிருக்கு. விஜய் ஹசாரே, 1947-ல் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அடிலெய்டில் நடந்த 4வது டெஸ்ட் போட்டியில் இந்தச் சாதனையை செஞ்சாரு."

"விஜய் ஹசாரே எவ்வளவு ரன் அடிச்சாருங்க?"

"முதல் இன்னிங்ஸில் 116 ரன்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 145 ரன்களும் அடித்தார்."

"கவாஸ்கர் எப்ப அடிச்சாரு?"

"1971ல் போர்ட் ஆப் ஸ்பெயினில் நடந்த 5வது டெஸ்ட் போட்டியில மேற்கிந்தியத் தீவுக்கு எதிரா இரண்டு இன்னிங்ஸிலும் செஞ்சுரி அடித்தார். அவர் முதல் இன்னிங்ஸில் 124 ரன்களும் இரண்டாவது இன்னிங்ஸில் 220 ரன்களும் எடுத்தார்."


"இரண்டாவது இன்னிங்ஸில் டபுள் செஞ்சுரியா?"

"அது மட்டுமல்ல. 1978ல், கராச்சியில

நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான 3வது போட்டியில் முதல் இன்னிங்ஸில் 111 ரன்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 137 ரன்களும் அடித்தார். அதே வருஷம் கல்கத்தாவில் நடந்த மேற்கிந்தியத் தீவுக்கு எதிரான 3வது போட்டியில் முதல் இன்னிங்ஸில் ஆட்டமிழக்காமல் 182 ரன்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 107 ரன்களும் எடுத்தார்.''

''அப்ப, கவாஸ்கரே மூணு முறை இந்தச் சாதனையைச் செஞ்சிருக்காரு!''

''ஆமாங்க. இப்ப ராகுல் திராவிட் ஹாமில்டனில் நடந்த நியூஸிலாந்துக்கு எதிரான 3வது டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் 190 ரன்களும், இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டமிழக்காமல் 103 ரன்களும் எடுத்தாரில்லையா? இதன் மூலம் இந்திய வீரர்களின் 'இரண்டு இன்னிங்ஸிலும் செஞ்சுரி' பட்டியலில் ஐந்தாவதாக இடம் பிடிச்சுருக்கார்.''



• திராவிட்



• காவஸ்கர்

உணவு இடைவேளை முடிந்து மீண்டும் போட்டி தொடங்குகிறது. அனில் கும்ப்ளே மேலும் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்துகிறார்.

சச்சின் டெண்டுல்கர் தன் பங்குக்கு ஒரு விக்கெட்டுக்கு 'எல்பிடபுள்யூ' மூலம் விடை கொடுக்கிறார். ஸ்ரீநாத் மேலும் ஒரு விக்கெட்டை வீழ்த்துகிறார். கும்ப்ளே அடுத்தடுத்து வீழ்த்திய விக்கெட்டுகளின் விளைவாக பாகிஸ்தானின் முதல் இன்னிங்ஸ் 238 ரன்களில் முடிவடைகிறது.

மைதானம்!

பக்கத்தில் இருக்கும் கிரிக்கெட் நண்பர் மீண்டும் பேசத் தொடங்குகிறார்.

''சச்சின் நல்லதொரு 'பார்ட்னர்ஷிப் பிரேக்கர்' இல்லையா?''


''ஆமாங்க. ரொம்ப நேரம் விக்கெட் விழாமலிருந்தால் சச்சின் டெண்டுல்கரை பந்து வீச அனுப்பலாங்க. பல முறை இந்த முயற்சியில் விக்கெட் விழுந்திருக்கு.''

இந்திய அணியினர் 'பேட்' செய்ய உள்ளே வருகின்றனர். விவிஎஸ் லஷ்மண் சடகோபன் ரமேஷ் ஜோடி. ''இந்த ரமேஷ் சென்னையைச் சேர்ந்தவர். அவருக்கு இது முதல் டெஸ்ட். நல்லா விளையாடினால் தான் தொடர்ந்து வாய்ப்புக் கிடைக்கும்''என்கிறார் நம் நண்பர். நண்பரின் விருப்பம் நிறைவேறாமலில்லை. முதல் நாளில் 8 ஓவர்களில் அவர்கள் 48 ரன்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் பெவிலியன் திரும்புகின்றனர். அடுத்த நாள் காலை 41 பந்துகளில் 43 ரன்கள் சேர்த்த ரமேஷ் எல்பிடபிள்யூ அவுட் ஆகிறார். இருப்பினும் அவர் ஆட்டத்திறன் கண்ட ரசிகர்கள் எழுந்து நின்று கரகோஷம் செய்கின்றனர். ரமேஷ் தொடர்ந்து ரசிகர்களுக்கு மகிழ்வளித்து தன்னை உயர்த்திக் கொள்வாராக!

வாசிம் அக்ரம் – பாக். அணியின் கேப்டன். தற்போது ஆடிவரும் ஆட்டக்காரர்களில் அதிக விக்கெட் வீழ்த்தியவர் இவரே. இந்தியாவின் முதல் இரு விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் டென்னிஸ் லில்லியின் சாதனையை (355 விக்கெட்டுகள்) முறியடித்தார். தற்போது 357 வீழ்த்தியுள்ள வாசிம், நம் கபில்தேவின் சாதனையான 434 விக்கெட்டுகளை எட்ட முடியுமா? பொருத்திருந்து பார்ப்போம்!

'ஷான் பொல்லாக்' ரொம்ப பொல்லாதவர்!

தென் ஆப்பிரிக்க ஆட்டக்காரர் ஷான் பொல்லாக் இருக்காரே, அவர் ரொம்ப பொல்லாதவர்! பந்து வீசி விக்கெட்டை வீழ்த்துவார்! பேட் பிடித்து ரன்களைச் சேர்ப்பார்! அங்கங்க தாவி 'கேட்ச்'களை



ஓவியப் போட்டி

ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு தலைப்பில் போட்டி அறிவிக்கப்படும். அந்தத் தலைப்பிற்கு ஏற்ற ஓவியங்களை நீங்கள் வண்ணம் தீட்டி அனுப்பி வைக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டு, மூன்று மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியைக் குறிப்பிட மறவாதீர்கள்!

இந்த மாதத் தலைப்பு – **வீடு**

கடைசி தேதி : 31.3.99

யும் பிடிப்பார்!

இப்ப பாருங்க, டெஸ்ட் கிரிக்கெட்டில் 1000 ரன்களைச் சேர்த்ததோடு நிக்காம, 100 விக்கெட்டுகளையும் வீழ்த்திட்டாரு. இந்த இரண்டு சாதனைகளின் உச்சகட்டமும் ஒரே டெஸ்டில் அமைஞ்சது ஒரு ஆச்சர்யம்! ஜோஹன்ஸ்பர்க்கில் நடந்த மேற்கிந்தியத் தீவுக்கெதிரான டெஸ்டில் இந்த இரட்டைச் சாதனையை பொல்லாக் நிறைவு செஞ்சுருக்கார்.

ஒரே டெஸ்டில் இந்த மாதிரி இரட்டைச் சாதனை நிறைவடைந்ததில், உலக கிரிக்கெட் வரலாற்றில், பொல்லாக்கோட பேரு மூணாவது இடத்தில் இருக்கு. நம்ம கபில் தேவ்தான் முதன் முதலா இந்த மாதிரி சாதனை செய்தவர். அவர் 1979-80ல், கல்கத்தாவில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் 1023 ரன்களை எட்டினார். அந்த டெஸ்டில்தான் 100 ஆவது விக் கெட்டையும் வீழ்த்தினார். பத்து 'கேட்ச்'களையும் பிடித்திருந்தார். அப்ப அவருக்கு வயசு 21 தான். அந்த டெஸ்ட் அவருக்கு 25வது போட்டி.

அதுக்கப்புறம் நியூஸிலாந்துக்காரர் ஜான் பிரேஸ்வல் 1990ல் இங்கிலாந்திற்கு எதிரா பெர்மிங்காமில் நடந்த டெஸ்டில் தமது (1001 ரன்கள் – 31 'கேட்ச்'கள் – 102 விக் கெட்டுகள்) சாதனையை நிறைவு செய்தார்.

இப்ப மூணாவதா சாதனை செஞ்சிருக்கிற பொல்லாக் தன்னோட 26 வது டெஸ்ட் போட்டியில 1006 ரன்களையும், 11 'கேட்ச்'களையும் 100 விக்கெட்டுகளையும் எட்டியதால நாம அவரப்பத்தி எழுத வேண்டியதாகப் போச்சு!

இந்த ஷான் பொல்லாக் உயரமானவர்; 25 வயசு; பந்தை படு வேகமா வீசுவார். இந்த டெஸ்டில் 103 ரன்களை போனா போகுதுன்னு மேற்கிந்தியத் தீவுக்காரங்களுக்குக் கொடுத்துட்டு 9 விக்கெட்டுகளை

டெஸ்ட் போட்டியில் அதிக 'கேட்ச்' பிடித்தோர்

ஃபீல்டர்	நாடு	கேட்ச்	டெஸ்ட்
1. மார்க் டெய்லர்	ஆஸ்திரேலியா	157	104
2. ஆலன் பார்டர்	ஆஸ்திரேலியா	156	156
3. க்ரெய்க் சாப்பெல்	ஆஸ்திரேலியா	122	87
4. விவியன் ரிச்சர்ட்ஸ்	மேற்கிந்தியத் தீவு	122	121
5. இயன் போத்தம்	இங்கிலாந்து	120	102
6. காலின் கவ்ட்ரே	இங்கிலாந்து	120	114
7. பாப் சிம்ப்சன்	ஆஸ்திரேலியா	110	62
8. வாலி ஹாம்மண்ட்	இங்கிலாந்து	110	85
9. கேரி சோபர்ஸ்	மேற்கிந்தியத் தீவு	109	93
10. சுனில் கவாஸ்கர்	இந்தியா	108	125

வீழ்த்திட்டார். இன்னும் ஒரே ஒரு விக்கெட் இருக்கே. அதையும் இவரே வீழ்த்தியிருந்தா நான் ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பேன். சரி, சரி, பரவாயில்லை. அடுத்த முறை வாய்ப்புக் கிடைச்சா விடாதீங்க, பொல்லாக்!

இது பத்தி பொல்லாக் என்ன சொல்லறாருன்னா கேட்கிறீங்க? "பந்து வீசுறது எனக்குப் பிரதானத் தொழில். அதுல 100 விக்கெட் எடுத்ததுங்கறது சிறப்பான விஷயம். ஆனா எனக்குக் கிடைச்ச 1000 ரன்கள் போனஸ் மாதிரி!" இப்படி சொல்லிட்டு சிரிக்கிறாருங்க, மனுஷன்! பொல்லாக்கோட அப்பா பீட்டர், மாமா கிரீம் இவங்க கூட தென் ஆப்பிரிக்காவுக்காக கிரிக்கெட் ஆடியிருக்காங்க. அப்பா பீட்டர் இருக்காரே, அவர் 116 விக்கெட் வீழ்த்தியிருக்காராம்! அதை உடனடியா முறியடிக்கிறதுதான் மகன் பொல்லாக்கோட லட்சியமாம்.

இந்த மாதிரி 'அப்பாவும் மகனும்' ஆளுக்கு நூறு விக்கெட் வீழ்த்தினது வேற யாராவது இருக்காங்களான்னு தேடிப் பார்த்தேங்க.

இந்த கிரிக்கெட் இருக்கே, இதில எதுக் கெடுத்தாலும் டேட்டா இருக்கும்; முன் உதாரணம் இருக்கும்! இதோ பாருங்க – நியூசிலாந்தைச் சேர்ந்த அப்பா கிரிஸ் – மகன் லான்ஸ் கெய்ன்ஸ் ரெண்டு பேரு இதே மாதிரி தலா நூறு விக்கெட்டுகள் எடுத்து குடும்ப சாதனை செஞ்சிருக்காங்க.

ஷான் பொல்லாக் மாதிரி 1000 ரன்கள் – 100 விக்கெட்டுகள் எடுத்தவங்க மொத்தம் 33 பேர் இருக்காங்க. இந்தியாவில கபில்தேவையும் சேர்த்து மொத்தம் 3 பேர். விஜய்மன்காட் 1154 ரன்கள் – 19 கேட்ச்கள் – 104 விக்கெட்டுகள் எடுத்திருக்காரு 23 டெஸ்ட்களுக்குள். இப்ப டீவியில கிரிக்கெட் வர்ணனை செய்யறாரே ரவி சாஸ்திரி, அவரும் 2108 ரன்களையும் 101 விக்கெட்டுகளையும் 20 கேட்ச்களையும் 44 டெஸ்ட்களுக்குள் எடுத்திருக்கார்.

மீதி உலகத்தில் இருக்கற 30 பேரைப் பத்தியும் எழுதினா இடம் பத்தாது. அதனால இங்க நிறுத்திக்கிறேன். ஹேப்பி கிரிக்கெட் மூவ்மெண்ட்ஸ்!

— விளையாட்டுப் பையன்

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக 'கேட்ச்' பிடித்த ஃபீல்டர்

மார்க் டெய்லரின் மகத்தான தியாகம் பற்றி முன்பே நான் எழுதியிருந்தேன். இப்பொழுது மீண்டும் நம் பகுதியில் இடம்பெறும் வகையில் அவர் ஒரு சாதனை நிகழ்த்தியிருக்கிறார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் விக்கெட் கீப்பர் நீங்கலாக, பிற ஃபீல்டர்களின் 'கேட்ச்'களில் அதிக அளவு பிடித்த ஆட்டக்காரர் என்ற பெருமை மார்க் டெய்லருக்குக் கிடைத்திருக்கிறது.

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடைபெற்ற இங்கிலாந்திற்கு எதிரான நான்காவது டெஸ்டில் டெய்லர் இச்சாதனையை எட்டினார். கிளென் மெக்ராத் வீசிய பந்தை மார்க் ராம் பிரகாஷ் அடித்த போது அதை 'லபக்' கென்று பிடித்தார் டெய்லர். தனது 104 வது டெஸ்டில் 157 வது 'கேட்ச்' பிடித்ததன் மூலம் டெய்லருக்கு இச்சாதனை கைவசமாயிற்று.



மாணவர்கள் நோட்ஸ் படிக்கலாமா?

'நான் பார்த்ததை மறந்து விடுகிறேன்;
படித்ததை நினைவு வைத்திருக்கிறேன்;
செய்துப் பார்ப்பதை புரிந்து கொள்கிறேன்!
- இது சீனாவின் புகழ் பெற்ற கூற்று.

இதுதான் எவ்வளவு உண்மை! கல்வி என்பது மனப்பாடம் செய்து மதிப்பெண் வாங்குவது மட்டுமல்ல. அதைப் படித்து, புரிந்து, வாழ்க்கையில் எப்படி பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதும் முக்கியம் இல்லையா?

சிலருக்கு வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்துவதைக் கவனித்தாலே போதும். இன்னும் சிலருக்கு வீட்டில் பெற்றோர்களின் உதவி தேவைப்படுகிறது. மேலும் சிலர் டியூசன் வைத்துப் படித்துக் கொள்கிறார்கள். ஆனால் இவை எல்லாவற்றையும்விட நோட்ஸின் உதவியில் படிப்பவர்கள்தான் ஏராளம். நோட்ஸில் கேள்விகளுக்குப் பதில்களைத் தேட வேண்டாம். பரீட்சையில் மதிப்பெண்களுக்கேற்றவாறு பதில்களை அளிக்க நோட்ஸ் தயாராக இருக்கிறது.

ஆரம்ப காலத்தில் தமிழ் பாடத்திற்கு மட்டுமே நோட்ஸ் வெளிவந்தது. ஆனால் இன்றோ எல்லா பாடங்களுக்குமே நோட்ஸ் போடப்பட்டு கல்விக்கூடங்களில் ஒ[ரு] அங்கமாகவே மாறிவிட்டது.

நோட்ஸைப் பற்றி மாணவர்கள் என்ன நினைக்கிறார்கள்?

"நோட்ஸ் என்பது எங்களைப் போன்ற மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம். புத்தகத்தில் பதில்களைத் தேடி அலைய வேண்டாம். சுலபமாக ஒண்ணு, ரெண்டு, ஐந்து மார்க் கேள்வி பதில்கள் அழகாக கொடுக்கப்பட்டுள்ளது" என்கிறார் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் ஆர். தீபா.

"நோட்ஸ் இருப்பதால் கேள்வி பதிலைப் புத்தகத்தில் தேடி, நோட்டில் எழுதி படிக்க வேண்டிய அவசியமில்லை. நேரமும் உழைப்பும் மிச்சம்" என்கிறார் அ.கௌசிக்.

எட்டாம் வகுப்பு படிக்கும் கே.எஸ். முகம்மது நாசிர் "புத்தகத்திலேயே கேள்விகளுக்கான பதில்கள் இருக்கும்போது நோட்ஸ் எதுக்குன்னு தான் புரியலை. இதனால இரட்டைச் செலவும் சுமையும்தான் அதிகம். எங்க வகுப்பில் எல்லோரும் நோட்ஸை பயன்படுத்தறதால எனக்கும் இது கட்டாயமாகிப் போச்சு" என்று வருத்தப் படுகிறார்.

"முன்பெல்லாம் படிப்பில் பலவீனமானவங்கதான் டியூசன் போவாங்க. ஆனால் இப்ப முதல் ரேங்க் வாங்கறவங்களும் டியூசன் போறாங்க. ஏன்னா இன்னும் அதிகமா மார்க் வாங்கணும் என்பதுதான். படிப்பதே மார்க் வாங்கதான் எனும்போது நோட்ஸோ, புத்தகமோ எதில் படித்தாலும் தவறு இல்லை" என்கிறார் ம. சித்ரா.

ஆசிரியர்கள் நோட்ஸ் பற்றி என்ன நினைக்கிறார்கள்?



"எங்கள் பள்ளியில் நோட்ஸ் கட்டாயம் இல்லை. ஆனால் சில ஊர்களில் ஆசிரியர்கள் பாடம் நடத்தாமல் நோட்ஸைப் பார்த்துப் படிக்கச் சொல்வதாக கேள்விபட்டிருக்கிறேன். இதனால் பாடத்தைப் புரியாமல் மனப்பாடம் செய்ய வேண்டிய நிலைக்கு மாணவர்கள் தள்ளப்படறாங்க" என்று கூறுகிறார் ஆனந்த மகாதேவன்.

"நான் நோட்ஸை ஊக்குவிப்பதில்லை. எங்களோட கடமை பாடம் நடத்துவது. அதை ஒழுங்கா செய்யறேன். ஆனாலும் மாணவர்கள் நோட்ஸ் வாங்குவதை நான் தடுப்பதில்லை" என்கிறார் ஒன்பதாம் வகுப்பு ஆசிரியை சசிகலா.

பத்தாம் வகுப்பு ஆசிரியர் இராமச்சந்திரன் "இன்னிக்கு எப்படி மார்க் வாங்கலாம், எந்தத் துறையிலே நுழையலாம்னு தான் மாணவர்களும் பெற்றோர்களும் நினைக்கிறாங்க. அப்படி இருக்கும்போது மாணவர்கள் நோட்ஸை நாடுவதில் வியப்பில்லை" என்கிறார்.

நோட்ஸை பற்றி ஆதரித்து, எதிர்த்துப் பேசினாலும் இன்று நோட்ஸ் எல்லா இடங்களிலும் பரவி இருப்பது உண்மை.

சில இடங்களில் போதிய ஆசிரியர்கள் இல்லாமல் மாணவர்கள் நோட்ஸை படித்துத் தேறுவது என்ற நிலை உள்ளது.

அதேபோல் சில இடங்களில் நோட்ஸ் இருப்பதால் பாடம் நடத்தாமல் நோட்ஸை உருப்போட்டு படிக்கச் சொல்கிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதனால் ஏற்கெனவே நம் பாடத் திட்டத்தின் மீது ஆர்வம் இல்லாத மாணவர்களுக்கு இன்னும் அதிகமான பாதிப்பையே ஏற்படுத்துகிறது.

மனப்பாடம் செய்து மார்க் வாங்குவதே மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களின் குறிக்கோளாக இருக்கிறது. இது நமது கல்வித்திட்டத்தினால் ஏற்பட்ட பாதிப்பே!

இன்றும்கூட பல பள்ளிக்கூடங்களில் பரிசோதனைக் கூடங்களுக்கான வசதி இல்லை. அப்படியே இருக்கும் பள்ளிகளில் பரிசோதனைக் கூடத்தைப் பூட்டியே வைத்திருக்கும் நிலை நீடிக்கிறது. இதனால் மாணவர்களுக்கு எதையும் செய்து பார்த்து, உணரக் கூடிய வாய்ப்புக் கிடைக்காமல் போகிறது.

'புத்தகத்தில், நோட்ஸில் என்ன இருக்கோ, அதையே படி. ஏன், எதுக்குன்னு? கேள்வி கேட்காதே' என்று பயமுறுத்தும்போது மாணவர்களின் கேள்வி கேட்கும் திறன் மழுங்கடிக்கப் படுகிறது. இதனால் ஆசிரியர்களிடம் மாணவர்கள் கேள்வி கேட்கவே அஞ்சுகிறார்கள்.

நம் நாட்டில் ஆசிரியர்தான் கேள்வி கேட்க வேண்டும், மாணவர் பதில் சொல்ல வேண்டும் என்ற நிலை உள்ளது. இது மாறி மாணவர்கள் ஆசிரியர்களிடம் கேள்வி கேட்டு, தங்கள் அறிவை விரிவாக்கிக் கொள்ளும் நிலை உருவாக வேண்டும்.

கணித பாடத்துக்கும் நோட்ஸ் இருப்பதால் சுயமாக யோசித்துச் செய்யாமல் நோட்ஸைப் பார்த்து காப்பி அடிக்கக் கூடிய நிலையில் இருக்கும் மாணவர்கள் பரீட்சையில் திண்டாடுகிறார்கள்.

இது அவசர உலகம். எல்லாமே ரெடிமேடாக, இன்ஸ்டன்டாக கிடைக்கிறது. இதில் ஆசிரியர்களையோ, மாணவர்களையோ குறை சொல்லி பயனில்லை. சமுதாயமே மாற வேண்டும். மாணவர்கள் விரும்பும் வகையில் கல்வித் திட்டத்தில் கண்டிப்பாக மாற்றம் வேண்டும்.

அட்டையில்: **சரிகா**

வண்ணப்படம்: **ஸ்ரீஹரி**

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.


FORM IV

1. Place of Publication : Chennai
2. Periodicity of Publication : Monthly
3. Name of Printer : K. Rajendran
   Nationality : Indian
   Address : 1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
4. Name of Publisher : K. Rajendran
   Nationality : Indian
   Address : 1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
5. Name of Editor : K. Rajendran
   Nationality : Indian
   Address : 1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.1999

K. Rajendran
Publisher



◆ குழந்தைகள் அறிவியல் மாநாட்டுச் செய்திகளைப் படித்ததும் மகிழ்ந்து போனேன். ஏனென்றால் எங்கள் பள்ளியில் நானும் இன்னும் சில மாணவிகளும் ஆய்வு செய்திருந்தோம். ஆனால் தேசிய அளவில் நடந்த போட்டிக்குத் தேர்வு செய்யப்பட வில்லை. கோகுலத்தால் இந்த மாநாட்டை நேரில் பார்க்காத குறை தீர்ந்தது.

– கே. மோனிகா, சேலம்.

◆ 'அழகனும் இரைப்பையும்' என்ற கதையைப் படித்த பின்தான் என் இரைப் பையின் குரலே எனக்குக் கேட்டது. நானும் உணவில் அதிகம் நாட்டமில்லாமல்தான் இருந்தேன். அல்சர் பயத்தால் இப்போது ஓரளவு சாப்பிடு கிறேன்.

– வெ. கௌதம், எட்டாம் வகுப்பு, சீர்காழி.

◆ மஞ்சு விரட்டின்போது, காளை மாட்டிடம் சிவப்புத் துணியைக் காட்டினால் மிரளும் என்று இத்தனை நாளும் நம்பியிருந்தேன். எனக்கு உண்மையை தெளிவுபடுத்தியதோடு பல சுவையான செய்திகளைத் தந்திருந்தார் மோகனா.

– ஈ. நான்சி, பத்தாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, மதுரை.

◆ சென்ற மாதம் நான் சில படைப்பு களை கோகுலத்திற்கு அனுப்பி வைத்தேன். தாங்கள் வெளியிடாததற்கு காரணம் என்ன? நான் இதனை எப்படி எதிர்பார்த்தேன் என்று உங்களிடம் விளக்க முடியாது. அவ் வளவு ஆர்வத்தோடு எதிர்பார்த்தேன்! காரணத்தை விளக்குங்கள்.

– மயில்வாகனன், மதுரை.

(மயில்வாகனன். உங்களைப் போல ஆயிரக்கணக்கான வாசகர்கள் தங்கள் படைப்புகளை அனுப்புகிறார்கள். அத்தனை பேருடனும் கடிதத் தொடர்பு கொள்வது சாத்தியமில்லை. பிர சுரத்துக்கு ஏற்கப்பட்டால் கால தாமதமானாலும் பிரசுரமாகும். ஏற்கப்படாததைத் திரும்பப் பெற போதிய தபால் தலைகளை உங்கள் படைப்புடன் இணைத்து அனுப்ப வேண்டும். – ஆர்.)

◆ பறவைகள் பலவிதம், பூமியில் ஒரு வானவில் போன்ற வண்ணப்படங்கள் அசத் தல். இப்பொழுதெல்லாம் கோகுலத்தில் வண்ணப்படங்கள் அதிகம் இடம் பெறுவது குறித்து மகிழ்ச்சி.

– வீ. வானதி, ஏழாம் வகுப்பு, செங்கல்பட்டு.

◆ மாதவனின் செய்கையைக் கண்டு அவன் அப்பா, அம்மா மட்டுமல்ல, நாங் களும் திகிலடைந்து இருக்கிறோம்.

– எஸ். பிரவீன், கல்பாக்கம்.

◆ 'விளையாட்டு நாயகர்கள் - 1998' அருமை யான தொகுப்பு. ஒரு வருடத்தின் அத்தனை முக்கிய செய்திகளும் இடம் பெற்றிருந்தன.

– பவுல்ராஜ், ஈரோடு.

என் இரைப்பையின் குரல் கேட்டது!

◆ நிறைய வீட்டில் பெரிய குழந்தை, தனக்கு அடுத்துப் பிறக்கும் தம்பியையோ, தங்கையையோ ஒரு எதிரியாகவே நினைக் கின்றது. இதற்குப் பெரிய குழந்தை மட்டும் பொறுப்பல்ல, வீட்டுச் சூழ்நிலையும் தான்! பெரிய கருத்தை மூன்று பக்க படக்கதையில் அழகாகக் காட்டியிருக்கிறீர்கள்.

– ருக்மணி மோகன், ஆசிரியை, மன்னார்குடி.


◆ மனதை ஒருமுகப்படுத்தி எந்தக் காரி யத்தைச் செய்தாலும் வெற்றி நிச்சயம் என் பதை உணர்த்தியது 'கண்ணாடி காட்டிய ரகசியம்' நாடகம்.

– சந்திரா, போரூர், சென்னை.

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623 ;
Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

பிருந்தாவனம்

தோட்டத்தில் பறக்கும் பட்டாம்
பூச்சிகளின் எண்ணிக்கை எத்தனை?








வண்ணம் தீட்டுங்கள்!

''டெய்லர் விரும்பும் காய் எது?''
'' 'கத்திரி'க்காய்தான்!''
– ஜே. வி. அமைதி விரும்பி





Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/99 • Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 • Registered as a Newspaper in Srilanka